# அறிமுகம்.

பௌத்த மத அலுவல்கள் திணைக்களமானது பிரதானமாக சம்புத்த சாசனத்தின் நிலையிறுதியின் பொருட்டும் சமயப் பண்புகளைப் பேணும் பௌத்த சமூகமொன்றை கட்டியெழுப்புவதற்கு காலத்தின் தேவைக்கேற்ப கருத்திட்டங்கள் பலவற்றை செயற்படுத்துவதுடன் 1931 இல் 19 ஆம் இலக்க விகாரைகள் அறக்கட்டளை நிலையங்களுக்கான கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் பௌத்த மத அலுவல்கள் ஆணையாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்களான பௌத்த வழிபாட்டுத் தலங்களையும் உடமைகளையும் சம்புத்தசாசனத்தின் நிலையுறுதிக்கு வேண்டி ஈடுபடுத்துவதற்கு தேவையான நிர்வாக




ரீதியிலான ஒத்துழைப்புக்களை பெற்றுக்கொடுத்தல் விகாரைகளை அபிவிருத்தி செய்தல் அறநெறிப் பாடசாலைகளில் கல்வித்தரத்தை மேம்படுத்தல் மற்றும் நாட்டின் அனைத்து சாமனேர, உபசம்பதா பிக்குமார்களைப் பதிவு செய்து தகவல்களைப் பாதுகாத்தல் போன்றன மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இப்பணிகளை நிறைவேற்றுவதன் பொருட்டு பௌத்தமத அலுவல்கள் திணைக்களத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகள் காணப்படுவதுடன் அவற்றுக்கான பொறுப்புக்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.
விகாரைகள் மற்றும் அறக்கட்டளை நிலையங்கள் தொடர்பான கட்டளைச் சட்டத்திற்கமைய தூர இடங்களில் வாசம் செய்யும் பிக்குமார்களுக்கு தமது தேவைகளை இலகுவாக பூர்த்திசெய்து கொள்ளும் பொருட்டு கண்டியிலும் இரத்தினபுரியிலும் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகங்கள் நிறுவப்பட்டு இயங்கி வருகின்றன.சம்புத்த சாசனத்தின் நிலையிறுதி மேன்மை மற்றும் மேம்பாட்டின் பொருட்டு பிரதானமாக கீழே காட்டப்பட்டுள்ள செயற்பாடுகள் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அறநெறிப் பாடசாலைகள் பிரிவினால் கீழே குறிப்பிடப்பட்ட பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- சாசனப் பாதுகாப்பு சபையின் நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.
- அறநெறிப் பாடசாலைகள் தொடர்பான பணிகள்
- அறநெறிப் பாடசாலைகளுக்கான நூல்களை அச்சிட்டு விநியோகித்தல்
- அகில இலங்கை ரீதியில் அறநெறிப் பாடசாலைகளுக்கான பரீட்சைகளை நடாத்துதல்.
- அறநெறிப் பாடசாலை மாணவர்களின் ஆற்றல்களை கணிப்பீடு செய்யும் நிகழ்ச்சித்திட்டங்களை பிரதேச மட்டம், மாவட்ட மட்டம் மற்றும் அகில இலங்கை ரீதியில் நடாத்துதல்
- அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களின் கல்வித்தரத்தை மேம்படுத்துவதன் பொருட்டு அவர்களுக்கு சான்றிதழ்களை வழங்குவற்கான பரீட்சைகளை நடாத்துதல்.
- அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான சீருடைகளை வழங்குதல்.
- அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான நூலகக் கொடுப்பனவுகளை வழங்குதல்.
- அறநெறிப் பாடசாலை ஆசிரியருக்கான அடையாள அட்டைகளை வழங்குதல்.
- அறநெறிப் பாடசாலை ஆசிரியருக்கான பயிற்சிகளை வழங்குதல்.
- அறநெறிப் பாடசாலைக் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கான நிதியுதவிகளை வழங்குதல்.
- வசதி குறைந்த அறநெறிப் பாடசாலைகளுக்கான உபகரணங்களை பெற்றுக்கொடுத்தல்.
- நீண்ட காலமாக தொடர்ந்து அறநெறிப் பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் சேவையை பாராட்டி சான்றிதழ்களை வழங்குதல்.
- அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களின் மொழி அறிவை மேம்படுத்துவதன் பொருட்டு பாளி மொழி மேம்பாட்டு வகுப்புக்களை நடாத்துவதுடன் பரீட்சைகளையும் நடாத்துதல்.

- v கல்வித் தகைமை குறைந்த அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களின் கல்வித் தகைமைகளை மேம்படுத்தும் பொருட்டு ஜயவர்த்தன பல்கலைக்கழகத்துடனும் பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகத்துடன் இணைந்து தஹம் சரசவிய நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்துதல்.

செயற்படுத்துதல்

அத்துடன் நிறுவனத்தின் நோக்கத்தை அடைவதன் பொருட்டு தொடர்புகளை பேணுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் தொடர்பான நிர்வாகப்பணிகள் அலுவலகப்பணிகள் கட்டிட பரிபாலனம் தபால் சேவைகள் மற்றும் வாகனங்கள் தொடர்பான பணிகளை நிறைவேற்றுதல்.நிறுவனத்தின் செலவுகளைக் கட்டுப்படுத்தி வரவு செலவுத்திட்டத்தினூடாக வழங்கப்படும் நிதியை உரிய பணிகளின் பொருட்டு செலவு செய்வது அது தொடர்பான செலவு விபரங்களை சமர்பித்தல் சம்பளக் கொடுப்பனவு போன்ற நிதிக் கணக்குகளை மேற்கொள்ளுதல்.விகாரைகள் அறக்கட்டளை நிலையங்கள் தொடர்பான கட்டளைச் சட்டத்தின் 4(1) அத்தியாயத்திற்கமைய பௌத்த மத அலுவல்கள் ஆணையாளர் நாயகத்தின் கீழ் இயங்கும் பௌத்த வழிபாட்டுத் தலங்களுக்கான பஸ்நாயக்க நிலமேக்கள் / பொறுப்பாளர்களை நியமித்தல் மற்றும் அவர்களின் பரிபாலனத்தை மேற்பார்வை செய்தல்.பௌத்தசமய வழிபாட்டுத் தலங்களுக்குச் சொந்தமான சொத்துக்களின் பரிபாலனத்திற்கு தேவையான உதவிகளை வழஙகுதல். (இதன் போது இவ்வழிபாட்டுத் தலங்களுக்குச் சொந்தமான காணிகளை நீண்ட கால அடிப்படையில் குத்தகைக்கு வழங்குவதன் மூலமாக வருமானத்தைப் பெற்றுக்கொள்வதற்கு தேவையான அனுமதியை பெற்றுக்கொடுத்தல் மற்றும் அசையா சொத்துக்களை பாதுகாப்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்தல் வழிபாட்டுத் தலங்களின் சொத்துக்கள் தொடர்பான பிரச்சனைகளை தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்றவையாகும்). நாட்டிலுள்ள அனைத்து விகாரைகளையும் பௌத்த மத அலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்தல் மற்றும் விகாரைகளின் தலைமைப் பிக்குமார்களின் பதவிகளை ஏற்றுக்கொள்ளல். பிக்குமார்களின் சாமனேர மற்றும் உபசம்பதா பதிவுகளை மேற்கொள்ளுதல். விகாரைகளுக்கு சொந்தமான சொத்துக்கள் மற்றும் வங்கிக் கணக்குகளில் உள்ள பணம் தொடர்பான பணிகள் போன்றவற்றை செயற்படுத்துதல்.

மேலும் அபிவிருத்திப் பிரிவினல் சாசன மேம்பாட்டின் பொருட்டு

விகாரைகளுக்கான நிதியுதவி, சிவுபசவுக்கான நிதியுதவி வசதி குறைந்த விகாரைகளுக்கான நிதியுதவிகளை வழங்குதல்.பிரதேச சாசனப் பாதுகாப்புச் சபைகளை நிறுவுவது தொடர்பான பணிகள். பிக்குமார்களின் ஈமைச் சடங்குகளுக்கு தேவையான நிதியுதவிகளை வழங்குதல். பிக்குமார்களுக்க அடைளாள அட்டைகளை வழங்குதல், சுதந்திர தினம், வெசாக் மற்றும் பொசொன் உற்சவங்களை கொண்டாடுவதற்கு தேவையான பணிகளை மேற்கொள்ளுதல். விகாரைகளின் செயற்குழு சங்கங்களைப் பதிவு செய்தல். விகாரைகளுக்கு சலுகை அடிப்படையில் தொலைபேசி வசதி, நீர் விநியோகம், மின்சார வசதி போன்றவற்றை பெற்றுக் கொடுப்பதற்கு தேவையான சிபாரிசினை வழங்குதல். நிக்காயகள் மற்றும் நிக்காய பிரிவுகள் தொடர்பான பணிகள். பிள்ளைகளை துறவறத்தில் இணைத்துக் கொள்வதும் உபசம்பதா சடங்குகளை நடாத்துவதும். நிக்காயத் தலைமையகங்கள் தொடர்பான கொடுப்பனவுகள். (சாரதி / தொழிலாளர்கள்), பௌத்த எழுத்தாளர்களின் நூல்களைக் கொள்வனவு செய்தல். ஆராமைகளைப் பதிவு செய்தல். கல்வி நிலையங்கள் தொடர்பான பணிகள், கூட்டங்கள் தொடர்பான பணிகள் மற்றும் சங்கமித்தா ஞாபகர்த்த விழா

மேலே குறிப்பிடப்பட்ட பணிகளுக்கு மேலதிகமாக வருடாந்தம் நடாத்தப்படும் தேசிய சுகந்திரதின விழாஇ அரச வெசாக் உற்சவம், வருடாந்தம் இடம்பெறும் மாணவர்களுக்கான பிரதேச, மாவட்ட, அகில இலங்கை ரீதியிலான ஆற்றல் கணிப்பீடு போட்டிகள் சங்கமித்தா பெரஹரா மற்றும் சங்கமித்தா ஞாபகர்த்த விழா போன்றவற்றை பௌத்த மத அலுவல்கள் திணைக்களத்தினால் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்ற விசேட நிகழ்ச்சித் திட்டங்களாகக் குறிப்பிட முடியும்.

# செயலாற்றுகை அறிக்கை
# 2019

## தொலை நோக்கு

பௌத்த கலாசார பண்புகளைப் பேணுகின்ற ஒழுக்க மேம்பாடுடையதோர் சமூகம் ......

## பணிக்கூற்று

சம்புத்த சாசனத்தின் நிலையுறுதி வளர்ச்சி மற்றும் செயற்பாடுகளை சிறப்பாக ஒழுங்குபடுத்துவதன் மூலமாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பௌத்த மக்களிடையே புத்துணர்ச்சியை ஏற்படுத்தும் ஒழுக்க மேம்பாடுடைய சமூகமொன்றை தோற்றுவித்து முன்மாதிரியானதொரு பௌத்த சமூகத்தை தோற்றுவித்தல்.

## நோக்கம்

- தேரவாத பௌத்த தர்மத்தை பாதுகாத்தல் போஷித்தல் மற்றும் பரப்புதல்
- பௌத்த தர்ம உடமைகளை பாதுகாத்தல் பராமரித்தல் மற்றும் அவற்றை பௌத்தசாசனத்தின் வளர்ச்சிக்கு வேண்டி ஈடுபடுத்தல்
- பௌத்த கலாசாரத்தை போற்றிப் பின்பற்றும் முன்மாதிரியானதொரு சமூகத்தை தோற்றுவித்தல்
- பண்டு தொட்டு பௌத்தசாசனத்துடன் தொடர்புடைய விடயங்களையும் கருத்துகளையும் காலத்தின் தேவைக்கேறப் பயன்படுத்துதல் போஷித்தல் மற்றும் வளர்த்தல்.
- பௌத்த இலக்கியம் மற்றும் கலைகளை பாதுகாத்தலும் போஷித்தலும் வளர்த்தலும்.
- நவீன தொழிநுட்ப யுகத்திற்கு ஏற்ற வகையில் பௌத்த தர்மத்துடன் இணைந்ததான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் வகையில் பௌத்த மக்களை ஒழுங்கு செய்து வழிநடாத்துதல்.

## பௌத்த மத ஆணையாளர் நாயகம் அவர்களின் செய்தி



இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பிற்கு அமைய புத்தசாசனத்தைப் பாதுகாத்தல், போஷித்தல், பிரசாரம் செய்தல் மற்றும் விருத்தி செய்தல் என்னும் பாரிய அரச கடமையானது புத்தசாசன அமைச்சின் கீழ் இயங்கும் பௌத்த மத அலுவல்கள் திணைக்களத்திடம் வழங்கப்பட்டுள்ளது. இப்பாரிய பொறுப்பினை நிறைவேற்றும் பொருட்டு அனைத்து சந்தர்ப்பங்களிலும் சிறந்த தொலை நோக்குப் பார்வையுடன் பௌத்த மத அலுவல்கள் திணைக்களமானது செயற்படுவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

எமது தொலைநோக்கானது பௌத்த பண்பாட்டினைப் பேணும் சமூகமொன்றைக் கட்டியெழுப்புவதாகும். இந்நோக்கத்தை அடையும் பொருட்டு பலதரப்பட்ட பணிகளும், நிகழ்ச்சித் திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. ஒரு நாடு அபிவிருத்தியடையும் போது சமூக, பொருளாதார மற்றும் பௌதீக வளர்ச்சிக்கு ஏற்ப நாட்டு மக்களிடையே நற்பண்புகள் விருத்தியடையாவிடின் பூரண அபிவிருத்தியை எதிர்பார்க்க முடியாது. எனவே இத்திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

இந்த நற்பண்புகளை மேம்படுத்துவதன் பொருட்டு கிராமத்திற்கும், விகாரைக்கும் இடையேயான உறவை பலப்படுத்துவதன் மூலம் அறநெறிக் கல்வியை மேம்படுத்துதல், மதுபானம் மற்றும் புகைப்பழக்கத்தை இல்லாதொழித்தல், ஒழுக்க மேம்பாட்டுடன் பௌத்த அறக் கல்வியினை போதிப்பதன் பொருட்டு அர்ப்பணிப்புடன் செயற்படுவது எமது பிரதான பணியாகும்.

விகாரைகள், அறக்கட்டளை நிலையங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அன்றாட பணிகளை தாமதமின்றி நிறைவேற்றுதல், அறநெறிப்பாடசாலைகள் அபிவிருத்தி, கருத்திட்ட, தகவல், நிர்வாகம், கணக்கியல், உள்ளகக் கணக்காய்வு மற்றும் பிக்குமார்களை பதிவு செய்தல் போன்ற பிரிவுகளின் செயற்பாடுகளை மிகவும் திறமையாகவும், பயனுள்ளதாகவும், மிகவும் சிறந்த முறையில் நிறைவேற்றுவதன் பொருட்டு அர்ப்பணிப்புடன் செயலாற்றிய பிரிவுப் பொறுப்பாளர்கள் மற்றும் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**சுனந்த காரியப்பெரும**
பௌத்த மத அலுவல்கள் ஆணையாளர் நாயகம்.

# பொருளடக்கம்

அறிமுகம்

பார்வை, பணி அறிக்கை மற்றும் நோக்கங்கள்

புத்த விவகார ஆணையர் ஜெனரலின் செய்தி

01) **நிர்வாகப் பிரிவு**

01.1 தனிப்பட்ட கோவைகன் தொடர்பான பணிகள்
01.2 போக்குவரத்து பணிகள்
01.3 தாபனப் பணிகள்
01.4 2019 இல் நிரவாகப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட விசேட பணிகள்

02) **விகாரைகள் அறக்கட்டளை நிலையங்கள் பிரிவு**

**02.1.** விகாரைகள் அறக்கட்டளை நிலையங்கள் பிரிவின் பிரதான பணிகள்

02.1.1 விகாரைகளைப் பதிவு செய்தல்
02.1.2 விகாராதிபதி பதவிகளை ஏற்றுக்கொள்ளல்
02.1.3 விகாரைகள் அறக்கட்டளை நிலையங்கள் கட்டளைச் சட்டத்தின் 4(1) அத்தியாயத்திற்கமைய நிர்வகிக்கப்படும் விகாரைகள் மற்றும. அறக்கட்டளை நிலையங்களின் பொறுப்பாளர்களை நியமித்தல் மற்றும் ஸ்ரீ தலதா மாளிகையின் தியவடன நிலமே அடங்கலான பஸ்நாயக்க நிலமேக்களை நியமித்தல்.
02.1.4 விகாரைகள் அறக்கட்டளை நிலையங்கள் கட்டளைச் சட்டத்தின் 4(1) அத்தியாயத்திற்கமைய நிர்வகிக்கப்படும் விகாரைகள் மற்றும. அறக்கட்டளை நிலையங்களின் உத்தேச வரவு செலவுத்திட்ட அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் உடமைகளை ஆவணப்படுத்தல், அவற்றின் செயற்பாடுகன் பற்றிய கணக்காய்வுகளை மேற்கொள்ளுதல்.
02.1.5 விகாரைகள் அறக்கட்டளை நிலையங்கள் கட்டளைச் சட்டத்தின் 4(1) அத்தியாயத்திற்கமைய நிர்வகிக்கப்படும் விகாரைகள் மற்றும. அறக்கட்டளை நிலையங்களின் உண்டியல் வருமானங்களைவ ங்கியில் வைப்புச் செய்யும் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல்.
02.1.6 விகாரைகள் மற்றும் தேவஸ்தானங்களுக்கு சொந்தமான காணிகளை குத்தகைக்கு வழங்குதல்
02.1.7 பௌத்த மத ஆணையாளர் நாயகத்திற்கு பதிலாக நீதிமன்றில் சாட்சியமளித்தல்.

02.2. ஏனைய பணிகள்
02.3. செயலாற்றுகை விபரங்கள்
02.4. எதிர்கால இலக்குகள்
02.5. விசேட வெற்றிகள் / சவால்கள்
02.6. விகாராதிபதி பதவிகளை பெற்றுக்கொடுத்தல் / கடிதங்களைப் பெற்றுக்கொள்ளல்
02.7. விகாராதிபதி பதவிகள் தொடர்பில் மகாநாயக்க தேரர்களினூடாக உறுதிப்படுத்தல்களை மேற்கொள்ளல்.
02.8. புதிய வழிபாட்டுத் தலங்கள் தொடர்பான அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ளல்.
02.9. புதிய வழிபாட்டுத் தலங்கள் தொடர்பில் புத்தசாசன அமைச்சிற்கு தகவல்களைப் பெற்றுக்கொடுத்தல்

02.10. வழிபாட்டுத் தலங்களுக்கு சொந்தமான காணிகளை குத்தகைக்கு வழங்குதல்.
02.11. முன்னேற்றம்.

**03. அறநெறிப் பாடசாலைகள் பிரிவு**

03.1. அறநெறிப் பாடசாலைகளை பதிவு செய்தல்
03.2. அறநெறிப் பாடசாலைகளுக்கான பரீட்சை நடாத்துதல்.
03.3. அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் தகவல்களை சேகரித்தல் மற்றும் அவற்றை தரவேற்றம் செய்தல்.
03.4. 124ஆவது அறநெறிப பாடசாலை தினத்தை கொண்டாடுதல்.
03.5. ஆசிரியர்களுக்கான சீருடை மற்றும் கொடுப்பனவுகளை வழங்குதல்.
03.6. அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கு சான்றிதழ்கள் வழங்குவதற்கான பரீட்சைகளை நடாத்துதல்.
03.7. அறநெறிப் பாடசாலை மாணவர்களின் ஆற்றல்களை கணிப்பீடுகளை செய்தல்.
03.8. அறநெறிப் பாடசாலைகளுக்கான நூல்களை அச்சிடுதல்.
03.9. புத்த ஜயந்தி நூலகம்

**04. அபிவிருத்திப் பிரிவு**

04.1.1 பிக்குணிமார்கள் தொடர்பான பணிகள்

04.1.2 பிக்குணிமார்களுக்கான கல்வி நிலையங்களை அபிவிருத்தி செய்தல்
04.1.3 சில் மாதாக்களை பதிவு செய்தல் மற்றும் அடையாள அட்டைகளை வழங்குதல்
04.1.4 பிக்குணி ஆராமைகளைப் பதிவு செய்தல்
04.1.5 தேசிய சில்மாதா சங்கம்

04.2 கலைஞர்களையும் பௌத்த அறிஞர்களையும் கௌரவித்தல்.
04.3 அறநெறிப் பாடசாலைகளுக்கான வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல்
04.3.1 அறநெறிப் பாடசதலை கட்டிட உபகரணங்களுக்கான நிதியுதவி
04.4. விகாரைகளின் நிர்வாக சபைகள், செயற்குழுக்கள் மற்றும் சாசனப் பாதுகாப்பு சபைகளை பதிவு செய்தல்.
04.5. சாசனப் பாதுகாப்புச் சபைகளின் செயற்பாடுகளை ஊக்குவித்தல்
04.5.1. சாசனப் பாதுகாப்புச் சபைகளுக்கான வசதிகளை வழங்குதல்
4.5.2 சாசனப் பாதுகாப்புச் சபை செலவுகள்

**04.6 தேசிய உற்சவங்களை ஒழுங்கு செய்தல்**

04.6.1. தேசிய சுதந்திர தின பிரித் போதனை வைபவம்
04.6.2. தேசிய சுதந்திர தின சமய நிகழ்வுகள்
04.6.3. தேசிய வெசாக் உற்சவம்
04.6.4 மகாநாயக்க தேரர்களுக்கான பத்திரங்களை கையளித்தல்.
04.5.5 சங்கமித்தா ஞாபகார்த்த உற்சவம்
04.6.6 பிக்குணிமார்களின் தேசிய மகாநாடு
04.7 உபசம்பதா உற்சவங்களை ஒழுங்கு செய்தல்
04.8 பிக்குமார்களின் ஈமைச் சடங்குகளுக்கான செலவுகளை மேற்கொள்ளுதல்
04.9 சலுகைக் கட்டண அடிப்படையில் விகாரைகளுக்கு தொலைபேசி, மின்சாரம், நீர் வசதியினைப் பெற்றுக்கொடுத்தல்.
04.10. பல்வேறு கொடுப்பனவுகள்

**05. கருத்திட்டப் பிரிவு**

05.1 அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கருத்திட்டம்

05.1.1 எதிர்கால சவால்கள்
05.2 அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கான அடையா அட்டைகளைத் தயாரித்தல்.
05.2.1 விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளுதல்.
05.2.2 தேவையான தகவல்கள்
05.2.3 திணைக்களத்திற்கு கிடைக்கப்பெற்றதன் பின்னர் பணியாற்றும் முறை.
05.2.4 அடையாள அட்டைகளைப் புதுப்பித்தல்
05.2.5 அடையாள அட்டை தொலைந்த சந்தர்ப்பமொன்றில் புதிய அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ளல்
05.2.6 பிரச்சினைகள்
05.3 தஹம் சரசவிய புத்த தர்ம டிப்ளோமா கற்கை நெறி
05.4 பௌத்த கலைக்களஞ்சியம்
05.5 சமாதான நீதவான் பதவிகளைப் பெற்றுக்கொடுத்தல்
05.6 பிக்குமார்களின் பெற்றோருக்கு(புதுபுத் மாபிய உபகார) வீடுகளை நிர்மாணிக்கும் நிகழ்ச்சித்திட்டம்

**06. பிக்குமார்களைப் பதிவு செய்யும் பிரிவு**

06.1. சாமனேர உபசம்பதா சான்றிதழ்களை விநியோகித்தல் மற்றும் பிக்குமார்களுக்கான அடையாள அட்டைகளை விநியோகித்தல்
06.1.1. 2019.01.01 தொடக்கம் 2019.12.31 வரை மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கான செயலாற்றுகை அறிக்கை
06.1.2. விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்
06.2. சாமனேர, உபசம்பதா பற்றிய ஆவணங்களை கணனிமயப்படுத்தல்.
06.2.1. விசேட வெற்றிகள்.
06.2.2. எதிர்கால இலக்கு-
06.2.3. புதிய சாமனேர, உபசம்பதா பிக்குமார்களின் சிந்தனை திறனை மேம்படுத்தும் வகையிலான பயிற்சி நிகழ்வுகளை நடாத்துதல்.
06.3. அறிமுகம்

06.3.2. இலக்கு

06.2.3.3. உபசம்பதா பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

06.2.3.4. 2020 மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் பணிகள் தொடர்பாக முன்மொழியப்பட்டவை

07. நிதிப் பிரிவு

07.1 2019 டிசம்பர் 31ஆம் திகதியுடன் பூர்த்தியடைந்த வருடத்திற்கான நிதி செயலாற்றுகை அறிக்கை

07.2. 2019 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிதி நிலைமை பற்றிய அறிக்கை

**07.3.** 2019 டிசம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைந்த நிதி நிலைமை பற்றிய அறிக்கை

நிதி பெற்றுக்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் விபரம் **08.**

**தகவல் பிரிவு**

08.1. தகவல் அறியும் உரிமை தொடர்பான கட்டளைச்சட்டம்

08.2 தகவல் கட்டமைப்பையும் இணையத்தளத்தையும் தரவேற்றம் செய்தல்.

08.3. விகாரைகள் பற்றிய தகவல்களை தரவேற்றம் செய்தல்

08.4 பாளி மொழி மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்

08.5 பிக்குமார்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

08.6 ஊடக செயற்பாடுகள்

08.7 பத்திரிகை செய்திகள்

**09. உள்ளக கணக்காய்வுப் பிரிவு**

09.1. இலக்கு

09.2. உள்ளக கணக்காயவு பிரிவினால் மேற்கொள்ளப்படும் விசேட பணிகள்

09.3. உள்ளக கணக்காயவு பிரிவினால் கணக்காய்வு செய்யப்படும் விகாரைகள் மற்றும் அறக்கட்டளை நிலையங்கள் பற்றிய விபரம்

10. பிராந்திய அலுவலகம் - இரத்தினபுரி

10.1. பிராந்திய அலுவலகம் - கண்டி

10.1.1. பிரதான பணிகள்

10.1.2. நிறுவனத்தின் செயலாற்றுகை அறிக்கை

10.1.3. எதிர்கால இலக்கு

10.1.4. விசேட சவால்கள்

10.1.5. முன்னேற்றம்

10.2. பிராந்திய அலுவலகம் - குருநாகல

11. அனுகூல அறிக்கை

12. கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

# நிர்வாகப் பிரிவு

திணைக்களத்தின் நிர்வாகப் பிரிவினால் மிகப் பாரிய அளவிலான செயற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டு வருவதுடன் அவற்றில் சில பிரதான பணிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

## 01.01. தனிப்பட்ட கோவைகள் தொடர்பான பணிகள்

திணைக்களத்தில் பணியாற்றும் அனைத்து அதிகாரிகளினதும் தனிப்பட்ட கோவைகளை பராமரித்தலும் அவை தொடர்பான பணிகள்

சம்பள உயர்வுகளைப் பெற்றுக்கொடுத்தல்.

உத்தியோகத்தர்கள் உடைமைக் கடன்களைப் பெற்றுக்கொள்வதற்கு தேவையான சிபாரிசுகளைப் பெற்றுக்கொடுத்தல்

உத்தியோகத்தர்களை ஓய்வூதியத்திட்டத்தில் பதிவு செய்தல்.

## 01.02. போக்குவரத்துப் பணிகள்

வாகனங்களை பழுது பார்த்தல் தொடர்பான பணிகள்.

வாகனங்களைப் பராமரித்தல் மற்றும் அவை தொடர்பான அனைத்து விடயங்களும்.

வாகனங்களின் காப்புறுதி தொடர்பான பணிகள்.

வாகனங்களின் போக்குவரத்து தொடர்பான பதிவேடுகளை பரிசீலனை செய்தல்.

வருமானச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளுதல்

வாகனங்களுக்கான எரிபொருளைப் பெற்றுக்கொடுத்தல்

## 01.03. வாகனங்களுக்கான எரிபொருனைப் பெற்றுக்கொடுத்தல்

திணைக்களத்தின் பொருட்டு புதிய பதவிகளை ஏற்படுத்துதல்

உத்தியோகத்தர்களின் அன்றாட வருகை மற்றும் வெளியேற்றம் பற்றி பரிசீலனை செய்தல்.

உத்தியோகத்தர்களின் விடுமுறை தொடர்பான பணிகள்.

புகையிரத பயணச்சீட்டுக்களை விநியோகித்தல்.

மேலதிக வேலை நேரக் கொடுப்பனவு போக்குவரத்து செலவுகளுக்கான கொடுப்பனவு போன்றவற்றுக்கான வவுச்சர்களை பெற்றுக்கொள்வதும் அனுமதிகளை வழங்குவதும்.

போக்கவரத்து செலவுகளுக்குரிய வவுச்சர்களை பெற்றுக்கொள்வதும் அனுமதிகளை வழங்குவதும்.

உத்தியோகத்தர்களின் வெளிநாட்டு பிரயாணங்களின் போது அவர்களின் விடுமுறை தொடர்பான பணிகள்.

பெண் உத்தியோகத்தர்களின் பிரசவ கால விடுமுறை தொடர்பான பணிகள்.

அபிவிருத்தி உத்தியோகத்தர்ளை சேவையில் இணைத்துக் கொண்டதன் பின்னர் உரிய காலத்தில் அவர்களது சேவையை நிரந்தரமாக்குதல்.

பௌத்த கலைக்களஞ்சியத்தின் உப எழுத்தாளர் பதவிக்கான பதவி உயர்வு விதிமுறையொன்றை தய-ாரித்தல்.

கனிஷ்ட சேவை உத்தியோகத்தர்களுக்கான சேவை வினைத்திற்ன பரீட்சைகளை நடாத்துதல்.

கனணி, தட்டச்சு இயந்திரம் தொடர்பான பணிகள்.

அலுவலகக் கடமைகளின் பொருட்டு வெளிநாடுகளுக்கு செல்லும் அதிரிகாரிகள் அங்கு தங்கியிருக்கும் காலத்திற்குரிய கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொடுத்தல்.

உத்தியோகத்தர்களைப் பயிற்றுவித்தல் மற்றும் கற்கைநெறிகளில் ஈடுபடுத்துதல்.

நீர், மின்சாரம், தொலைபேசி மற்றும் பத்திரிகைக் கட்டணங்களை செலுத்துதல் தொடர்பான அனைத்து பணிகளையும் மேற்கொள்ளுதல்.

தபால் விடயங்கள் தொடர்பான பணிகள்

திணைக்களத்தின் அதிகாரிகள் தொடர்பான அனைத்து நிர்வாகப் பணிகளும்

பதவிகளை அனுமதித்தல் இணைத்துக் கொள்ளல் விதிமுறைகளை தயாரித்தல் உத்தியோகத்தர்களின் இடமாற்றங்களை பூர்த்தி செய்தல் பராளுமன்ற அறிக்கைளை தயார் செய்தல் அமைச்சரவை பத்திரங்களை தயாரித்தல் போன்ற நிர்வாகப் பணிகள்

உத்தியோகத்தர்களின் ஒழுக்கம் சம்பந்தமான பணிகள்

அதிகாரிகள் வங்கிக் கடன்களை பெற்றுக் கொள்வதற்கான அனுமதியை வழங்குதல்.

உத்தியோகத்தர்களின் இடமாற்றம் அவற்றை நிரப்புதல் போன்ற பணிகள்

உத்தியோகத்தர்களுக்கான காப்புறுதி தொடர்பான பணிகள் (அக்ரகார)

நிர்வாகம் தொடர்பான பணிகளின் போது வேறு நிறுவனங்களுடன் இணைத்து பணியாற்றுதல்.

தொலைபேசி, கணனி, தொலைநகல் இயந்திரம் போன்றவற்றை பராமரித்தல்.

கட்டிடங்களை பராமரித்தல் மற்றும் புனரமைத்தல் (மகாநாயக்க சாரிக்காராமை, கண்டி பிராந்திய அலுவ-லகம், இரத்தினபுரி பிராந்திய அலுவலகம்)

தலைமை அதிகாரிகள், பிரிவுப் பிரதான அதிகாரிகளுக்கான கூட்டங்களை நடாத்துதல்.

மாவட்ட ரீதியில் கலாசார உத்திரோயகத்தர்களுக்கான கூட்டங்களை நடாத்துவது மற்றும் அது தொடர்பான பணிகள்.

பொது நிர்வாக அமைச்சின் சுற்று நிருபங்கள் மற்றும் ஏனைய அனைத்து சுற்று நிருபங்களை பின்பற்றுவதும் அவை தொடர்பான பணிகளை மேற்கொள்வதும்.

தேர்தல் கடமைகளின் போது உத்தியோகத்தர்களை ஈடுபடுதுவத தொடர்பான பணிகள்.

அலுவலக அடையாள அட்டைகளை தயாரித்தல்.

கனிஷ்ட சேவை உத்தியோகத்தர்களுக்கான சீருடைகளைப் பெற்றுக்கொடுத்தல்.

அலுவலக சாவிகளைப் பொறுப்பேற்றல் தொடர்பான பணிகள்.

அலுவலக உள்ளக இடமாற்றங்களை மேற்கொள்ளதல்.

திணைக்களத்தினால் நடாத்தப்படும் கூட்டங்கள் தொடர்பான நாளேட்டினை தயாரித்தல்.

**01.04. 2019 இல் நிர்வாகப் பிரிவனால் மேற்கொள்ளப்பட்ட விசேட பணிகள்.**

பொ.நி.சு. 03/2006 இற்கமைய திணைக்களத்திற் இணைத்துக் கொள்ளப்பட்ட அனைத்து உத்தியோகத்தர்களினதும் வேதனத்தை 2019.01.01 திகதிக்கும் 2020.01.01 திகதிக்கும் பரிவர்த்தனை(மாற்றம்) செய்தமை.

2019 இன் பொருட்டு அனைத்து மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களில் பணியாற்றும் பௌத்த சமய கலாசார உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உதவியாளர்களுக்கு இடமாற்றங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கான விண்ணப்பங்களை கோரியமை.

அரச பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சினால் இணைத்துக் கொள்ளப்பட்ட பௌத்த மத அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் நியமனம் வழங்கப்பட்ட பட்டதாரி பயிலுனர்களை பிரதேச செயலகங்களில் பணிக்கமர்த்தல்.

1999 மற்றும் 2005 இல் பட்டதாரிகளுக்கு தொழில் வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இத்திணைக்களத்திற்கு இணைத்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களை அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை வகுப்பினுள் உள்வாங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

திணைக்களத்தின் கீழ் பணியாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கனின் ஆக்கத்திறன் கணீப்பீட்டு பரீட்சை முடிவுகளை வெளியிடுதல்.

பௌத்த மத அலுவல்கள் கலாசார உத்தியோகத்தர்களுகான அலுவலகப் பையினை பெற்றுக்கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தியமை.

உள்ளக தொலைபேசி இணைப்புக்களை புதுப்பித்தமை.

சட்ட உத்தியோகத்தருக்கான அலுவலகத்தை இரண்டாம் மாடியில் நிறுவியமை.

இத்திணைக்களத்தின் கீழ் இயங்கும் பௌத்த கலைக் களஞ்சியத்தின் தொகுப்பு பணிகளின் பொருட்டு ஒப்பந்த அடிப்படையில் 03 எழுத்தாளர்களை இணைத்துக் கொள்வதன் பொருட்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியை பெற்றுக் கொள்ள முடிந்தது. இது தொடர்பான இணைத்துக் கொள்ளும் பணி-களை மேற்கொள்ளும் பொருட்டு விண்ணப்பங்களை கோரி வர்த்தமானியிலும் பிரதான பத்திரிகைகளிலும் விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டு தகுதியான நபர்களை சேவையில் இணைத்துக்கொள்ளல்.

திணைக்களத்திற்கு சொந்தமான வாகனங்கன் பற்றிய விபரம் கீழுள்ளவாறாகும்.

2019.12.31 இற்கு திணைக்களத்திற்கு சொந்தமான வாகனங்கள்

- Ø வான்கள் - 04
- Ø லொறிகள் - 02
- Ø கார்கள் - 04
- Ø கெப் வண்டிகள் - 03

திணைக்கள உத்தியோகத்தர்களுக்கான ஊழியர் சேமலாப ரன் மற்றும் ரிதீ யோசனைத் திட்டதில் பதிவு செய்வதற்கான பணிகளை மேற்கொள்ளல்.
மகாநாயக்க சாரிக்காராமையின் நிர்வாகப் பணிகள்.
திணைக்கள உத்தியோகத்தர்களுக்கான அனர்த்த நிவாரண கடன்களைப் பெற்றுக்கொடுத்தல்.
2018 இன் செயலாற்றுகை அறிக்கையினை மும்மொழிகளிலும் அச்சிட்டமை.

# Cadre Information as at 31th Of December 2019

| No | Designation | Salary Code | Service Category | Service Level | Grade/ Class | Approved Cadre | | | Number of Existing Officers | | | Number of Existing Vacancies |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Permanent | Contract | Acting | Permanent | Contract | Acting | |
| 01 | Commissioner General of Buddhist Affairs | SL 3-2016 | SLAS | Senior | Special | 1 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 |
| 02 | Additional Commissioner General of Buddhist Affairs | SL 3-2016 | SLAS | Senior | Special | 1 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 |
| 03 | Commissioner of Buddhist Affairs | SL 1-2016 | SLAS | Senior | I | 2 | 0 | 0 | 2 | 0 | 0 | 0 |
| 04 | Chief Accountant | SL 1-2016 | SLAS | Senior | I | 1 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 |
| 05 | Chief Internal Auditor | SL 1-2016 | SLAS | Senior | I | 1 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 |
| 06 | Deputy/ Assistant Commissioner | SL 1-2016 | SLAS | Senior | II/ III | 4 | 0 | 0 | 3 | 0 | 0 | 1 |
| 07 | Accountant | SL 1-2016 | SLAS | Senior | II/ III | 1 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 |
| 08 | Legal Officer | SL 1-2016 | Dept. | Senior | III | 1 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 |
| 09 | Chief Author | SL 1-2016 | Contract | Senior | | 0 | 1 | 0 | 0 | 1 | 0 | 0 |
| 10 | Sub Author | SL 1-2016 | Dept. | Senior | | 1 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 |
| 11 | Deputy Author/ Assistant Author | SL 1-2016 | Contract | Senior | | 0 | 2 | 0 | 0 | 2 | 0 | 0 |
| 12 | Administrative Officer | MN 7-2016 | PMAS | Tertiary | Supra | 1 | 0 | 0 | 0 | 1 | 0 | 0 |
| 13 | Project Officer | MN 4-2016 | Asso. Officers | Secondary | | 2 | 0 | 0 | 1 | 0 | 0 | 1 |
| 14 | Coordinator of Buddhist Affairs | MN 4-2016 | Asso. Officers | Secondary | | 434 | 0 | 0 | 378 | 0 | 0 | 56 |
| 15 | Development Assistant | MN 4-2016 | Asso. Officers | Secondary | | 38 | 0 | 0 | 24 | 0 | 0 | 14 |
| 16 | Account Assistant | MN 4-2016 | Asso. Officers | Secondary | | 1 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 |
| 17 | Assistant Legal Officer | MN 4-2016 | Asso. Officers | Secondary | | 1 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 |
| 18 | Development Officer | MN 4-2016 | DOS | Secondary | | 255 | 0 | 0 | 255 | 0 | 0 | 0 |
| 19 | Public Management Assistant | MN 2-2016 | PMAS | Secondary | I/ II/ III | 45 | 0 | 0 | 41 | 0 | 0 | 4 |
| 20 | Driver | PL 3-2016 | DS | Primary | | 12 | 0 | 0 | 12 | 0 | 0 | 0 |
| 21 | Bungalow Keeper | PL 2-2016 | Dept. | Primary | | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 1 |
| 22 | O.E.S Posts | PL 1-2016 | OES | Primary | I/ II/III | 20 | 0 | 0 | 19 | 0 | 0 | 1 |
| 23 | Lorry Helper | PL 1-2016 | Dept. | Primary | | 2 | 0 | 0 | 0 | 0 | 0 | 2 |
| 24 | Assistant Bungalow Keeper | PL 1-2016 | Dept. | Primary | | 1 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 |
| 25 | O.E.S Posts | PL 1-2016 | Dept. | Primary | | 1 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 |
| 26 | Assistant Bungalow Keeper Mahanayaka charikaramaya | PL 1-2016 | Dept. | Primary | | 1 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 |
| 27 | watcher (Mulatiyana) | PL 1-2016 | Dept. | Primary | | 1 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 |
| 28 | Attendent (Mulatiyana) | PL 1-2016 | Dept. | Primary | | 1 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 |
| 29 | Tripitaka Grantha Sampadaka Assistant | PL 1-2016 | Dept. | Primary | | 1 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 |
| | Total | | | | | **831** | **3** | **0** | **750** | **4** | **0** | **80** |

# Department of Buddhist Affairs
## Organization Chart



# 02. விகாரைகள் அறக்கட்டளை நிலையங்கள் பிரிவு

**2.1 விகாரைகள் அறக்கட்டளை நிலையங்கள் பிரிவின் பிரதான பணிகள்**

**2.1.1 விகாரைகளைப் பதிவு செய்தல்**

விகாரைகளைப் பதிவு செய்யும் போது திணைக்களத்தினால் விநியோகிக்கப்படுகின்ற விகாரை-களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பப்படிவத்தை பூர்த்திசெய்து விகாரையின் விகாராதி தேரரினால் உரிய பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் கலாசார / அபிவிருத்தி உத்தியோகத்தரினால், விகாரையைப் பதிவு செய்வது தொடர்பான அறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருப்பதுடன், குறித்த பிரதேச சாசனப் பாதுகாப்புச் சபையின் பதிவாளர் தேரர் மற்றும் தலைமைத் தேரர் ஆகியோரது சிபாரிகளைப் பெற்றுக்கொள்வது, விகாரை உரித்தாகும் நிக்காய பிரிவின் அதிவணக்கத்திற்குரிய மகாநாயக்க தேரர் அவர்களினால் வழங்கப்பட்ட விகாராதிபதி பதிவியை உறுதிப்படுத்துவதற்குரிய கடிதத்துடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

2008.09.10 ஆம் திகதிக்குப் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட விகாரைகளின் பொருட்டு புத்தசாசனம் கலாசாரம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சின் புனித பூமி அபிவிருத்திப் பிரிவின் மூலம் அனுமதியைப் பெற்றுக்கொண்டு மேற்கூறப்பட்ட விகாரைகளைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பப்படிவத்தையும், விகாராதி பதவியை உறுதிப்படுத்தும் கடிதத்துடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் பௌத்த மத அலுவல்கள் ஆணையாளர் நாயகத்தின் கையொப்பத்துடன் கூடிய விகாரை பதிவு செய்யப்பட்டமைக்கான சான்றிதழ் ஒன்றும் வழங்கப்படும்.

**2.1.2 விகாராதிபதி பதவிகளை ஏற்றுக்கொள்ளும் பணிகள்**

விகாரை பதிவு செய்யப்பட்டதன் பின்னர் இடம்பெறும் விகாராதிபதி பதவி மாற்றத்தின் போது, உதாரணமாக முன்னைய விகாராதிபதியின் இறப்பின் பின்னர், வேறு ஒரு பிக்குவிற்கு விகாராதிபதி பதவியை வழங்கும் சந்தர்ப்பத்தில், அதிவணக்கத்திற்குரிய மகாநாயக்க தேரரினால் மேற்கொள்ளப்படும் விகாராதிபதி நியமனங்களின் போது விகாராதிபதி பதவியானது ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பதை தெரிவிக்கும் பொருட்டு, விகாராதிபதியாக நியமிக்கப்பட்ட பிக்கு, பிரதேச செயலாளர், பிராந்திய பௌத்த மத அலுவல்கள் அலுவலகம், பௌத்த மத அலுவல்கள் திணைக்களத்தின் அபிவிருத்தி மற்றும் தகவல் பிரிவுகளுக்குமான பிரதிகளுடன், அதி வணக்கத்திற்குரிய மகாநாயக்க தேரர் அவர்களுக்கு கடிதம் ஒன்று சமர்ப்பிக்கப்படும்.

**2.1.3 விகாரைகள் அறக்கட்டளை நிலையங்கள் கட்டளைச் சட்டத்தின் 4(1) அத்தியாயத்திற்கு அமைய விகாரைகள் மற்றும் அறக்கட்டளை நிலையங்களின் பொறுப்பாளர்களை நியமித்தல், ஸ்ரீ தலதா மாளிகையின் தியவடன நிலமே அடங்கலான பஸ்நாயக்க நிலமேக்களை நியமித்தல்.**

1931 இன் 19 ஆம் இலக்க விகாரைகள் அறக்கட்டளை நிலையங்கள் கட்டளைச் சட்டத்தின் 7 ஆம் அத்தியாயத்திற்கமைய ஸ்ரீ தலதா மாளிகையின் தியவடன நிலமே நியமிக்கப்படுவதுடன், அவரது பதவிக்காலம் 10 வருடங்கள் ஆகும். அதே போன்று மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 8 ஆம் அத்தியாயத்திற்கமைய பஸ்நாயக்க நிலமே நியமிக்கப்படுவதுடன், அவரது பதவிக்காலம் 05 வருடங்கள் ஆகும். பஸ்நாயக்க நிலமே ஒருவரின் பதவிக்காலம் முடிவடைந்ததன் பின்னர் மாண்புமிகு ஜனாதிபதி அவர்களுக்கு ஒரு வருடம் வீதம் இரண்டு தடவைகள் பதவிக்காலத்தை நீட்டிப்பதற்கான அதிகாரம் காணப்படுவதுடன், பதவிக்காலம் முடிவடைந்த பின்னர் வாக்கெடுப்பு நடாத்தி பஸ்நாயக்க நிலமே பதவிக்கான நபர்கள் தெரிவு செய்யப்படுவர்.

விகாரையொன்றின் பொறுப்பாளரை நியமிக்கும் செயற்பாடானது விகாரைகள் அறக்கட்டளை நிலையங்கள் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் அத்தியாயத்திற்கமைய மேற்கொள்ளப்படுவதுடன், இதன்போது விகாரையின் விகாராதிபதியினால் வேட்புமனு சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் ஐந்து வருடங்களின் பொருட்டு நியமனம் வழங்கப்படுவதுடன், பொறுப்பளர் பதவியை விகாராதிபதியும் பெற்றுக்கொள்ள முடியும்.

மேற்கூறப்பட்ட தியவடன நிலமே, பஸ்நாயக்க நிலமே மற்றும் பொறுப்பாளர் பதவிகளின் பொருட்டு பௌத்த மத அலுவல்கள் திணைக்களத்தில் கட்டுப்பணம் வைப்புச் செய்தல் வேண்டும். இதன்போது குறித்த வழிபாட்டுத் தலத்தின் முன்னைய வருடத்திற்கான வருடாந்த வரவு செலவு அறிக்கையின் வருமானங்களின் கூட்டுத்தொகையின் 5% நிதியானது கட்டுப்பணமாக வைப்புச் செய்யப்படுதல் வேண்டும்.

**2.1.4 விகாரைகள், அறக்கட்டளை நிலையங்கள் கட்டளைச் சட்டத்தின் 4(1) அத்தியாயத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் வழிபாட்டுத் தலங்களின் உத்தேச வரவு செலவுத்திட்டம் மற்றும் அரையாண்டு வரவு செலவு அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ளல், சொத்துக்களை ஆவணப்படுத்தல், பொறுப்பாளரின் கீழ் நிர்வகிக்கப்படும் வழிபாட்டுத் தலங்களின் செயற்பாடுகளை கணக்காய்வு செய்தல்.**

விகாரைகள் அறக்கட்டளை நிலையங்கள் கட்டளைச் சட்டத்தின் 4(1) அத்தியாயத்தின் கீழ் நிர்வாகிக்கப்பட்டு வரும் வழிபாட்டுத் தலத்திற்கு திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்படும் மாதிரி உத்தேச வரவு செலவுத் திட்டத்திற்கு ஏற்ப, குறித்த வழிபாட்டுத் தலத்தின் தியவடன நிலமே பஸ்நாயக்க நிலமே, மற்றும் பொறுப்பாளரினால் எதிர்வரும் வருடத்திற்கான உத்தேச வரவு செலவு திட்ட அறிக்கையைத் தயாரித்து திணைக்களத்திடம் சமர்ப்பித்து அனுமதியைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். அத்துடன் ஆறு மாதங்களுக்கு ஒரு தடைவை உண்மையான வரவு செலவு விபரங்களை உள்ளடக்கிய அரையாண்டு அறிக்கையைத் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.
வழிபாட்டுத் தலங்களின் சொத்துக்கள் பற்றிய விபரங்களை உள்ளடக்கி திணைக்களத்தினால் சொத்துக்கள் பற்றிய ஆவணம் தயாரிக்கப்படுவதுடன், அதன் ஒரு பிரதி திணைக்களத்தில் பேணப்படுவதுடன் குறித்த வழிபாட்டுத் தலத்தின் தியவடன நிலமே, பஸ்நாயக்க நிலமே மற்றும் பொறுப்பாளருக்கும் ஒவ்வொரு பிரதி வீதம் வழங்கப்படும். இவ்வாறு ஆவணப்படுத்தப்படுவதன் மூலம் அப்பதவிக்கு நியமிக்கப்படுபவருக்கு சொத்துக்கள் மற்றும் ஆவணங்கள் பற்றிய விபரங்களை ஒழுங்கான நடைமுறையில் ஒப்படைக்கக் கூடியதாக அமையும்.
பொறுப்பாளர்களினால் நிர்வகிக்கப்படும் வழிபாட்டுத் தலங்களின் செயற்பாடுகளைக் கணக்காய்வு செய்வதன் மூலம் தவறுகளைத் தடுப்பதற்கும் நேர்மையான முறையில் வழிபாட்டுத் தலத்தின் நிர்வாகம் மற்றும் நிதிச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான வழிகாட்டல்கள் மற்றும் மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகள் பற்றி தெளிவுபடுத்த முடியும். இத்துடன் தமது கடமைகளைப் புறக்கணிக்கும் தியவடன நிலமே, பஸ்நாயக்க நிலமே மற்றும் பொறுப்பாளர்களைப் பதவியில் இருந்து நீக்குவதற்கும் கணக்காய்வு பரிசீலனைகளின் மூலம் சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

### 2.1.5. விகாரைகள், அறக்கட்டளை நிலையங்கள் கட்டளைச் சட்டத்தின் 4(1) அத்தியாயத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் வழிபாட்டுத் தலங்களின் உண்டியல் வருமானங்களை வங்கியில் வைப்புச் செய்யும் செயற்பாட்டினை மேற்பார்வை செய்தல்.

விகாரைகள், அறக்கட்டளை நிலையங்கள் கட்டளைச் சட்டத்தின் 4(1) அத்தியாயத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் வருமானத்தை ஈட்டும் வழிபாட்டுத் தலங்களின் உண்டியல் பணத்தை எண்ணுதல் மற்றும் வங்கியில் வைப்புச் செய்யும் செயற்பாட்டினை மேற்பார்வை செய்யும் பொருட்டுத் திணைக்களத்தின் அதிகாரிகள் பங்குபற்றுகின்றனர். இதன் நோக்கம் உண்டியல் பணம் எண்ணுதல் மற்றும் வங்கியில் வைப்புச் செய்யும் செயற்பாடுகள் முறையாகவும் நேர்மையாகவும் இடம்பெற வேண்டும் என்பதுடன், இந்த உண்டியல் வருமானத்தின் விபரம் பற்றிய அறிக்கையின் பிரதி ஒன்று திணைக்களத்தில் ஆவணப்படுத்தப்படும்.

### 2.1.6 வழிபாட்டுத் தலங்களுக்குச் சொந்தமான காணிகளைக் குத்தகைக்கு வழங்கும் பணிகள்

வழிபாட்டுத் தலங்களுக்கு சொந்தமான காணிகளைக் குத்தகைக்கு வழங்கும்போது விகாரைகள் அறக்கட்டளை நிலையங்கள் கட்டளைச் சட்டத்தின் 29 ஆம் அத்தியாயத்திற்கமைய குத்தகைக்கு வழங்கும் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. இதன்போது பௌத்த மத அலுவல்கள் திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொடுக்கப்படும் குத்தகை விண்ணப்பப்படிவத்தினைப் பூர்த்திசெய்து, குத்தகைக்குப் பெற்றுக்கொடுக்கும் காணி உறுதிப்பத்திரத்தின் மூலப்பத்திரப் பிரதியுடன் குத்தகைக்கு பெறுபவரின் தேசிய அடையாள அட்டையின் பிரதியுடன் திணைக்களத்தில் சமர்ப்பித்தல் வேண்டும். அதற்கமைய குத்தகைக்குப் பெற்றுக்கொள்ளும் விடயத்திற்கு ஏற்ப பிரதேச செயலாளரின் அறிக்கை, மதிப்பீட்டு திணைக்களத்தின் அறிக்கை மற்றும் ஏனைய நிறுவனங்களின் அறிக்கைகள் மற்றும் சிபாரிசுகளுக்கு அமைய குத்தகைக்கு வழங்கும் செயற்பாடானது மேற்கொள்ளப்படும். இதன்போது பௌத்த மத அலுவல்கள் ஆணையாளர் நாயகத்தின் கையொப்பத்துடனான குத்தகைச் சான்றிதழானது தயாரிக்கப்படும். அத்துடன் 05 வருடங்களுக்கு ஒருமுறை குறித்த குத்தகைக் காணி அமைந்துள்ள பிரதேசத்தில் நிலவும் விலைகளுக்கு ஏற்ப குத்தகைப் பெறுமதியானது திருத்தியமைக்கப்படும்.

### 2.1.7 பௌத்த மத அலுவல்கள் ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக நீதிமன்றில் ஆஜராதல்

வழிபாட்டுத் தலத்தின் பதிவு, விகாராதிபதி பதவி, காணிப் பிரச்சினைகள் தொடர்பான வழக்குகள் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் சந்தர்ப்பங்களில் பௌத்த மத அலுவல்கள் ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக குறித்த வழக்கு விசாரணை இடம்பெறும் நீதிமன்றில் ஆஜராதல்.

## 2.2 ஏனைய பணிகள்

01. விகாராதிபதி பதவிகளை மாற்றியமைத்தல்
02. அமரத்துவம் எய்திய பிக்குமார்களுக்கு சொந்தமான வங்கிக் கணக்குகளில் உள்ள நிதியை விகாரைகளின் அபிவிருத்திப் பணிகளின் பொருட்டு விடுவித்தல்.
03. விகாரைகள் மற்றும் அறக்கட்டளை நிலையங்களுக்குச் சொந்தமான காணிகளில் உள்ள

மரங்களை வெட்டுவதற்கும் விற்பனை செய்வதற்குமான அனுமதியைப் பெற்றக்கொடுத்தல்.
04. பூஜா உறுதிப்பத்திரங்களுக்கான சிபாரிசுகளைப் பெற்றுக்கொடுத்தல்.
05. அமரத்துவம் எய்திய பிக்குமார்களுக்கு சொந்தமான வாகனங்களின் உரிமைகளை மாற்றம் செய்தல்.
06. பிக்குமார்கள் தனிப்பட்ட ரீதியில் கொள்வனவு செய்த சொத்துக்களை உரிய கோரிக்கைகளுக்கு ஏற்ப விகாரைக்குச் சொந்தமானது இல்லை என்பதை தெரியப்படுத்தல்.
07. வனப் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு சொந்தமான காணிகளில் உள்ள ஆரண்ய சேனாசனைகளுக்கான சிபாரிசுகளைப் பெற்றுக்கொடுத்தல்.
08. மாணிக்கக் கல் அகல்வுகளுக்கான சிபாரிசுகளைப் பெற்றுக்கொடுத்தல்.
09. பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் வைப்பிலுள்ள வழிபாட்டுத் தலங்களுக்குச் சொந்தமான காணிகளுக்கான இழப்பீட்டு நிதியை உரிய வழிபாட்டுத் தலங்களின் அபிவிருத்திப் பணிகளின் பொருட்டு விடுவிக்கும் பணிகள்.
10. பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் சேமிப்பிலுள்ள பல்வேறு நிதியங்களின் சேமிப்பு நிதிகளுக்கான வட்டியை உரிய வழிபாட்டுத் தலங்களின் நிர்வாக மற்றும் அபிவிருத்திப் பணிகளின் பொருட்டு விடுவிப்பது தொடர்பான பணிகள்.

**2.3 செயலாற்றுகை விபரம்**

நிறுவனத்தின் செயலாற்றுகை விபரம் (செயலாற்றுகை திட்டமிடலுக்கு அமைவாக)

| விசேட விபரம் | எதிர்பார்க்கப்பட்ட இலக்கின் வீதமாக (%) | | |
|---|---|---|---|
| | **100% - 90%** | **75% - 89%** | **50% - 74%** |
| விகாரைகளைப் பதிவு செய்தல். | | 82% | |
| விகாராதிபதிகளை நியமிக்கும் கடிதங்களை | | 81.5% | |
| விகாரதிபதி பதவிகள் தொடர்பில் அதிவணக்கத்திற்குிய மகாநாயக்க தேரரிடமிருந்து கிடைக்கப்பெற்ற உறுதிப்படுத்தல்கள். | | | 67% |
| புதிய வழிபாட்டுத் தலங்கள் தொடர்பில் | | 75% | |
| புதிய வழிபாட்டுத் தலங்கள் தொடர்பில் புத்தசாசன | 90% | | |
| வழிபாட்டுத் தலங்களுக்குச் சொந்தமான | | | 55% |
| உத்தேச வரவு செலவுத்திட்ட அறிக்கைகளைப் | | 80% | |
| அரையாண்டு வரவு செலவுத்திட்டங்களைப் பெற்றுக் | | 75% | |
| சொத்துக்கள் பற்றிய ஆவணங்களைத் தயாரித்தல் | | 80% | |

## 2.4 எதிர்கால இலக்குகள்

| இலக்கு / இலட்சியம் | இலக்கு | முன்னேற்றம் பற்றிய விபரம் | முன்னேற்றம் பற்றிய வீதம் | | |
|---|---|---|---|---|---|
| | | | 0% - 49% | 50% - 74% | 75% - 100% |
| கட்டளைக் கூட்டத்திற்கு ஏற்ப பணியாற்றும் போது பிரச்சினைகளைக் குறைத்து துரிதமாக உரிய இலக்கினை அடையும் பொருட்டு சட்டதிட்டங்களை நடைமுறைப்படுத்திச் செயலாற்றுதல் | தகவல்களைச் சேமித்தல் மற்றும் அவை தொடர்பில் கலந்துரையாடுதல். | விகாரைகள் அறக்கட்டளைகள் நிலையங்கள் கட்டளைச் சட்டத்திற்கு ஏதுவான விதிமுறைகளைத் தயாரித்தல். | | | 78% |
| காணிப் பிரச்சினைகளைத் தீர்த்தல் வழிபாட்டுத் தலத்தின் உரிமையை உறுதிப்படுத்தி அதன் பாதுகாப்பின் பொருட்டு செயலாற்றுதல், தகாத முறையில் சொத்துக்களை உபயோகப்படுத்துபவர்களை முறையான குத்தகைதாரர்களாக மாற்றி வழிபாட்டுத் தலத்தின் வருமானத்தை உயர்த்துவதும், வழிபாட்டுத் தலத்திற்கும் பக்தர்களுக்குமிடையில் பிரச்சினைகள் ஏற்படாதவாறு அவர்களது குத்தகை உரிமையை உறுதிப்படுத்தி, சலுகைகளைப் பெற்றுக்கொடுத்தல். | ஆவணங்கள் மற்றும் இடங்களைப் பரிசீலனை செய்தல். பிரதேச செயலாளரின் முன்னிலையில் வழிபாட்டுத் தலத்தின் உரிமையாளரை உறுதிப்படுத்தல், முறையாக குத்தகைக்கு வழங்குதல். | காணிப் பிரச்சினைகள் காணப்படும் வழிபாட்டுத் தலங்களின் காணிப் பிரச்சினைகளைத் தீர்த்துவைத்தல். | | 72% | |
| வழிபாட்டுத் தலத்தின் பாதுகாப்பு, முறையானதும் நேர்மையானதுமான வரவு செலவு மற்றும் அசையும் அசையா சொத்துக்களின் பாதுகாப்பு. | கணக்காய்வு நடவடிக்கைகளின் போது சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் தொடர்பில் வழிபாட்டுத் தலங்களின் பொறுப்பாளர்களுக்கு தேவையான அறிவுரைகளைப் பெற்றுக்கொடுத்தல். அது தொடர்பில் குறிப்பிட்ட காலப்பகுதியொன்றைப் பெற்றுக்கொடுத்தல். மற்றும் பரிசீலனைகள், வளர்ச்சி தொடர்பிலான கலந்துரையாடல்கள், வருடாந்த மற்றும் அரையாண்டு வரவு செலவுத்திட்ட அறிக்கைகளைச் சமர்ப்பிக்காத வழிபாட்டுத்தலங்கள் தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் கற்றம் அவ்வழிபாட்டுத் தலங்களில் துரிதமாக கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு 4-1 நிர்வாகத்திலிருந்து விடுவிப்பது தொடர்பான சிபாரிசுகளைப் பெற்றுக்கொள்ளுதல். | உள்ளகக் கணக்காய்வு தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், இது வரை கணக்காய்வு மேற்கொள்ளப்படாத வழிபாட்டுத் தலங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றிக் கலந்துரையாடுதல். | | | 80% |
| சேவையைப் பெற்றுக்கொள்வதற்கு வருகை தரும் பிக்குமார்கள் மற்றும் பொதுமக்களுக்கு இலகுவாகவும் துரிதகதியிலும் அவர்களது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், பிரதேச செயலகங்களில் இணைக்கப்பட்டுள்ள அதிகாரிகளின் மூலமாக தரமானதும், பயனுள்ளதுமான சேவையைப் பெற்றக்கொள்ளுதல் மற்றும் அனுபவம் வாய்ந்த அதிகாரிகள் என்ற தகைமைகளுக்குக் கொண்டு வருதல். | பிரதேச செயலகங்கள் மூலம் நிறைவேற்றப்படக் கூடிய பணிகளை இனங்காணுதல், அது தொடர்பில் உரிய அதிகாரிகளைத் தெளிவுபடுத்துதல். | விகாரைகள் மற்றும் அறக்கட்டளை நிலையங்கள் பிரிவின் பணிச்சுமைகளைக் குறைத்தல். | | | 78% |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அத்தியாவசியமான ஆவணங்களை மாத்திரம் ஆவணப்படுத்தி எளிமையான கோப்புகளைப் பேணுதல், அனைத்து முக்கியமான ஆவணங்களையும் கணனித் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல். | அவ்வாறு விசாலமாவதற்கு ஏதுவான விடயங்களை ஆராய்தல் அது தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்தல். | விகாரைகள் தொடர்பிலான கோப்புகள் மிகவும் பெரிதாகக் காணப்படுதல், அக்கோப்புகளை முறையாகச் சுவடிக் கூடம் ஒன்றில் பாதுகாத்தல். | | | 85% |
| சேவையைப் பெற்றுக்கொள்ள வருபவர்களினதும் உத்தியோகத்தர்களினதும் நேரத்தைச் சேமித்து துரித கதியில் சேவையைப் பெற்றுக்கொடுப்பதன் மூலம் திருப்திகரமான அரச சேவையின் பலனைப் பெற்றுக்கொடுத்தல். | இனங்காணப்பட்ட அப்பணிகள் தொடர்பில் சேவைகளைப் பெற்றுக்கொள்பவர்களுக்கு தெரியப்படுத்துதல். | அன்றாட சேவைகளின் போது பெற்றுக்கொடுக்கக்கூடிய அத்தியாவசிய சேவைகள் எவை என்பது பற்றி உறுதி செய்தல். | | | 85% |

**02.5. விசேட வெற்றிகள் / சவால்கள்**

2020.05.01 ஆம் திகதிக்கு பௌத்த மத அலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து விகாரைகள் பற்றிய தகவல்களையும் திணைக்களத்தின் இணையத்தளத்தில் தரவேற்றம் செய்யும் பணிகளைப் பூர்த்தி செய்வதும், அன்றாட விகாரைகள் தெடர்பான தகவல்களைத் தரவேற்றம் செய்து தகவல் தொழில்நுட்ப வலையமைப்பினைச் சரியாகவும் திருத்தமாகவும் தரவேற்றம் செய்து பேணுதல்.

2020.05.01 திகதிக்கு தற்போது குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள (விகாரைகளின் குத்தகைக்கால எல்லை 05 வருடங்களுக்கு ஒரு முறை உரிய பிரதேச்தில் நிலவும் விலை மதிப்பீட்டிற்கு ஏற்ப திருத்தப்பட வேண்டியிருப்பதனால்) ஐந்து வருடங்களைப் பூர்த்திசெய்துள்ள குத்தகைப் பத்திரங்களின் பொருட்டு விலை மாற்றங்களைச் செய்தல்.

## முன்னேற்றம்
## விகாரைகளைப் பதிவு செய்தல்




02.6. தலைமை பதவியில் இருப்பவரின் நியமனக் கடிதங்களை ஏற்றுக்கொள்வது



02.7. தலைமை பதவியில் இருப்பவர் தொடர்பாக மிகவும் மதிப்பிற்குரிய மகா நாயக்க தேரோரிடமிருந்து உறுதிப்படுத்தல் விசாரணைகள்




புதிய ஆலயங்களில் அறிக்கைகளைப் பெறுதல்




புதிய வழிபாட்டுத் தலங்கள் தொடர்பான தகவல்களை உள்துறை அமைச்சகத்திற்கு சமர்ப்பித்தல்




வழிபாட்டுத் தலங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை குத்தகைக்கு விடுதல்



மதிப்பிடப்பட்ட பட்ஜெட் அறிக்கைகளைப் பெறுதல்




அரை ஆண்டு வரவு செலவுத் திட்டங்களைப் பெறுதல்




சொத்து ஆவணங்களை தயாரித்தல்



# 03
# அறநெறிப் பாடசாலைகள் பிரிவு

## 03.1. அறநெறிப் பாடசாலைகளை பதிவு செய்தல்

மாணவர்களின் ஒழுக்க மேம்பாட்டினை விருத்தி செய்வதற்கு அறநெறிப் பாடசாலைகள் மிகவும் உறுதுணையாக அமைகின்றன. இந்த நோக்கத்துடன் ஆரம்பிக்கப்படும் அனைத்து அறநெறிப் பாடசாலைகளும் பௌத்த மத அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்படுகின்றன. பதிவின் பின்னர் அறநெறிப் பாடசாலைகள் தொடர்ந்தும் இயங்குவதற்கு தேவையான நூல்கள் வரவு இடாப்புக்கள் போன்ற அத்தியாவசியப் பொருட்களை விநியோகிக்கும் பொருட்டு வருடாந்தம் தகவல்கள் பெற்றுக்கொள்ளப்படுகின்றன.




வரைபு 03.1- இலங்கையில் பதிவு செய்யப்பட்ட அறநெறிப் பாடசாலைகளின் எண்ணிக்கை வளர்ச்சி வீதம்

## 03.2. அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான பரீட்சைகளை நடாத்துதல்

அறநெறிப் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களின் சமய அறிவை பரீட்சிக்கும் பொருட்டு இது நடாத்தப்படுகின்றது. 2018 இல் 3940 பரீட்சை நிலையங்களில் 980,262 மாணவர்களின் பொருட்டு பரீட்சையானது நடாத்தப்பட்டது.

| வருடம் | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| விண்ணப்பதார்கிளின் எண்ணிக்கை | 716,840 | 757,927 | 765,887 | 777,576 | 787,692 | 808,161 | 813,432 | 855,868 | 950,274 | 913,720 | 976,639 | 988,262 |
| பரீட்சை நிலையங்களின் எண்ணிக்கை | 3,667 | 4,068 | 3,888 | 3,884 | 5,758 | 3,920 | 3,830 | 3,842 | 3,907 | 3,938 | 3,361 | 3940 |

## 03.3. அறநெறிப் பாடசாலைகளின் ஆசிரியர்கள் மாணவர்களின் தகவல்களை சேகரித்தலும், பேணுதலும்.

இதன் மூலம் நாடு முழுவதிலும் உள்ள பௌத்த அறநெறிப் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை பற்றிய பதிவேடுகளை பேணும் நடவடிக்கையானது மேற்கொள்ளப்படுகின்றது. இதன் மூலம் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்கள் போன்றோரின் தகவல்களைப் பெற்றுக் கொண்டு எதிர்கால செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு சந்தர்ப்பம் கிடைக்கப்பெறுகின்றது.




வரைபு 03.2- இலங்கையில் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை வளர்ச்சி வீதம்




வரைபு 03.3 இலங்கையில் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களின் எண்ணிக்கை வளர்ச்சி வீதம்

வருடந்தோறும் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான நூலகக் கொடுப்பனவு மற்றும் சீருடைகளை வழங்குவதற்கான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கும் நூல்களை வழங்குவதற்கும் மாணவர்களின் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கும் மற்றும் ஏனைய தேவைகளின் பொருட்டு தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்குமான நோக்கத்துடன் இப் பதிவேடானது பேணப்படுகின்றது.



**2019 இல் 21 மாவட்டங்களில் 10,164 அறநெறிப்பாடசாலையில் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 2,233,804 ஆகும்.**




வரைபு 03.4 2019 அறநெறிப் பாடசாலைகளின் எண்ணிக்கை

2019 இல் அறநெறிப் பாடசாலை மாணவர்களின், ஆசிரியர்களின் தகவல்களைச் சேகரிப்பதற்கான விண்ணப்பப்படிவங்கள் 60,000 அச்சிடப்பட்டதுடன் அதற்கான செலவு ரூ. 357,063.50

## 03.4. 123 ஆவது அறநெறிப் பாடசாலைகள் தினக் கொண்டாட்டம்

அகில இலங்கை பௌத்த அறநெறிப் பாடசாலைகள் தினமானது இலங்கையின் முதலாவது அறநெறிப் பாடசாலையான காலி வெலிவத்தை விஜயானந்த அறநெறிப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட 1895 ஆகஸ்ட் 03 ஐ ஞாபகப்படுத்தும் வகையில் வருடந்தோறும் ஆகஸ்ட் 03 ஆம் திகதி கொண்டாடப்படுகின்றது. 2018 இல் இதன் 124 தினக் கொண்டாட்ட தேசிய நிகழ்வானது ஆகஸ்ட் 3 ஆம் திகதி பொலன்னறுவை, கதுறுவெலை, ஜயந்தி விகாரையில் இடம்பெற்றது. இதன் போது கீழுள்ள நிகழ்வுகளும் இடம்பெற்றன.

- பொலன்னறுவைமாவட்ட அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான கணிப்பீட்டு போட்டிகளில் வெற்றி பெற்ற ஏனைய அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான பரிசில்களை வழங்குல்.
- அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள், பெற்றோர்களை உள்ளடக்கியதான வழிகாட்டிப் பேரணி
- பௌத்த மதத்துடன் தொடர்புடைய ஓவியங்கள், நூல்கள், சிற்புக் கண்காட்சி என்பனவும் நடாத்தப்பட்டது.
- அறநெறிப் பாடசாலைகளின் முன்னேற்றத்தின் பொருட்டு சேவையாற்றிய பிக்குமார்களை கௌரவித்தல்.
- அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுகான வைத்தியச் செலவுகளைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் சமாதான நீதவான் பதவிகளைப் பெற்றுக்கொடுத்தல்.

## 03.5. ஆசிரியர்களுக்கான நூலகக் கொடுப்பனவு, சீருடைகளைப் பெற்றுக்கொடுத்தல்




வரைபு 03.5 – 2019 - அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களின் எண்ணிக்கை

அறநெறி ஆசிரியர்களின் பொருட்டு 2006 ஆம் வருடம் தொடக்கம் நூலகக் கொடுப்பனவாக ரூ. 2000 வழங்கப்பட்டு வருவதுடன் 2017 தொடக்கம் இக்கொடுப்பனவானது ரூ. 5000 வீதம் 2018 இலும் 323 சாசனப் பாதுகாப்புச் சேர்ந்த 10,164 அறநெறிப் பாடசாலைகளின் ஆசிரியர்கள் 100874 பேருக்கு வழங்கப்பட்டது.

அதற்கமைய ஒரு ஆசிரியருக்கு ரூ. 5000 வீதம் வருடாந்தக் கொடுப்பனவானது வழங்கப்பட்டது. இதற்கென ஒதுக்கப்பட்ட நிதி **ரூ. 5000,000,000.00** ஆகக் காணப்பட்டதுடன், இது 95,985 ஆசிரியர்களின் பொருட்டு போதுமானதாகும். இவ்வருடம் ஆசிரியர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்பட்டமையினால் அதிகரித்த 874 ஆசிரியர்களின் பொருட்டு மேலதிகமாகத் ரூ. 4370000/- நிதியானது தேவைப்பட்டதுடன், சில பிரதேச செயலகங்களில் கொடுப்பனவை செலுத்தியதன் பின்னர் எஞ்சிய நிதியைக் கொண்டு மேலதிகமாகத் தேவைப்பட்ட நிதித்தேவை பூர்த்தி செய்ய்பட்டது.

தமது சுயவிருப்பத்தின் பேரில் எந்தவொரு பலனையும் எதிர்பாராமல் பௌத்த அறநெறிப் பாடசாலைகளில் கல்வி கற்கும் ஆசிரியர்களை ஊக்குவிக்கும் முகமாக 2004 தொடக்கம்
தொடர்ச்சியாக ஒரு வருட சேவையைப் பூர்த்தி செய்த 18 வயது நிரம்பிய ஆசிரியர்களுக்கு திணைக்களத்தினால் சீருடை ஒன்று வழங்கப்படுகிறது.

சீருடைகளைப் பெற்றுக் கொண்டவர்கள் மிகவும் மகிழ்ச்சியுடன் காணப்படுகின்றார்கள். ஆசிரியர்களுக்கான சீருடைகள் வழங்கும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியர்களின் எண்ணிக்கையில் வளர்ச்சி காணப்படுகின்றது. அத்துடன் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து காணப்படுகின்றது. எனவே ஆசிரியர்களுக்கு சீருடைகளை வழங்குவதன் மூலமாக ஒழுக்க மேம்பாடுடைய சமூகம் ஒன்றை தோற்றுவிப்பதற்கான செயற்பாடானது மிகவும் இலகுவாகப்படுகின்றது. இருப்பினும் 2019 இல் இதற்கான போதுமான நிதி கிடைக்கப்பெறாமையின் காரணமாக சீருடைகள் வழங்கப்படவில்லை.

## 03.6. அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கு சான்றிதழ் வழங்குவதற்கான பரீட்சை

இப்பரீட்சையை நடாத்துவதன் மூலமாக கீழே குறிக்கப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

1. தற்போது சேவையாற்றும் அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களின் கல்வித் தகைமையை மேம்படுத்தல்.
2. ஆறநெறிப் பாடசாலைகளில் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களின் சேவையை பாராட்டுதல்.
3. ஆசிரியர்களின் அறிவுத்திறனை மேலும் விருத்தி செய்வதுடன் உயர்கல்வியை தொடரச் செய்தல்.
4. அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு சமூகத்தில் கௌரவத்தை ஏற்படுத்துவதுடன் அவர்களுக்கு மக்களிடையே நன்மதிப்பை ஏற்படுத்தல்.




வரைபு 03.6 – அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான சான்றிதழ் பரீட்சை முடிவுகள் - 2019

2019 இல் 19 மாவட்டங்களைச் சேர்ந்த பரீட்சாத்திகளுக்கென 22 பரீட்சை மத்திய நிலையங்களில் இப்பரீட்சை நடாத்தப்பட்டது. பரீட்சைக்கென 13,665 பேர் விண்ணப்பித்திருந்ததுடன் அதில் 12751 பேர் தேவையான தகைமைகளைக் கொண்டிருந்தனர். இதில் பரீட்சைக்கு தோற்றியவர்கள் 8325 பேர்களாவர். பரீட்சைக்கு தோற்றாதவர்களின் எண்ணிக்கை 5340 பேர் ஆகக் காணப்பட்டதுடன், இது தகுதி பெற்றவர்களின் **34.71%** ஆகும்.

2019 ஜுன் மாதம் 15 ஆம் திகதி நடாத்தப்பட்ட இப்பரீட்சைக்கென ரூ. 1915000.00 நிதி செலவு செய்யப்பட்டதுடன் 2018 ஒக்டோபர் மாதம் 01 ஆம் திகதி பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்டன.

## 03.7. அறநெறிப் பாடசாலை மாணவர்களின் ஆற்றல்களை கணிப்பீடு செய்தல்.

அறநெறிப் பாடசாலை மாணவ மாணவியரின் அறிவுத்திறனை மேம்படுத்தும் பொருட்டும் புத்த தர்மத்தை போதிப்பதன் பயனைப் பெற்றுக்கொள்வதற்கும், நற்பண்புகள் நிறைந்த மாணவ சமூகமொன்றை கட்டியெழுப்பும் நோக்கத்துடனும் வருடம் தோறும்

நடாத்தப்படும் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான ஆற்றல் கணிப்பீட்டு நிகழ்வானது இவ்வருடமும் மிகவும் வெற்றிகரமாக நடாத்தப்பட்டது.

மாணவர்களுக்கான ஆற்றல் கணிப்பீட்டு நிகழ்வானது அறநெறிப் பாடசாலை மட்டம், பிரதேச மட்டம், மாவட்ட மட்டம் மற்றும் அகில இலங்கை ரீதியாக நான்கு கட்டங்களாக நடாத்தப்படுகின்றது.
இம்முறை இந்நிகழ்வானது வவுனியா, இரட்டைப்பெரியகுளம் இடம்பெற்றதுடன், இதில் பிரதம அதிதியாக புத்தசாசனம், கலாசாரம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சர், கௌரவ பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அவர்கள் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

பிரதேச மட்டத்திலான ஒழுங்கு செய்தல் பணிகளுக்கென பிரதேச சாசனப் பாதுகாப்புச் சபைகளின் செயலாளர் தேரருக்கு ரூ.15,000.00 வீதமும் மாவட்ட மட்டத்திலான ஒழுங்கமைப்புகளுக்கு மாவட்ட சாசனப் பாதுகாப்புச் சபை செயலாளர் தேரருக்கு ரூ. 18,000 வீதமும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்விற்கான உத்தேச செலவு மதிப்பீடு ரூ. 24,966,828.43 ஆக இருந்ததுடன் மொத்தமாக இது செலவு செய்யப்பட்டது.

## 03.8. அறநெறிப்பாடசாலைகளுக்கான நூல்களை அச்சிடுதல்.

ஒழுக்க மேம்பாடுடைய சமூகமொன்றை கட்டியெழுப்புவதற்காக அறநெறிக் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்து அதனை மேம்படுத்தும் நோக்கத்துடன் அறநெறிப்பாடசாலைகளுக்கான நூல்களை அச்சிட்டு விநியோகிக்கும் செயற்பாடானது திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

வருடத்திற்கு தேவையான நூல்களை பற்றிய விபரத்தை அறநெறிப்பாடசாலைகளிடம் இருந்து பெற்றுக் கொண்டதன் பின்னரே அச்சுப் பணிகள் ஆரம்பிக்கப்படுகின்றன. நூல்களானது அரச அச்சகத்திலும், அரசாங்க கூட்டுத்தாபனத்திலும் மற்றும் பிரிண்டஸ் எக்ஸலட் நிறுவனத்திலும் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கென ரூ.150,000,000 நிதி ஒதுக்கப்பட்டதுடன் இதன் போது மொத்தமாக &.138998050 நிதியானது செலவு செய்யப்பட்டது.

இந்த நூல்களை அச்சிட்டு திணைக்களத்தின் களஞ்சியத்தில் ஒப்படைத்ததன் பின்னர் 2019 இற்கு தேவையான நூல்கள் நாடு பூராகவும் அமைந்துள்ள அறநெறிப்பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மொத்த மாவட்டங்களின் எண்ணிக்கை | = 21 |
| பிரதேச சாசனப் பாதுகாப்புச் சபைகளின் எண்ணிக்கை | = 323 |
| அறநெறிப் பாடசாலைகளின் எண்ணிக்கை | = 10164 |
| பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த நூல்களின் எண்ணிக்கை | = 2059784 |
| சாதுசரயா | = 166684 |

அட்டவணை 03.5 அறநெறிப் பாடசாலைகளுக்கான நூல் விநியோகம் - 2019 சராம்சம்.

2020 இன் பொருட்டு அச்சிடுவதற்கு வழங்கப்பட்டுள்ள நூல்களின் எண்ணிக்கை 2,059,787 ஆகும்.

## 03.9. புத்த ஜயந்தி நூல் நிலையம்

### 2019 இல் முன்னேற்றம்

பொதுமக்களின் தேவை கருதி சமய நூல்களை விற்பனை செய்யும் பணியானது பௌத்த மத அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் இயங்கும் புத்த ஜயந்தி நூல் நிலையத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. சரள சிங்களத்தில் எழுதப்பட்ட திரிபிடகங்கள், பௌத்த கலைக் களஞ்சியம் அடங்கலாக பெருமளவிலான நூல்கள் இங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

2019 இல் இத்தகைய நூல்கள் விற்பனையின் மூலம் ரூ. 1,754,626.00 நிதியானது கிடைக்கப்பெற்றது. இவ்வாறு விற்பனையின் மூலம் கிடைக்கப்பெறும் நிதியானது அந்தந்த நாட்களிலேயே பிரதான திணைக்களத்தில் ஒப்படைக்கப்படும்.

# 04. அபிவிருத்திப் பிரிவு

### 04.1. பிக்குணிமார்கள் தொடர்பான பணிகள்

### 04.1.1. பிக்குணிமார்களுக்கான கல்வி நிலையங்களை அபிவிருத்தி செய்தல்

இலங்கையில் வாசம் செய்யும் நூலகத்திற்கு தேவையான நூல்களை கொள்வனவு செய்யும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், களனி மற்றும் அநுராதபுரம் கல்வி நிலையங்களுக்கான வெளிக்கள பேராசிரியர்களை இணைத்துக் கொண்டு கற்கை நெறிகளை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. 2018.01.02 திகதியிடப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய பிக்குணிமார்களுக்கான கல்வி நிலையங்களை அபிவிருத்தி செய்வதன் பொருட்டு ரூ. 15 மில்லியன்கள் நிதியுதியை பெற்றுக்கொடுப்பதற்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

#### 4.1.1.1. களனி ஈரியவெட்டிய பிக்குணிமார்களுக்கான பயிற்சி நிலையம்

பிக்குணிமார்களின் மொழியறிவை மேம்படுத்தும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட இப்பயிற்சி நிலையத்தில் சிங்களம், பாளி, சமஸ்கிருதம் போன்ற மொழிகளைக் கற்பதன் மூலம் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் மொழிப் பரீட்சைகளுக்குத் தோற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இதனை 03 வருட பாடத்திட்டமாக நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அத்துடன் ஆங்கிலம், தமிழ், சீன மொழிகளைக் கற்பதற்கான பாடநெறிகளைக் கற்பிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. தற்போது இந்நிறுவனத்தின் நிர்மாணப்பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் காலங்களில் இதனைத் திறந்து வைப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. வதிவிடக் கற்கை நெறிகளுக்குத் தேவையான வசதிகளைக் கொண்டுள்ள இங்கு 30 பிக்குணிமார்களுக்கான தங்குமிட வசதிகளைப் பெற்றுக்கொடுக்க முடியும்.

#### 4.1.1.2 முலடியன பிக்குணிமார் பயிற்சி நிலையம்

2019 ஆம் வருடத்தில் குறுகிய கால பிக்குணிமார்களின் அன்றாட வசதிகள், கற்பித்தல்கள், கொடுப்பனவுகள் மற்றும் நிர்வாகச் செலவுகளின் பொருட்டு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. முதல் குழுவில் 25 பிக்குணிமார்களும் இரண்டாவது குழுவில் 18 பிக்குணிமார்களும் உள்வாங்கப்பட்டனர். செலவான மொத்த ரூபா. 1,720,000.00 ஆகும்.

### <u>04.1.2. சில் மாதாக்களை பதிவு செய்தல் மற்றும் அடையாள அட்டைகளை வழங்குதல்</u>

பௌத்த மத அலுவல்கள் திணைக்களத்தில் சில்மாதாக்களை பதிவு செய்தல் மற்றும் அவர்களுக்கான அடையாள அடடைகளை வழங்குதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதுவரை இந்த திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள பிக்குணிமார்களின் எண்ணிக்கை 2413ஆகும். 2019 இல் 126 பிக்குணிமார்களுக்கான அடையாள அட்டைகள் பெற்றுக்கொடுக்கப்பட்டது.




### <u>04.1.3 சில்மாதாக்களின் ஆராமைகளை பதிவு செய்தல்</u>

இதுவரை இலங்கையில் பதிவு செய்யப்பட்ட சில்மாதா ஆராமைகளின் எண்ணிக்கை கீழுள்ளவாறாகும்




**<u>04.1.4 தேசிய சில்மாதா சங்கம்</u>**

இதன் கீழ் சில்மாதாக்குளுக்கான கூட்டங்களை நடாத்துதல், அவற்றை ஒழுங்கு செய்தல் மற்றும் அவர்களுக்கான போக்குவரத்து செலவுகளை வழங்குதல் போன்ற பணிகள் முனனெடுக்கப்படுகின்றன. அத்துடன் 2018 இல் 03 தேசிய சபை கூட்டங்களும் 01 செயற்குழு கூட்டமும் நடாத்தப்பட்டுள்ளது. மாவட்ட சில்மாதா சங்க கூட்டங்களுக்கு தேவையான நிதி வழங்கப்பட்டுள்ளது.

**4.1.5 பிக்குணிமார்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்**

வெசாக் நிகழ்வுகளுடன் இணைந்ததாக காலி மாவட்டத்தில் பிக்குணிமார்களை பயிற்றுவிக்கும் 3 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. மே மாதம் ஒரு நிகழ்ச்சித் திட்டம், ஜுன் மாதம் ஒரு நிகழ்ச்சித்திட்டம் ஜுலை மாதம் ஒரு நிகழ்ச்சித்திட்டம் வீதம் மூன்று நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன. இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள 60 பிக்குணிமார்களைப் பயிற்றுவிக்கும் இரண்டு நாள் பயிற்சி நிகழ்வொன்றும் நடாத்தப்பட்டது. ஊவா மாகாணத்திற்கான பயிற்சி நிகழ்வில் பதுளை, மொனராகலை மாவட்டங்களைச் சேர்ந்த 80 பிக்குணிமார்களைப் பயிற்றுவிக்கும் இரண்டுநாள் பயிற்சி நிகழ்வொன்றும் நடாத்தப்பட்டது.

04.3. **அறநெறிப் பாடசாலைகளுக்கு தேவையான வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல்.**

**04.3.1 அறநெறிப் பாடசாலை கட்டிடங்கள் மற்றும் உபகரணங்களுக்கான நிதியுதவி**

புதிய அறநெறிப் பாடசாலை கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு அல்லது புனரமைப்பிற்கென பொருத்தமான பௌத்த அறநெறிப் பாடசாலை ஒன்றிற்கு ஆகக் கூடிய உதவித் தொகையாக ரூ. 500,000.00 உம், அறநெறிப் பாடசாலைகளுக்கு தேவையான மேசைகள், இருக்கைகள் மற்றும் அத்தியாவசிய உபகரணங்களை கொள்வனவு செய்யும் பொருட்டு ரூ. 200,000.00 உம் ஆகக்கூடியவாறு வசதி குறைந்த அறநெறிப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், புத்தசாசன அமைச்சின் தெரிவுக்குழுவினால் தெரிவு செய்யப்பட்ட70 அறநெறிப் பாடசாலைகளை புனரமைப்பு செய்யும் முகமாக ரூ. 24,400,000.00 நிதியானது காலி மாவட்ட செலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

## 4.4. விகாரைகளின் நிர்வாக சபைகள், செயற்குழுக்கள் மற்றும் சாசனப் பாதுகாப்பு சபைகளை பதிவு செய்தல்.

| தொடர் இல. | மாவட்டம் | விகாரை நிர்வாக குழுக்களின் எண்ணிக்கை | பிக்குணி ஆர-ாமைகளின் நிர்வாக குழுக்களின் எண்ணிக்கை | விகாரை செயற்குழுக்களின் எண்ணிக்கை | விகாரை சாசனப் பாதுகாப்பு சபைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | கொழும்பு | 71 | 06 | | |
| 2 | களுத்துறை | 23 | - | 01 | |
| 3 | கம்பஹா | 36 | 04 | | |
| 4 | காலி | 58 | 08 | | |
| 5 | மாத்தறை | 24 | - | | |
| 6 | அம்பாந்தோட்டை | 16 | - | | |
| 7 | குருணாகல் | 90 | 10 | 01 | |
| 8 | புத்தளம் | 32 | - | | |
| 9 | கண்டி | 78 | 03 | | |
| 10 | மாத்தளை | 22 | 02 | | 04 |
| 11 | மட்டக்களப்பு | 01 | | | |
| 12 | இரத்தினபுரி | 36 | 01 | 01 | |
| 13 | திருகோணமலை | 03 | | | |
| 14 | நுவரெலியா | 15 | | | |
| 15 | மொனராகலை | 07 | | 01 | |
| 16 | பதுளை | 26 | 07 | | |
| 17 | கேகாலை | 19 | 04 | | |
| 18 | அம்பாறை | - | 01 | | |
| 19 | அநுராதபுரம் | 74 | 02 | | |
| 20 | பொலன்னறுவை | 26 | | | |
| 21 | வவுனியா | 01 | | | |
| 22 | முல்லைத்தீவு | 02 | - | | |
| மொத்தம் | | | | | |

## 04.5. சாசனப் பாதுகாப்புச் சபைகளின் செயற்பாடுகளை ஊக்குவித்தல்

### 04.5.1. சாசனப் பாதுகாப்புச் சபைகளுக்கான வசதிகளை வழங்குதல்

நாட்டில் 322 பிரதேச சானப் பாதுகாப்புச் சபைகள் காணப்படுகின்றன. 22 மாவட்டங்களில் இயங்கி வரும் இவற்றின் செயற்பாடுகளுக்கு தேவையான இதன்போது வழங்கப்படுகின்றது. இவற்றின் கீழ் விகாரையின் சாசனப் பாதுகாப்புச் சபை மற்றும் பௌத்த அறநெறிப் பாடசாலைகள் என்பன இயங்கி வருகின்றன. கிராம மட்டத்தில் இடம்பெறும் அபிவிரத்திப் பணிகளும் இச்சபைகளின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கமைய 2019 இல் கீழுள்ளவாறு உபகரணங்களுக்கான நிதி வழங்கப்பட்டது.

| தொடர் இல. | மாவட்டம் | மாவட்ட செயலகம் / பிரதேச செயலகம் | வழங்கப்படும் உபகரணம் | ஒதுக்கப்பட்ட நிதி | மாவட்ட ரீதியாக ஒதுக்கப்பட்ட நிதி |
|---|---|---|---|---|---|
| 1 | பதுளை | சொரணாதொட்டை | கணனி/ அச்சு இயந்திரம் | 25,000.00 | 150,000.00 |
| 2 | | ரிதீமாலியத்தை | கணனி/ அச்சு இயந்திரம் | 20000.00 | |
| 3 | | எல்லை | கணனி/ அச்சு இயந்திரம் | 105,000.00 | |
| 4 | கமபஹா | மஹர | கணனி/ அச்சு இயந்திரம் | 40,000.00 | 40,000.00 |
| 5 | புத்தளம் | மாவட்ட செயலகம் | கணனி/ அச்சு இயந்திரம் | 55000.00 | 55,000.00 |
| 6 | பொலன்னறுவை | வெலிகந்தை | கணனி / அச்சு இயந்திரம் | 105,000.00 | 140,000.00 |
| 7 | | லங்காபுர | கணனி/ அச்சு இயந்திரம் | 35,000.00 | |
| 8 | மொனராகலை | கதிர்காமம் | கணனி / அச்சு இயந்திரம் /, ரும்புக் கம்பி | 55,000.00 | 55,000.00 |
| 9 | களுத்துறை | அகலவத்தை | அலுவலக மேசை 02 / கதிரை 02 / இரும்பு அலுமாரி 01 / கணனி மேசை 01 / கணனி கதிரை 01 | 105,000.00 | 155,000.00 |
| 10 | | வலல்லாவிட்டை | அலுவலக மேசை 02 / கதிரை 02 / இரும்பு அலுமாரி 01 / கணனி மேசை 01 / கணனி கதிரை 01 | 25,000.00 | |
| 11 | | பாணந்துறை | அலுவலக மேசை 02 / கதிரை 02 / இரும்பு அலுமாரி 01 / கணனி மேசை 01 / அச்சு இயந்திரம 01 | 25,000.00 | |
| 12 | குருணாகல் | அம்பன்பொலை | அலுவலக மேசை 01 / கதிரை 01 / இரும்பு அலுமாரி 01 / கணனி மேசை 01 / அச்சு இயந்திரம 01 | 125,000.00 | 410,000.00 |
| 13 | | ரிதீகம | அலுவலக மேசை 02 / கதிரை 02 / இரும்பு அலுமாரி 01 / கணனி மேசை 01 / அச்சு இயந்திரம் 01 | 90,000.00 | |
| 14 | | குளியாப்பிட்டி கிழக்கு | அச்சு இயந்திரம் 01 | 105,000.00 | |
| 15 | | மல்லவப்பிட்டி | அலுவலக கதிரை 01 | 90,000.00 | 129,000.00 |
| 16 | கேகாலை | தெஹியோவிட்டை | அலுவலக மேசை 02 / கதிரை 02 | 105,000.00 | 210,000.00 |
| 17 | | ரம்புக்கனை | கணனி / அச்சு இயந்திரம் | 105,000.00 | |
| 18 | மாத்தறை | மாத்தறை நகர்ப்புறம் சுற்றுப்புறச்சூழல் | கணனி / அச்சு இயந்திரம் | 105,000.00 | 105,000.00 |
| 19 | கொழும்பு | மஹரகம | கணனி / அச்சு இயந்திரம் | 90,000.00 | 210,000.00 |
| 20 | | மொறட்டுவை | கணனி / அச்சு இயந்திரம /கணனி மேசை 01 | 15,000.00 | |
| 21 | | சீதாவக்கை | கணனி / அச்சு இயந்திரம் | 105,000.00 | |
| 22 | இரத்தினபுரி | எம்பிலிப்பிட்டிய | கணனி /அலுவலக மேசை 01 | 75,000.00 | 75,000.00 |
| 23 | கண்டி | பாத்ததும்பறை | கணனி / அச்சு இயந்திரம் | 105,000.00 | 130,000.00 |
| 24 | | கலகெதர | கணனி / அச்சு இயந்திரம் | 25,000.00 | |
| 25 | திருகோணமலை | பதவி ஸ்ரீ புர | கணனி | 105,000.00 | 105,000.00 |
| 26 | மாத்தளை | தம்புள்ளை | அச்சு இயந்திரம் 01 | 45,000.00 | 45,000.00 |
| 27 | காலி | மாவட்ட செயலகம் | கணனி / அச்சு இயந்திரம் | 100,000.00 | |
| 28 | | ஹபராதுவை | கணனி / அச்சு இயந்திரம் | 105,000.00 | |
| 29 | | காலி நகரமும் சுற்றுப்புறச் சூழலும் | கணனி / அச்சு இயந்திரம் | 105,000.00 | |
| 30 | | கரந்தெனிய | கணனி | 130,000.00 | |
| 31 | | போபே போத்தலை | அச்சு இயந்திரம் 01 | 145,000.00 | 111,500.00 |
| 32 | | ஹிக்கடுவை | கணனி /அலுவலக மேசை 01 / கதிரை 01 | 75,000.00 | |
| 33 | | அம்பலாங்கொடை | கணனி / அச்சு இயந்திரம் | 105,000.00 | |
| 34 | | கோணபீனுவளை | கணனி | 105,000.00 | |
| 35 | | அக்மீமனை | கணனி / அச்சு இயந்திரம் | 105,000.00 | |
| 36 | | நெலுவை | கணனி /அலுவலக மேசை 01 / கதிரை 01 | 140,000.00 | |
| | | | மொத்த நிதி | 3,000,000.00 | |

### 4.4.2 சாசனப் பாதுகாப்புச் சபை செலவுகள்

அன்னதானத்திற்கான செலவுகளைப் பெற்றுக்கொடுக்கும் செயற்பாடுகளும் இடம்பெறுகின்றன. 2019 இல் அகில இலங்கைச் சாசனப் பாதுகாப்புச் சபைக் கூட்டங்கள் மூன்றும் செயற்குழுக் கூட்டங்கள் எட்டும் நடாத்தப்பட்டன. அத்துடன் மாவட்ட, பிரதேச சாசனப் பாதுகாப்புச் சபைக்குத் தேவையான காகிதாகிச் செலவுகளும் வழங்கப்பட்டன.

### 04.5 தேசிய உற்சவங்களை ஏற்பாடு செய்தல்

### 04.5.1 சுதந்திர தின பிரித் போதனை வைபவம்

2019 பெப்ரவரி மாதம் 02 ஆம் திகதி கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் இடம்பெற்ற இரவு முழுவதுமான பிரித்போதனை நிகழ்வானது இலங்கை அஸ்கிரி நிக்காயவின் அதி வணக்கத்திற்குரிய மகாநாயக்க தேரர், அதி வண. வுரக்காகொடை ஞானரதனாபிதானதேரர் அவர்களின் வழிகாட்டலின் கீழ் கொழும்பு 07, சம்போதி விகாராதிபதி வண. போரலந்தே அவர்களின் தலைமையில் ஏனைய வண. பிக்குமார்களினால் நிகழ்த்தப்பட்டது. இந்நிகழ்வில் கௌரவ உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்தன அவர்கள், கௌரவ புத்தசாசன அமைச்சர் காமினீ ஜயவிக்ரம பெரேரா அவர்கள், அமைச்சர்கள். பாராளுமன்ற உறுப்பினர்கள், அரச அதிகாரிகள் பௌத்த அடியார்கள் மற்றும், ஏனைய அதிதிகளும் கலந்து கொண்டனர்.

### 04.5.2 தேசிய சுதந்திர தின சமய நிகழ்வுகள்

2019 பெப்ரவரி மாதம் 04 ஆம் திகதி கொண்டாடப்பட்ட 72 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டான பௌத்த சமய நிகழ்வுகள் அதிகாலை 06.00 மணிக்கு கொழும்பு 03 இல் அமைந்துள்ள தர்மகீர்த்யாராமையில் (பொல்வத்தை விகாரை) வேதர மகிந்த நாயக்க தேரர் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பாராளுமன்ற கௌரவ சபாநாயகர் அவர்கள், கௌரவ புத்தசாசன அமைச்சர் காமினீ ஜயவிக்ரம பெரேரா அவர்கள், அமைச்சர்கள். பாராளுமன்ற உறுப்பினர்கள், அரச அதிகாரிகள் பௌத்த அடியார்கள் மற்றும் , ஏனைய அதிதிகளும் கலந்து கொண்டனர்.

### 04.5.3. தேசிய வெசாக் உற்சவம்

ஸ்ரீ பு.வ. 2563 இன் அரச வெசாக் உற்சவமானது **"பன்ஹங் தம்மங்விப்பஹாய சுக்கங் ஹாவேத" (பாவங்களை விடுத்து தர்மம் செய்வோம்)** என்னும் தலைப்பின் கீழ் 2019 மே மாதம் 17 ஆம் திகதி முப்பீடங்களினதும் மகாநாயக்க தேரர்கள் மற்றும் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் மாண்புமிகு ஜனாதிபதி அவர்களின் தலைமையில் காலி மாவட்டத்தின் தொட்டகமுவை ரத்பத் ரஜமகா விகாரையில் இடம்பெற்றது.

### வெசாக் வார நிகழ்ச்சித்திட்டம் (2019.05.15 தொடக்கம் 2019.05.21)

நாட்டின் அனைத்து பிரதேச செயலகங்களிலும் வெசாக் வாரத்தினை முன்னிட்டு கீழுள்ள தலைப்புகளின் கீழ் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. அத்துடன் காலி மாவட்டத்தில் இந்த நிகழ்வுகள் ஜனவரி மாதம் தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் 2019.05.18 ஆம் திகதி பௌர்ணமி தின சமய நிகழ்வுகளும், 2019.05.15 ஆம் திகதி தொடக்கம் 2019.05.21 வரையிலான வெசாக் வார சமய நிகழ்வுகளும் மிகவும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டன.

முதலாவது நாள் - சூழலும் புத்த தர்மமும்
இரண்டாவது நாள் - பௌரணமி தின சமய நிகழ்வுகள்
மூன்றாவது நாள் - சுகாதாரமும் புத்த தர்மமும்
நான்காவது நாள் - இலக்கியமும் புத்த தர்மமும்
ஐந்தாவது நாள் - கலையும் புத்த தர்மமும்
ஆறாவதுநாள் - தொழிலாளர்களம் புத்த தர்மமும்
ஏழாவது நாள் - சமூக அபிவிருத்தி, பொருளாதாரம் மற்றும் புத்த தர்மம்

அத்துடன் அரச வெசாக் உற்சவத்துடன் இணைந்ததாக குருநாகல் மாவட்டத்தில் கீழே குறிப்பிட்டுள்ளவாறான பல முன்னோடியான நிகழ்வுகள் பிரதேச செயலக மட்டத்தில் நடாத்தப்பட்டன.

| நிகழ்வின் பெயர் | நடாத்தப்பட்ட நிகழ்வுகளின் எண்ணிக்கை |
|---|---|
| ஆன்மீக சிந்தனை மேம்பாட்டு நிகழ்வுகள்<br>01. மாணவர்களுக்கு<br>02. ஆசிரியர்களுக்க<br>03. பிக்குமார்களுக்க | <br>22<br>22<br>22 |
| பௌத்த அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சி நிகழ்வுகள் | 05 |
| சாமனேர பிக்குமார்களுக்கான பயிற்சி நிகழ்வுகள் | 10 |
| பிக்குணிமார்களுக்கான பயிற்சி நிகழ்வுகள் | 04 |
| பெற்றோர் மற்றும் பிள்ளைகளுக்கிடையில் உறவை வலுப்படுத்தும் வகையிலான நிகழ்வுகள் | 29 |
| சுகாதாரமும் புத்த தர்மமும் பற்றிய நிகழ்வுகள் | 19 |
| தொழிலாளர்களம் புத்த தர்மமும் | 19 |
| பக்திப் பாடல் நிகழ்வுகள் | 23 |
| புத்த தர்மத்தினால் வளர்க்கப்பட்ட சிங்கள இலக்கியம் மற்றும் கலை | 19 |
| ஒழுக்க விழிப்புணர்கள் பற்றிய வீதி ஊர்வலங்கள் | 20 |
| வலுவான சூலழுக்கு புத்த தர்மத்தின் படிப்பினைகள் | 20 |
| சமூக அபிவிருத்தி மற்றும் புத்த தர்மம் நிகழ்ச்சித்திட்டம் | 04 |

### .4.6.4சமித்தா ஞாபகார்த்த உற்சவம்

2327 ஆவது சங்கமித்தா ஞாபகார்த்த விழா மற்றும் உற்சவம் என்பன 2018.12.11 மற்றும் 23 திகதி அனுராதபுரம், குருநாகல் மற்றும் பொலனறுவை மாவட்டங்களைச் சேர்ந்த 300 பிக்குணிமார்களின் பங்களிப்புடன் அனுராதபுரம் விகாரமகாதேவி ஆராமையை மையமாகக் கொண்டு இடம்பெற்றது.

### 4.6.5 பிக்குணிமார்களின் தேசிய மகாநாடு

நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களையும் சேர்ந்த 1000 பிக்குணிமார்களின் பங்களிப்புடன் தேசிய சில்மாதா மாநாடானது களனி மானெல்வத்தை நாகாநந்த தேசிய கருத்தரங்கு மண்டபத்தில் 2019.11.29 ஆம் திகதி மிகவும் கோலகலமாக இடம்பெற்றது.

### 04.6 உபசம்பதா உற்சவங்களுக்கான நிதியுதவி வழங்குதல்

ஒவ்வொரு நிக்காயகளினதும் பதிவாளர் தேரர்களினால் வழங்கப்படும் விபரங்களுக்கமைய இடம்பெறும் உபசம்பதா புண்ணிய கருமத்தின் போது குறித்த பகுதியின் பிரதேச செயலாளர்களின் கண்காணிப்பின் கீழ் போக்குவரத்துச் செலவுகள் வழங்கப்படும்.

| நிக்காய பிரிவு | பிக்குமார்களன் எண்ணிக்கை | வழங்கப்பட்ட போக்குவரத்துச் செலவு |
|---|---|---|
| ஸ்யாமோபாளி வம்ச மகா நிக்காயவின் ஸ்ரீ ரோஹண பிரிவு | 29 | 87,000.00 |
| ஸ்யாமோபாளி வம்ச மகா நிக்காயவின் அஸ்கிரி மல்வத்து மகா விகாரை பிரிவு | 400 | 1,200,000.00 |
| ஸ்யாமோபாளி வம்ச வனவாச பிரிவு | 28 | 84,000.00 |
| ஸ்ரீ லங்கா உடரட்ட அமரபுர பிரிவு | 29 | 87,000.00 |
| அமரபுர ஸ்ரீ சத்தம்ம வங்ஸ மகா நிக்காய | 41 | 123,000.00 |
| கோடடை ஸ்ரீ கல்யாணி சாமக்ரீ மகா சங்க சபை | 44 | 132,000.00 |
| **மொத்தம்** | | **2,028,000.00** |

### 04.8. ஈமைச் சடங்குகளுக்கான செலவை மேற்கொள்ளுதல்

இத்திட்டத்தின் கீழ் இறைபதம் எய்திய வணக்கத்திற்குரிய பிக்குமார்கள் மற்றும் பிக்குணிமார்களின295 ஈமைச் சடங்கு நிகழ்வுகளின் பொருட்டு ரூ.3,222,000.00 நிதியுதவியானது பெற்றுக்கொடுக்கப்பட்டது.

### 04.09. சலுகைக் கட்டண அடிப்படையில் விகாரைகளுக்கு தொலைபேசி, மின்சாரம், நீர் வசதியினைப் பெற்றுக் கொடுத்தல்

இதன் கீழ் சலுகைக் கட்டண அடிப்படையில் விகாரைகளுக்கு தேவையான தொலைபேசி, மின்சாரம், நீர் வசதியினை வழங்குவதற்குத் தேவையான சிபாரிசுகள் பெற்றுக்கொடுக்கப்படுகின்றது. அதற்கமைய 2018.09.21 ஆம் திகதி வரையில் இத்திட்டத்தின் கீழ் 10 விகாரைகளுக்கான சிபாரிசுகள் பெற்றுக்கொடுக்கப்பட்டது.

**04.10 பல்வேறு கொடுப்பனவுகள்**

**2019 இல் பலதரப்பட்ட கொடுப்பனவுகளில் கலைஞர்கள் மற்றும் அறிஞர்களை கௌரவித்தல்**

| தொடர் இலக்கம் | மாவட்டம் | பிரதேச செயலகம் | நிதியுதவி | மாவட்டத்திற்கு வழங்கப்பட்ட மொத்த நிதி | நிதி வழங்கப்பட்டதன் நோக்கம் |
|---|---|---|---|---|---|
| 1 | | பண்டாரகம | 15,000.00 | | விக்ரமசீலா பிரிவெனா, விக்ரமசீலா மகா பெரஹரா |
| 2 | | | 15,000.00 | | வீதாகம புராண மகா விகாரை விதாகம பண்டாரகம விதாகம கலாசார உற்சவத்தின் ரந்தோலி மகா பெரஹரா |
| 3 | | பாணந்துறை | 15,000.00 | | முல்கிரிகலை சீலப்பிரிய சில் மாதாவின் துறவு வாழ்க்கையில் 40 வருடப் பூர்த்தியை முன்னிட்டு நடைபெற்ற விழா. |
| 4 | | | 15,000.00 | | அபினவாராமை, நல்லுருவை, பாணந்துறை நவம் பெரஹரா |
| 5 | களுத்துறை | | 15,000.00 | 135,000.00 | வேவலை ஹொரணை ஸ்ரீ இசிபத்தனாராமை – வருடாந்த மகா பெரஹராவின் மாறுவேட நடனக்குழு |
| 6 | | ஹொரணை | 15,000.00 | | ஸ்ரீ பூர்வாராமை மொரகஹஹேன மில்லேவை – மிகிந்து மகா பெரஹரா |
| 7 | | | 15,000.00 | | ஸ்ரீ ஜயவர்த்தனாராமை ரஜமகா விகாரை ஒலபொடுவை ஹொரணை – ரய்கம்புர ஒலபொடுவை நவம் மகா பெரஹர |
| 8 | | புலத்சிங்ஹலை | 15,000.00 | | ஸ்ரீ ஞானாலோக்க மகா பிரி-வெனா புலத்சிங்ஹலை அனுபுது மிகிந்து மகா பெரஹரா |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9 | | **பேருவலை** | 15,000.00 | | ஸ்ரீ சுகததஸ்ஸனாராமை மகா விகாரை வராப்பிட்டிய தர்காநகர், புனித அரசு மரத்திற்கும் தூபிக்குமான காவியுடை சமர்ப்பண பூஜை வழிபாடுகள் |
| 10 | குருநாகல் | **நிக்கவெரட்டிய** | 15,000.00 | **80,000.00** | பாலித பிரிவென் விகாரை சமதராப்பிட்டிய நிக்கவரெட்டிய அனுபுது மிகிந்து பெரஹரா |
| 11 | | **மாவட்ட செயலகம்** | 25,000.00 | | மாவட்ட செயலகத்தின் பொசொன் வழிபாட்டு நிகழ்வுகள் |
| 12 | | **குளியாப்பிட்டிய கிழக்கு** | 15,000.00 | | ஸ்ரீ சாசனாலங்கார மகா விகாரை அஸ்வெத்துமை குளியாப்பிட்டி துருத்து மகா பெரஹரா |
| 13 | | **வாரியப்பொலை** | 25,000.00 | | வாரியப்பொலை சுமங்கல பிரிவெனா – வாரியப்பொலை சுமங்கல தேரரின் 204 ஆவது ஞாபகார்த்த விழா |
| 14 | கம்பஹா | **மீரிகம** | 15,000.00 | **30,000.00** | சேனாநாயக்க முதலிந்தா ராமை பிரிஸ்யாலை அம்பேபுஸ்ஸ வப் மஹா பெரஹரா |
| 15 | | **களனி** | 15,000.00 | | நாரம்மினிய, களனி அசோகாராமை - சிலுமின மகா பெரஹரா |
| 16 | காலி | **ஹபராதுவை** | 50,000.00 | **65,000.00** | கெத்தராமை ஹெருமல்கொடை மேற்கு அங்குலுகஹ பொசொன் மகா பெரஹரா |
| 17 | | **நாகொடை** | 15,000.00 | | உடுகம, காலி, ஸ்ரீ சாசன லங்காராமை புராண விகாரை - ஸ்ரீ மகா போதிராஜ மகா பெரஹரா |
| 18 | கொழும்பு | **திம்பிரிகஸ்யாய** | 15,000.00 | **180,000.00** | அத்துல தஸ்ஸன பௌத்த மத்திய நிலையம் பௌத்தலோக்க மாவத்தை கொழும்பு 07 தஸ பாரமிதா பெரஹரா |
| 19 | | | 15,000.00 | | விசுத்த தர்மவர்தனாராம 758/5 பேஸ்லைன் பாதை கொழும்பு 09 கம்பார சித்த சூனிய தேவர்களுக்கான அபிஷேக வழிபாடுகள். |
| 20 | | | 15,000.00 | | கிருலப்பனை ஸ்ரீ புஷபாராமை மிஹிந்து மகா பெரஹரா |
| 21 | | | 15,000.00 | | சேருவிலை பௌத்த மத்திய நிலையம் இல. 410/160 பௌத்தலோகா மாவத்தை கொழும்பு 07 மல்லிகைப்பூ அர்ச்சனை அனுராதபுரம் |
| 22 | | **கெஸ்பேவை** | 15,000.00 | | ஸ்ரீ தர்மகீர்த்தி அறநெறிப் பாடசாலை தம்மதீபாராமை வேவலை பிலியந்தலை பரிசுகள் மற்றும் சான்றுதழ் கையளிப்பு வைபவம் |
| 23 | | **மஹரகம** | 15,000.00 | | ஸ்ரீ சங்கமித்தாராமை பிக்குணி ஆராமை மாதிவெலை கோட்டை |
| 24 | | **ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை** | 50,000.00 | | ஸ்ரீ ராஜமகா விகாரை ஜயவர்த்தபுர கோட்டை தலதா பெரஹர |
| 25 | | **கொலொன்னாவை** | 15,000.00 | | ஸ்ரீ சுரம்யாராமை மாதின்னா கொடை ராஜகிரிய வருடாந்த எசல பெரஹரா |
| 26 | | **(காசோலைகள்) %லம்** | 25,000.00 | | ஹிக்கடுவை ஸ்ரீ சுமங்கல தேரரின் 108 ஆவது ஞாபகார்த்த விழா வித்யோசு பிரிவெனா, மாளிகாகந்தை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 27 | | அரச அச்சகம் | 120,750.00 | **220,800.00** | வண. போபிடியே தம்மிஸ்ஸர தேரருக்கு களுத்துறை தொகுதியின் பிரதான சங்கநாயக்கர் பதவி கையளிப்பதை முன்னிட்டு அச்சிடப்பட்ட நூல் தொகுதி |
| 28 | | | 100,050.00 | | இலங்கை ராமக்ஞ மகா நிக்காயவின் வருடாந்த திரிபிடக தர்ம நூல்கள் 600 அச்சிட்டமை. |
| 29 | மொனராகலை | **புத்தலை** | 15,000.00 | **15,000.00** | ராஜமகா விகாரை மாளிகாவிலை பிணர மகா பெரஹரா, புத்தலை |
| 30 | கண்டி | மாவட்ட செயலகம் | 25,000.00 | **85,000.00** | சங்கராஜ மகா விகாரை சங்கரா தேரர் ஞாபகார்த்த விழா. |
| 31 | | கங்கவட்ட கோரளை | 15,000.00 | | மல்வத்தை மகா விகாரை கண்டி – அக்க மகா பண்டிதர் அளுத்கம தம்மானந்த தேரரின் ஞாபகார்த்த மகோற்சவம். |
| 32 | | காவல பாட்டாய (பஸ்பாகே கோரளை) | 15,000.00 | | ஸ்ரீ போராஜராம ரொசெல்லை நாவலப்பிட்டி – மகா பெரஹரா உற்சவம் |
| 33 | | மினிப்பே | 15,000.00 | | சம்புத்த ஜயந்த மகா விகாரை – மகா அஸ்வெத்தும ஹசலா சம்புது மகா பெரஹரா |
| 35 | | பாத்தஹேவாஹெட்டை | 15,000.00 | | ஸ்ரீ மனாராமை, கந்தேவலை, மாரஸ்ஸன, பாதஹேவாஹெட்டவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஆயிரம் தூபிகள், சிலைகளுக்கு தாதுக்கள் பிரதிஷ்டை செய்யும் வைபவம். |
| 36 | அம்பாறை | மஹஓயா | 25,000.00 | **25,000.00** | அரன்தலாவை பிக்குமார்கள் கொலைச் சம்பவத்திற்கு 32 வருடங்கள் பூர்த்தியடைவதை முன்னிட்டு இடம்பெற்ற ஞாபகார்த்த விழா. |
| 37 | புத்தளம் | புத்தளம் | 15,000.00 | **15,000.00** | பிரதேச வாசிகளுக்கும், நாட்டிற்கும் நன்மை வேண்டி இடம்பெற்ற தர்ம யாத்திரை – பிரதேச செயலகம். |
| 38 | பொலன்னறுவை | திம்புலாகலை | 15,000.00 | **15,000.00** | அரலகங்விலை ஸ்ரீ சத்தாதிஸ்ஸ ராமை மகா விகாரை எசல மகா பெரஹரா. |
| 39 | இரத்தினபுரி | பலாங்கொடை | 15,000.00 | **15,000.00** | ஸ்ரீ சாங்கி மகா சுதர்மாராமை தும்பகொடை பலாங்கொடை - மிஹிந்து மகா பெரஹரா |
| 40 | அம்பாந்தோட்டை | வலஸ்முல்லை | 20,000.00 | **20,000.00** | சித்தம்கல்லென ரஜமகா விகாரை, ரம்மலை வராப்பிட்டி, வலஸ்முல்லை – எசல மகா பெரஹரா. |
| 41 | நுவரெலியா | கொத்மலை | 15,000.00 | **15,000.00** | ஸ்ரீ முருகன் கோயில் மொரபே கொத்மலை – வருடாந்த பெரஹரா உற்சவம். |
| மொத்தம் | | | **915,800.00** | **915,800.00** | |

# 05. கருத்திட்டப் பிரிவு

**05.1 அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கருத்திட்டம்**

அறநெறிப்பாடசாலைகளில் கடமையாற்றும் ஆரம்ப நிலை புதிய ஆசிரியர்களின் ஆற்றல்களை விருத்தி செய்யும் பொருட்டு இரண்டு நாள் பயிற்சித் திட்டமானது வருடாந்தம் பிரதேச செயலக மட்டத்தில் இக்கருத்திட்டத்தின் கீழ இடம்பெற்று வருகின்றது. இதன் பொருட்டு தேசிய மற்றும் பிரதேச மட்டத்தில் புகழ்பெற்ற வளவார்களின் பங்களிப்புடனும் இத்திணைக்களத்தின் உத்தியோகத்தர்களினதும் பங்களிப்புடனும் மேற்கொள்ளப்படுகின்றது. பிரதேச மட்டத்தில் இடம்பெறும் பயிற்சிகள் மேலதிக செலவுகள் இன்றி மிகவும் குறைந்த செலவுடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அதற்கமைய 2019 ஆம் வருடத்தில் நாடாளவிய ரீதியில் ஆசிரியர்களுக்கான பயிற்சி நிகழ்வுகள் 48 நடாத்தப்பட்டுள்ளதுடன் 9640 ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர்.

**05.1.1 எதிர்கால சவால்கள்**

அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களின் பணியை மேம்படச் செய்து அறநெறிப்பாடசாலை மாணவர்களிடையே நற்பழக்க வழக்கங்களை மேம்படுத்தும் இக்கருத்திட்டத்தின் பொருட்டு போதிய நிதி கிடைக்கப்பெறாமை.

**05.2 அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கான அடையா அட்டைகளைத் தயாரித்தல்.**

**05.2.1 விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளுதல்.**

அறநெறிப்பாடசாலை ஆசிரியர் சேவையில் தொடர்ச்சியாக ஈடுபட்டு ஒரு வருடத்தைப் பூர்த்தி செய்துள்ளவர்களுக்கு இவ் ஆசிரியர்களுக்கான அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பிக்க முடியும். இதற்கான விண்ணப்பப்படிவத்தை பௌத்தமத அலுவல்கள் திணைக்களத்திலும் பிரதேச செயலகங்களிலும் பெற்றுக்கொள்ள முடியும்.

**05.2.2 தேவையான தகவல்கள்**

குறித்த விண்ணப்பப்படிவததைச் சரியாகப் பூர்த்தி செய்து அறநெறிப்பாடசாலை பிரதான ஆசிரியர், பிரதேச சாசனப் பாதுகாப்புச்சபை பதிவாளர் தேரர், பிரதேச செயலாளர் ஆகியோரின் கையொப்பம் மற்றும் பதவி முத்திரையுடன் திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அத்துடன் அறநெறிப்பாடசாலை சீருடையான இரண்டு வண்ணப்படங்களை உரிய இடத்தில் இணைத்தல் வேண்டும்.

**05.2.3 திணைக்களத்திற்கு கிடைக்கப்பெற்றதன் பின்னர் பணியாற்றும் முறை.**

சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் திணைக்களத்திற்கு கிடைக்கப்பெற்றதன் பின்னர் அவை மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்து மயப்படுத்தப்படும். இக்கணனி மயப்படுத்தலானது சரியானதா என மீள்பரிசீலனை செய்யப்படுவதுடன், இவ்வாறு மூன்று தடவைகள் மீள் பரிசீலனை செய்யப்படும்.

அதன் பின்னர் அவை அச்சுப் பணிகளின் பொருட்டு உரிய அச்சகத்திடம் ஒப்படைக்கப்படும். அச்சுப்பணிகள் நிறைவு பெற்றதன் பின்னர் குறித்த அடையாள அட்டைகள் உரிய விண்ணப்பப்படிவங்களுடன் கொடுப்பனவுகளுக்குரிய வவுச்சர்கள் தயாரித்து சமர்ப்பிக்கப்படும். அடையாள அட்டைகள் பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்டு அதன் பின்னர் அறநெறிப்பாடசாலைகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும்.

**05.2.4 அடையாள அட்டைகளைப் புதுப்பித்தல்**

அடையாள அட்டையைத் தொடர்ந்தும் உபயோகிக்க முடியாது சேதமடைந்த நிலையிலும், தேவையான தகவல்கள் அழிந்து போயுள்ள நிலையிலும் புதுப்பித்தலின் பொருட்டு விண்ணப்பிக்க முடியும். இதன்போது பழைய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டியிருப்பதுடன் மேற்கூறப்பட்டதைப்போன்று புதிய விண்ணப்பப்படிவம் ஒன்றைப் பூர்த்தி செய்து விண்ணப்பித்தல் வேண்டும்.

**05.2.5 அடையாள அட்டை தொலைந்த சந்தர்ப்பமொன்றில் புதிய அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ளல்**

அடையாள அட்டை தொலைந்த விபரங்களைக் குறிப்பிட்ட கடிதமொன்றுடன் பிரதான ஆசிரியர், பிரதேச சாசனப் பாதுகாப்பு சபை பதிவாளர் தேரரினதும், பிரதேச செயலாளரினதும் சிபாரிசுடன் சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் மேற்குறிப்பிட்டவாறான புதிய விண்ணப்பப்படிவமொன்றைப் பூர்த்தி செய்து அனுப்புதல் வேண்டும்.

2019 இல் அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கான 5214 அடையாள அட்டைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

**05.2.6 பிரச்சினைகள்**

பெருமளவிலான அடையாள அட்டைகள் கிடைக்கப் பெறுவதன் காரணமாக அடையாள அட்டை விநியோகத்தின் போது குறிப்பிடத்தக்க தாமதம் ஏற்படுகின்றது. உதாரணமாக 2019 இல் கிடைக்கப்பெற்ற விண்ணப்பப்படிவங்களில் சுமார் 800 விண்ணப்பப்படிவங்களுக்கான அடையாள அட்டைகளைத் தயாரிக்க முடியாது போனது. பிரதேச செயலகங்களினால் திணைக்களத்திற்கு அவற்றைச் சரியான முறையில் திருத்திப்பெற்றுக் கொள்வதற்குக் கால தாமதம் ஏற்படுகின்றது.

## 05.3 தஹம் சரசவிய புத்த தர்ம டிப்ளோமா கற்கை நெறி

இக்கற்கை நெறியினை நடாத்துவதற்கான அடிப்படை நோக்கமாவது உயர்தரம் சித்தியடையாது அறநெறிப்பாடசாலைகளில் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களுக்குத் தேவையான அறிவைப் பெற்றுக் கொடுப்பது மற்றும் அவர்களை உயர்கல்வியில் ஈடுபடச் செய்வதன் மூலம் ஆசிரியர்களை அவர்களின் கடமையில் ஆற்றல் மிகுந்தவர்களாக விளங்கச் செய்வதாகும். அதற்கமைய 2005, 2006 ஆம் வருடங்களில் இந்த நிகழ்ச்சித் திட்டமானது ஆரம்பிக்கப்பட்டது. இதற்கமைய இக்கற்கை நெறியின் முதலாவது குழுவிற்கான கற்பித்தலானது ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தினால் 19 மாவட்டங்களில் 27 மத்திய நிலையங்களில் 1413 ஆசிரியர்களின் பொருட்டு ஆரம்பிக்கப்பட்டதன், பின்னர் இலங்கை பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் என்பனவற்றினால் இந்த டிப்ளோமா கற்கைநெறியைக் கற்று சுமார் 10,000 பேர் சித்தியடைந்துள்ளனர்.

இப்பணிகளை வெற்றிகரமாக மேற்கொள்வதன் பொருட்டு புத்தசாசன அமைச்சு, பௌத்த மத அலுவல்கள் திணைக்களம், மாவட்ட சாசனப் பாதுகாப்பு சபை, மாவட்ட செயலகம், பிரதேச செயலகம், கற்கைநெறி இடம்பெறும் மத்திய நிலையம் போன்றவை எமக்கு பூரண ஒத்துழைப்பைப் பெற்றுத்தருகின்றன.

அதற்கமைய மாணவர்களைச் சேர்த்தல், விரிவுரையாளர்களை இணைத்துக் கொள்ளல், பரீட்சைகளை நடாத்துதல், விடயம் தொடர்பான நூல்களை அச்சிடும் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

இந்த இரண்டு டிப்ளோமா கற்கைநெறிகளிலும் சித்தி பெற்ற மாணவர்களின் பொருட்டு டிப்ளோமா சான்றிதழ் கையளிப்பு வைபவமொன்று கற்கை நெறியின் பொருட்டு வருடாந்தம் சுமார் 2500 பிக்குமார்கள், பிக்குணிமார்கள் மற்றும் அறநெறிப்பாடசாலை ஆசிரியர்கள் பதிவு செய்கின்றனர். இதில் முதலாம் வருட பரீட்சையில் சித்தியடைந்த அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களின் பொருட்டு பூர்த்தி செய்த ஆசிரியர்களுக்கு உயர் டிப்ளோமா சான்றிதழும் வழங்கப்படும்.

மேலும் இக்கற்கை நெறியைப் பூர்த்தி செய்த அறநெறிப்பாடாசலை ஆசிரியர்களுக்கு இலங்கை பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் ஆகியவற்றால் முன்னெடுக்கப்படும் வெளிக்கள பட்டப்படிப்பு கற்கை நெறியின் பொருட்டு க.பொ.த (சா.்.த) சித்தியடன் விண்ணப்பிக்க முடியும். இக்கற்கை நெறியின் பொருட்டு வருடாந்தம் 08 மில்லியன் நிதியானது செலவு செய்யப்படுகின்றது. தற்போது தஹம் சரசவிய கற்கைநெறியின் இரண்டாம் வருடத்திற்கான பரீட்சையானது 11 மாவட்டங்களில் இடம்பெறுகின்றது. புதிய கற்கைநெறிகளை ஆரம்பிப்பதற்குத் தேவையான பணிகள் இடம்பெற்று வருவதுடன் அதனை 2020.05.16 ஆம் திகதி 19 மாவட்டங்களில் நடாத்துவற்குத் தேவையான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## சவால்கள்

தஹம் சரசவிய புத்த தர்ம டிப்ளோமா கற்கைநெறியானது ஒரு மாவட்டத்திற்கு ஒரு மத்திய நிலையம் வீதம் தெரிவுசெய்து மேற்கொள்ளப்படுவதனால், உதாரணமாக அநுராதபுரம் போன்ற மாவட்டங்களில் அவ்வாறு ஒரு மத்திய நிலையத்தைப் பயன்படுத்துமிடத்து, மாணவர்களின் வரவில் குறைவு காணப்படும். இதற்கு காரணம் (கெபித்தி கொல்லேவை, பதவிய) போன்ற தூர இடங்களில் இருந்து வருகை தரவேண்டியிருப்பதாகும். இதனை நிவர்த்தி செய்வதற்கு முடியாமலிருக்கக் காரணம் மத்திய நிலையங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் பொருட்டு வருடாந்தம் கிடைக்கப்பெறும் நிதி போதுமானதாக இல்லாமையாகும்.

கற்கைநெறியின் பொருட்டு தெரிவு செய்யப்படுபவர்களின் எண்ணிக்கையை இதை விடவும் அதிகரிக்க முடியாமலிருப்பதற்கு காரணம் இதற்கென கிடைக்கப்பெறும் நிதியுதவி போதாமையே ஆகும்.

## 05. திரிபீடத்தினை தேசிய கடமையாகப் பிரகடனம் செய்தல்

திரிபீடத்தினை தேசிய உடமையாகப் பிரகடனம் செய்வது தொடர்பான 2019.'.13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலமாக திரிபீடகமானது தேசிய உடமையாகப் பிரகடனம் செய்யப்பட்டது.

மேற்கூறப்பட்ட வரத்தமானிக்கு அமைய திரிபீடக பாதுகாப்பு சபை ஒன்றை நிறுவுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளதுடன், ஒருங்கிணைப்பு செய்யப்பட்ட திரிபீடக நூல் ஒருங்கிணைப்பு சபை கூட்டததின் போது முன்மொழியப்பட்டு தெிவு செய்யப்பட்டதற்மைய 2019.07.31 ஆம் திகதி மாண்புமிகு ஜனாதிபதி அவர்களினால் திரிபீடக பாதுகாப்புசபை உறுப்பினர்களுக்கான நியமனங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.
மேற்கூறப்பட்டவாறு நியமனம் பெற்ற திரிபீடக பாதுகாப்பு உபசபைகள் நியமிக்கப்பட்டது.

1. சட்டதிட்டங்களை வகுப்பதற்கான உப சபை – அங்கத்தவர்கள் எண்ணிகை 07
2. புத்த ஜயந்தி நூற்தொகுப்பின் மேற்பார்வை உப சபை - அங்கத்தவர்கள் எண்ணிகை 02
3. பாளி அரிச்சுவடியை நூல் வடிவில் தொல்பதற்கான உப சபை - அங்கத்தவர்கள் எண்ணிகை 07
4. திரிபீடக ஆராய்வு மேம்படுத்தல் உப சபை - அங்கத்தவர்கள் எண்ணிகை 08
5. திரிபீடகத்திற்கு போலி அர்த்தங்கள் கற்பிக்கப்படுமிடத்து அவற்றை விமர்சனம் செய்வதற்கான உப சபை - அங்கத்தவர் எண்ணிகை 08
6. உப சபை இணைப்புக்குழு அங்கத்தவர் எண்ணிகை 04
   திரிபீடக பாதுகாப்பு சபையின் இரண்டாவது கூட்டத்தின் போது திரிபீடக பாதுகாப்பு சட்டமூலத்தின் மாதிரி வடிவம் தயாரித்து முடிக்கப்பட்டது.

### ஒருங்கிணைந்த திரிபீடகத்தை சிங்களத்திற்கு மொழி பெயர்த்தல்.

1.திரிபீடக ஒருங்கிணைப்பு சபை உறுப்பினர்களின் உணவுச் செலவுகளின் பொருட்டு நிதி ஒதுக்குதல்.
2.திரிபீடக ஒருங்கிணைப்பு சபை உறுப்பினர்களுக்கான மாதாந்த கொடுப்பனவுகளுக்கான நிதியை ஒதுக்குதல்.
3.சிங்களத்திற்கு மொழிபெயர்ப்பு செய்யப்பட்ட நூல்கள் கிடைக்கப்பெறுவதற்கு ஏற்ப அச்சுப்பணிகளுக்கு வழங்குதல்.
4.சிங்களத்திற்கு மொழிபெயர்ப்பு நூல்களின் பொருட்டு கிடைக்கப் பெறுவதற்கிணங்க நிதியை வழங்குதல்.
5.சிங்களததிற்கு மொழிபெயர்ப்பு செய்யப்பட்ட நூல்களை மாண்புமிகு ஜனாதிபதி அவர்களிடம் கையளித்தல்.

இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் பொருட்டு வருடாந்தம் 03 மில்லியன் நிதியானது செலவிடப்படுகின்றது.

## 05.4 பௌத்த கலைக்களஞ்சியம்

2500 ஆவது சம்புத்த ஜயந்தி கொண்டாட்டத்தின் இணைந்ததாக 1956 இல் ஆட்சியில் இருந்த அப்போதைய அரசினால் பௌத்த கலைக்களஞ்சியத்தை ஒருங்கிணைப்பு செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. 1957 இல் கலாசார அமைச்சின் கீழ் பேராசிரியர் ஜீ.பீ. மலலசேகர அவர்கள் இதன் பிரதான ஆசிரியராக நியமிக்கப்பட்டுள்ளதுடன், ஒரு கருத்திட்டமாக முன்னெடுக்கப்பட்டு வந்த பௌத்த கலைக்களஞ்சியமானது 2011 இல் ஆங்கில மொழியில் ஏஐஐ பாகங்கள் அச்சிட்டு முடிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய பௌத்த கலைக்களஞ்சியத்தின் இறுதிப் பாகமான சுசீ வெலும எனப்படும் சாராம்சத் தொகதியானது இறுதிக்கட்டப் பூர்த்தி நிலையில் காணப்படுகின்றது.

செயற்படாதிருந்த பௌத்த கலைக்களஞ்சியத்தின் பணிகள் அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைய 2018 இல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் தற்போதுள்ள ஆசிரியர் குழு சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டது. அதற்கமைய சாராம்சத் தொகுதியை முழுமையாகத் தொகுத்து பூர்த்தி செய்வதாகும். உலக மக்களுக்கு பரிசீலனை செய்து அறிவை மேம்படுத்தக் கூடிய அறிவுக் களஞ்சியமாகவும் உயர்கல்வியை மேற்கொள்பவர்களுக்கு ஆய்வு செய்வதற்கு ஏற்றவகையிலும் வசதிகளைக் கொண்டதாக பௌத்த கலைக்களஞ்சியத்தை அபிவிருத்தி செய்தல் வேண்டுமென்ற அறிஞர்களின் ஆலோசனைக்கமைய பௌத்த மத அலுவல்கள் திணைக்களமானது அதற்குரிய திட்டங்களைத் தயாரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன் கலைக்களஞ்சியத்தின் பிரதான ஆசிரியர் பதவியானது ஒருவரை ஒரு வருட கால ஒப்பந்த அடிப்படையில் சேவையில் இணைத்துக் கொள்வதுடன் தற்போது இப்பதவியானது வெற்றிடமாகக் காணப்படுகின்றது. பிரதி மற்றும் உதவி ஆசிரியர் பதவிக்கும் ஆட்கள் ஒப்பந்த அடிப்படையிலேயே இணைத்துக் கொள்ளப்படுகின்றனர். உதவி ஆசிரியர் பதவியானது தற்போது வெற்றிடமாகக் காணப்படுவதுடன் உப ஆசிரியர் பதவி மட்டும் நிரந்தரமான பதவியாகக் காணப்படுகின்றது.

மேலும் பிரதி ஆசிரியரின் சிபாரிசிற்கு அமைய கலைக்களஞ்சிய நூலகத்திற்கு நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன் தொடர்ந்தும் உள்நாட்டு மற்றும் வெளிநாடுகளில் இருந்து தருவிக்கப்பட வேண்டிய நூல்கள் பற்றிய விபரங்களைப் பெற்றுத் தருமாறு பௌத்த கலைக்களஞ்சிய சபைக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2020 ஆம் வருட நிறைவுக்கு முன்னர் கலைக்களஞ்சியத்தின்சாராம்சத் தொகுதியை அச்சிடுவதற்கு ஏற்ற வகையில் தொகுத்து பூர்த்தி செய்வது பிரதான இலக்காகும்.

## 05.5 சமாதான நீதவான் பதவிகளைப் பெற்றுக்கொடுத்தல்

அனைத்து வருடமும் ஆகஸ்ட் மாதம் 03 ஆம் திகதி இடம்பெறும் அறநெறிப்பாடசாலைகள் தினத்தைமுன்னிட்டு மாவட்ட ரீதியில் அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களைக் கௌரவிக்கும் நோக்குடன் பௌத்த மத அலுவல்கள் திணைக்களத்தினால் நீதி அமைச்சின் ஒத்துழைப்புடன் சமாதான நீதவான் பதவிகளைப் பெற்றுக்கொடுக்கப்படுகின்றது. இந்நிகழ்ச்சித் திட்டமானது அறநெறிக் கூட்டமைப்பின் மேன்மைப்படுத்துவதன் பொருட்டு மிகவும் பயனள்ள ஒரு கருத்திட்டமாகும். அறநெறிப்பாடசாலை ஆசிரியர் சேவையில் தொடர்ச்சியாக இருபது (20) வருடங்களைப் பூர்த்தி செய்து, 35 வயதைக் கடந்த க.பொ.த (உ∴த) சித்தி பெற்ற ஆசிரியர்கள் இதற்குத் தகுதி வாய்ந்தவர்களாகக் காணப்படுகின்றனர். அதற்கமைய கடந்த பல வருடங்களாக மாவட்ட ரீதியாக சமாதான நீதவான் பதவிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதுடன், அது பற்றிய தகவலகள் கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| வருடம் | சமாதான நீதவான் பதவி வழங்கப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை. | நியமனத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஏதுவாக கவனத்தில் கொள்ளப்பட்ட சேவைக்காலம் | மாவட்டம் |
|---|---|---|---|
| 2012 | 22 | 30 வருடங்கள் | நுவரெலியா |
| 2013 | 130 | 30 வருடங்கள் | குருநாகல் |
| 2014 | 91 | 30 வருடங்கள் | மாத்தளை |
| 2015 | 14 | 30 வருடங்கள் | பதுளை |
| 2016 | 142 | 30 வருடங்கள் | மொனராகலை |
| 2017 | 19 | 10 வருடங்கள் | முல்லைத்தீவு, வவுனியா |
| 2018 | 422 | 20 வருடங்கள் | இரத்தினபுரி |
| 2019 | 150 | 20 வருடங்கள் | பொலன்னறுவை |

மேலும் 2017 இல் கிடைக்கப் பெற்ற தரவுகளின் அடிப்படையில் 20 வருட சேவைக்காலத்தை பூர்த்தி செய்துள்ளதும் 35 வயதைக் கடந்த உயர்தரம் சித்தி பெற்ற அறநெறிப்பாடசாலை ஆசிரியர்கள் பற்றிய விபரம் கீழே குறிக்கிடப்பட்டுள்ளது.

| தொடர் இலக்கம் | மாவட்டம் | தகைமைகளைப் பூர்த்தி செய்த ஆசிரியர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | கொழும்பு | 975 |
| 02 | கம்பஹா | 739 |
| 03 | களுத்துறை | 731 |
| 04 | காலி | 501 |
| 05 | மாத்தறை | 607 |
| 06 | அம்பாந்தோட்டை | 312 |
| 07 | பதுளை | 237 |
| 08 | மொனராகலை | 100 |
| 09 | கண்டி | 366 |
| 10 | மாத்தளை | 173 |
| 11 | நுவரெலியா | 175 |
| 12 | குருநாகல் | 605 |
| 13 | புத்தளம் | 83 |
| 14 | அநுராதபுரம் | 345 |
| 15 | பொலன்னறுவை | 255 |
| 16 | கேகாலை | 396 |
| 17 | திருகோணமலை | 15 |
| **மொத்தம்** | | **6615** |

அதற்கமைய அறநெறிப்பாடசாலைகள் ஆரம்பிக்கபப்பட்டு 125 வருடங்கள் நிறைவடைவதை முன்னிட்டு இம்மறை நடாத்தப்படும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு அங்கமாக தகைமைப் பூர்த்தி செய்துள்ள மேலுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள 6615 பேருக்க சமாதான நீதவான் பதவிகளைப் பெற்றுக்கொடுப்பதற்க திட்டமிடப்பட்டுள்ளது.

**05.6 பிக்குமார்களின் பெற்றோருக்கு(புதுபுத் மாபிய உபகார) வீடுகளை நிர்மாணிக்கும் நிகழ்ச்சித்திட்டம்**

பௌத்த மத அலுவல்கள் திணைக்களம் அகில இலங்கை சாசனப் பாதுகாப்பு சபையின் ஒத்துழைப்புடன் 2010 ஆண்டு தொடக்கம் பிக்குமார்களின் பெற்றோருக்கான வீடுகளை நிர்மாணிக்கும் நிகழ்ச்சித்திட்டமானது ஆரம்பிக்கப்பட்டது.

இக்கருத்திட்டத்தின் கீழ் சம்புத்த சாசனத்தின் நிலையிறுதியின் பொருட்டு தமது குழந்தைகளை துறவற வாழ்க்கைக்கு அர்ப்பணித்து ஐந்து அல்லது அதற்கு மேம்பட்ட வருட காலத்தை பூர்த்தி செய்ததும் வசிப்பதற்கு பொருத்தமான வீடுகள் இன்றியும், வருமானம் குறைந்த பெற்றோருக்கு புதிய வீடுகளை கட்டுவதற்கு அல்லது பழைய வீடுகளைப் புனரமைப்பு செய்வதற்கு நிதியுதவி பெற்றுக் கொடுக்கப்பட்டது.

கடந்த வருடங்களில் அரச வெசாக் உற்சவத்தடன் இணைந்த விசேட கருத்திட்டமாக நடைமுறைப்படுத்தப்பட்ட இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நாடளாவிய ரீதியில் நிறுவப்பட்டுள்ள சாசனப்பாதுகாப்பு சபைகளை உள்ளடக்கியதாக ஒரு சாசனப்பாதுகாப்பு சபையினால் ஒரு குடும்பம் மட்டும் தெரிவு செய்யப்பட்டு ரூபாய் இரண்டு இலட்சம் நிதியுதவி வழங்கப்படுகின்றது. இதன் போது அரச வெசாக் உற்சவம் இடம்பெறம் மாவட்டத்தில் நிர்மாணிக்கப்படும் வீடுகள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டது. அதற்கமைய 2015 இல் பதுளை மாவட்டத்தில் 12 வீடுகளும், 2016 இல் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 08 வீடுகளும், 2017 இல் கேகாலை மாவட்டத்தில் 06 வீடுகளுமாக, 2013 தொடக்கம் 2017 வரையில் ரூபாய் ஒரு கோடி நாற்பத்து நான்கு இலட்சம் நிதியான பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. இதற்கான நிதி அகில இலங்கை சாசனப்பாதுகாப்பு சபை நிதியத்தின் மூலம் செயற்படுத்தப்படும் வருடாந்த அறநெறிப்பாடசாலை கொடி விற்பனை மூலம் கிடைக்கப்பெறும் வருமானத்திலிருந்து பெற்றுக்

# 06
# பிக்குமார்களை பதிவு செய்யும் பிரிவு

## 06.1. சாமனேர உபசம்பதா சான்றிதழ்களை விநியோகித்தல் மற்றும் பிக்குமார்களுக்கான அடையாள அட்டைகளை விநியோகித்தல்

இப்பிரிவினால் வழங்கப்படும் சேவைகள்

- ❖ புதிய சாமனேர உறுதிப் பத்திரங்களை பதிவு செய்தல்
- ❖ புதிய உபசம்பதா உறுதிப் பத்திரங்களை பதிவு செய்தல்
- ❖ துறவறத்திலிருந்து விலகிச் சென்றமைக்கான அத்தாட்சி சான்றிதழ்களை விநியோகித்தல்
- ❖ சாமனேர மற்றும் உாசம்பதா உறுதிமொழிப் பத்திரங்கள் தேவையான திருத்தங்களை மேற்கொள்ளுதல்
- ❖ பதிவு செய்யப்பட்ட சாமனேர மற்றும் உபசம்பதா உறுதிமொழிப் பத்திரங்களுக்கான சான்றிதழ்களை விநியோகித்தல்
- ❖ சாமனேர, மற்றும் உபசம்பதா தகவல்களை அன்றாடம் கணனிப்படுத்தல்
- ❖ சட்ட ரீதியான பிரச்சினைகளின் போது தேவையான சாட்சிகளை வழங்குதல்

### 06.1.1. 2019.01.01 தொடக்கம் 2019.12.31 வரை

| | | |
|---|---|---|
| 1. | பதிவு செய்யப்பட்ட சாமனேர பிக்குமார்களின் எண்ணிக்கை | - 3595 |
| 2. | பதிவு செய்யப்பட்ட உபசம்பதா பிக்குமார்களின் எண்ணிக்கை | - 1030 |
| 3. | துறவறத்தில் இருந்து விலகுவதற்கான அத்தாட்சி சான்றிதழ் விநியோகம் | - 1629 |
| 4. | விநியோகிக்கப்பட்ட பிக்குமார்களுக்கான அடையாள அட்டைகளின் எண்ணிக்கை | - 1780 |
| 5. | விநியோகிக்கப்பட்ட சாமனேர, உபசம்பதா சானறிதழ்களின் எண்ணிக்கை | - 26367 |

**06.1.2. விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்**

**06.2.** சாமனேர, உபசம்பதா பற்றிய ஆவணங்களை கணனிமயப்படுத்தல்.

06.2.1 புதிய சாமனேர, உபசம்பதா பிக்குமார்களின் சிந்தனை திறனை மேம்படுத்தும் வகையிலான பயிற்சி நிகழ்வுகளை நடாத்துதல்.

06.2.2.2019.01.01 ஆம் திகதி தொடக்கம் 2019.12.31 ஆம் திகதி வரையான நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான செயலாற்றுகை அறிக்கை

**சாமனேர மற்றும் உபசம்பதா ஆவணங்கள் மற்றும் தகவல்களை கணனிமயப்படுத்தல்.**

1931 இன் 19 ஆம் இலக்க பௌத்த விகாரைகள் மற்றும் அறக்கட்டளை நிலையங்கள் கட்டளைச் சட்டத்திற்கு அமைய துறவு வாழ்க்கையில் ஈடுபடும் மற்றும் உபசம்பதா பெறும் அனைத்து பிக்குமார்களும் பௌத்த மத அலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்தல் வேண்டும். அக்கட்டளைச் சட்டம் நடைமுறைக்கு வந்த நாள் தொடக்கம் இது வரை (2019.12.31) சாமனேர ஆவணங்கள் 107409 உம் உபசம்பதா ஆவணங்கள் 57200 உம் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இக்கட்டளைச்சட்டத்திற்கு அமைய ஏதேனும் தேவைகள் எற்படின் அவ்வாறு பதிவு செய்யப்பட்ட சான்றிதழின் பிரதியொன்று கோரப்படுமிடத்து குறித்த கட்டணத்தைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் விநியோகிக்க வேண்டியது பௌத்த மத அலுவல்கள் ஆணையாளர் நாயகத்தின் கடமையாகும். பெருமளவிலானவர்கள் அன்றாடம் தமது சான்றிதழ் பிரதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு வருகை தருவதுடன் அவர்களுக்கு தமது சான்றிதழின் பதிவிலக்கம் தெரியாத சந்தர்பங்களில், பௌத்த மத அலுவல்கள் திணைக்களத்தினால் முறையாகத் தரவேற்றம் செய்து பேணப்படும் சாமனேர மற்றும் உபசம்பதா பதிவேட்டில் இருந்து பதிவு இலக்கத்தை தேட வேண்டி ஏற்படுகின்றது. இது மிகவும் சிரமமானதும் கூடுவலாக நேரத்தை செலவிடும் செயலாகவும் காணப்படுவதனால், அதனை இலகுவில் நிறைவேற்றக்கூடிய வகையில் நவீன தொழிநுட்பத்தை பயன்படுத்தி இவ் அனைத்து ஆவணங்கள் மற்றும் தகவல்களை கணனி மயப்படுத்தவதன் பொருட்டு மென்பொருளொன்று தயாரிக்கப்பட்டு தகவல் வலையமைப்பொன்று கட்டமைக்கப்பட்டள்ளது. இந்த மென்பொருளின் மூலம் தற்போது (2019.12.31 ஆம் திகதிக்கு) உபசம்பதா பிக்குமார் பற்றிய தகவல்கள் மற்றும் அவணங்கள் 22212 உம் (1995 ஆம்

ஆண்டு வரை) சாமனேர பிக்குமார்களின் தகவல்கள் மற்றும் அவணங்கள் 53037 உம் (2005 வருடம் வரை) தகவல் கட்டமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**விசேட வெற்றிகள் -**

சாமனேர, உபசம்பதா பற்றிய ஆவணங்களை கணனிமயப்படுத்தும் மென்பொருளை உபயோகப்படுத்தி 2019 ஆம் வருடத்தில் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகங்களான இரத்தினபுரி, கண்டி மற்றும் குருநாகல் அலுவலகங்களில் ஊடாக சாமனேர, உபசம்பதா சான்றிதழ்களை விநியோகிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

இதன் மூலம் பின்தங்கிய பகுதியில் இருந்து பௌத்த மத அலுவல்கள் திணைக்களத்திற்கு சமூகமளித்து நிறைவேற்றிக் கொள்ள வேண்டிய பணியை தமக்கு இலகுவான பகுதியில் நிறைவேற்றிக் கொள்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. விகாரைகள், அறக்கட்டளை நிலையங்கள் கட்டளைச்சட்டத்தின் பிரகாரம் எந்தவொரு பிக்குவும் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் தம்மை பதிவு செய்வதை தவிர்த்துக்கொள்ள வலியுறுத்தப்பட்டுள்ளதுடன் இந்த மென் பொருளின் மூலமாக இலகுவாக அதனைத் தடுக்கமுடியும்.

**எதிர்கால இலக்கு-**

சாமனேர,உபசம்பதா பற்றிய ஆவணங்களை கணனி மயப்படுத்தும் மென்பொருளை உபயோகப்படுத்தி 2020.03.10 ஆம் திகதி தொடக்கம் மாவட்ட செயலகங்களினூடாக சாமனேர, உபசம்பதா சான்றிதழ் பிரதிகளை விநியோகிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

புதிய சாமனேர, உபசம்பதா பிக்குமார்களின் சிந்தனைகளை மேம்படுத்துவதன் பொருட்டு தேவையான பயிற்சி நிகழ்வுகளை நடாத்துதல்

**அறிமுகம்**

சம்புத்த சாசனத்தின் நிலையுறுதி மற்றும் மேம்பாட்டின் பொருட்டு புதிய சாமனேர, உபசம்பதா பிக்குமார்களுக்கு அவசியமான அறிவு, புரிந்துணர்வு, கீழ்படிதல் பொன்ற பண்புகளை போதிக்கும் நோக்குடன் புத்தசாசன அமைச்சு, பௌத்த மத அலுவல்கள் திணைக்களம் என்பன இணைந்து நாடெங்கிலும் வாசம் செய்யும் புதிய சாமனேர, உபசம்பதா பிக்குமார்களுக்கென அதிவணக்கத்திற்குரிய மகநாயக்க தேரர்களினதும், அறிஞர்களினும் வழிகாட்டலின் கீழ் மாவட்ட ரீதியான பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்று 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. 2019 ஆம் ஆண்டில் இத்தகைய நிகழ்வுகள் நடாத்தப்பட்டன.

**சாமனேர பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்**

**இலக்கு**

தற்போது இலங்கையில் வாசம் செய்யும் பதிய சாமனேர, உபசம்பதா பிக்குமார்களின் அன்றாட செயற்பாடுகள், சமய பழக்க வழங்கங்கள் மற்றும் துறவு வாழ்க்கையை வெற்றகரமாக மேற்கொள்ளுவதற்கு தேவையான அறிவையும் பிரயோக ரீதியிலான பயிற்சியையும் பெற்றுக் கொடுத்தல். சாமனேர பிக்குமார்களுக்கு சமயச் செயற்பாடுகளை முன்னெடுத்தல் தொடர்பான பயிற்சியைப் பெற்றுக்கொடுத்தல் மற்றம் பிக்குமார்களின் அறிவு, ஆற்றல்,சிந்தனை திறன் என்பவற்றை மேம்படுத்தல் (இந்த இலக்குகளை அடையும் பொருட்டு, சகமனேர பிக்குமார்களின் மனோதிடத்தை மேம்படுத்தல், மன்வரதல், சவால்களை ஏற்றுக்கொள்ளுதல், எதையும் தாங்கம் மனவலிமை, மற்றும் பொறமையை பழக்குதல் மேடைக்கூச்சத்தை இல்லாது செய்தல்) ஆற்றல்களையும் திறமைகளையும் அறிந்து கொள்ளுதல், ஒன்றிணைந்து செயற்படும் ஆற்றலை மெம்படுத்தல், சாசன கடமைகளைப் பழகுதல் தொடர்பான ஆரம்பக்கல்வியை பெற்றுக்கொடுத்தல், அடுத்தவருக்கும் அடுத்தவர்களின் கருத்துக்களுக்கும் மதிப்பளித்தல், திரிபீடகம் தொடர்பான ஆரம்ப அறிவைப் போதித்தல் , பாளி, சமஸ்கிருதம்,ஆங்கிலம் தொடர்பான ஆரம்ப கட்ட அறிவு போதனைகள், பாடல்கள் மற்றும் வழிபாட்டு முறைமைகள் தொடர்பான ஆற்றல், தியானம் தொடர்பான ஆரம்பகட்ட அறிவ போன்ற விடயங்கள் தொடர்பில் கூடிய கவனம் செலுத்தி இப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டமானது நடாத்தப்படுகின்றது.

**நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்படும் முறைமை**

இது வதிவிட பயிற்சித் திட்டமாகும். அன்றாடம் நேர அட்டவணைக்கு அமைய பிக்குமார்கள் மற்றும் அறிஞர்களால் நடாத்தப்படும் இக்கருத்தரங்கின் போது அறிவுரை வழங்கல் மற்றும் பிரயோக ரீதியிலான பயிற்சிகள் வழங்கப்படும். 2019 இல் இத்தகைய நான்க நிகழ்ச்சித்திட்டங்கள் பன்னிப்பிட்டிய தெவ்ரம் மகாவிகாரையை மையமாகக் கொண்ட நடாத்தப்பட்டது. இந் நிகழ்ச்சித்திட்டங்கள் கீழுள்ளவாறு ஒழுங்கு செய்யப்பட்டது.

**உபசம்பதா பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்**

**இலக்கு**

இன்றைய நவீன யுகத்தில் சமூகத்தில் ஏற்படம் பிரச்சனைகளுக்கு மத்தியில் துறவு வாழ்வைப் பாதுகாத்துக் கொள்வதுடன் நற்பண்புகளைக் கொண்ட பிக்குவாக மேம்படுவதுடன், வாழ்க்கை முறையினூடாகவும் நல்உபதேசங்களின் அடிப்படையிலும் சமூகத்திற்கு வழிகாட்டியாக விளங்குவதுடன், ஏற்படும் தடை-களையும் சவால்களையும் எதிர்கொள்வதற்கு தேவையான மனநிலையை பேணுவதற்கான பயிற்சியை பெற்றுக்கொடுப்பது இதன் இடிப்படை நோக்கமாகும். இந்த அடிப்படை இலக்குகளை அடையும் பொருட்டு கீழே குறிப்பிடப்பட்டள்ள விடங்கள் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்படகின்றத.

துறவற வாழ்க்கையின் முக்கியத்துவத்தை உணரச் செய்தல் மற்றும் உபசம்பதா ஒழுக்க முறைமையை பேணுவதற்கான விருப்பத்தை ஏற்படுத்தல், அதனை தமக்குரிய ஒரு கௌரவம் கொள்வதற்க ஏற்ப சிந்தனையை தூண்டுதல் உபசம்பதா சீலம் தொடர்பிலான ஆழ்ந்த புரிந்துணர்வைப் பெற்றுக் கொடுத்தல், மனதை ஒருமுகப்படத்துவதன் முக்கியத்துவத்தையும் மனதை ஒரு முகப்படத்துவதற்கு பின்பற்ற வேண்டிய வழிமறைகள் எவை என்பது பற்றி தெளிவுபடுத்தலைப் பெற்றுக் கொடத்தல், பாவச் செயலில் ஈடுபடுமிடத்து அதிலிருந்து விடுபடுவதன் முக்கியத்துவம் பற்றிய அறிவைப் பெற்றுக் கொடுத்தல், துறவறத்தின் வரலாற்று முக்கியத்துவம் பற்றி புரிந்து கொள்வதன் மூலம் சமூகத்திற்கு தலைமைத்துவத்தை வழிகாட்டியாக விளங்கச் செய்தல்.

சாசன ரீதியிலான கடமை மற்றும் பொறுப்புகள் தொடர்பில் ஊக்கப்படுத்தல்

மாரிகால சமய ஒழுக்கமுறையை பாதுகாத்தல். மாரிகால சமய நடைமுறைகளை சரியாகப் பின்பற்றுவது எவ்வாறு என்பது பற்றிய அறிவைப் பெற்றுக்கொள்ளல்.

உபசம்பதா பெற்றுக்கொண்டதன் பின்னர் மனதை ஒருமுகப்படுத்தல், தலைமைப் பிக்குமார்கள், சகோதர பிக்குமார்கள் மற்றும் இல்லற வாசிகளுடன் இணைந்து செயற்படுவது தொடர்பிலான அறிவரைகளைப் பெற்றுக்கொடுத்தல்.

| | நடத்தப்பட்ட திகதி | இடம்பெற்ற மாவட்டம் | பங்குபற்றியோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| முதலாவது நி-கழ்ச்சித்திட்டம் | 2019.05.24 தொடக்கம்2019.05.31 வரை 08 நாட்கள் | காலி | 122 |
| இரண்டாவது நி-கழ்ச்சித்திட்டம் | 2019.07.08 தொடக்கம்2019.07.15 வரை 08 நாட்கள் | காலி மாவட்டத்தில் எஞ்சிய பகுதிகள் மற்றும் களுத்துறை | 78 |
| மூன்றாவது நி-கழ்ச்சித்திட்டம் | 2019.08.08 தொடக்கம்2019.08.03 வரை 06 நாட்கள | மாத்தறை | 138 |
| நான்காவது நி-கழ்ச்சித்திட்டம் | 2019.12.01 தொடக்கம்2019.12.08 வரை 08 நாட்கள் | ஆம்பாந்தோட்டை மற்றும் கம்பஹா | 84 |

பூரண அறிவுடனான, ஒழுக்க சீலரான பிக்குமார்களை தோற்றுவித்தல்.

2019 இல் இதன் முதலாவது பயிற்சி நிகழ்வானது 08 நாட்களைக் கொண்ட வதிவிடப் பயிற்சியாக பன்னிப்பிட்டிய, தெவ்ரம் மகா விகாரையில் டிசம்பர் மாதம் 13 ஆம் திகதி தொடக்கம் 20 ஆம் வரையில் 2019 இல் புதிதாக உபசம்பதா பெற்ற பிக்குமார்களின் பொருட்டு நடாத்தப்பட்டது.

2020 மேற்க் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் பணிகள் தொடர்பாக முன்மொழியப்பட்டவை

தற்போது மெற்கொள்ளப்பட்டு வரும் சாமனேர மற்றும் உபசம்பதா பிக்குமார்களின் தகவல்களை கணனி மயப்படுத்தும் செயற்பாடுகளை மெலும் விரிவுபடுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. ஆதற்கமைய 1995 ஆம் ஆண்டு வரையில் கணனிமயப்படுத்தப்பட்டுள்ள உபசம்பதா பிக்குமார்களின் தகவல்கள் மற்றும் ஆவணங்கள் 1985 ஆம் ஆண்டு வரையிலும் 2005 ஆம் ஆண்டு வரையில் கணனிமயப்படுத்தப்பட்டுள்ள சாமனேர பிக்குமார்களின் தகவல்கள் மற்றும் ஆவணங்களை 2000 ஆம் ஆண்டு வரையிலும் கணனி மயப்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன் இக்கணனி மென்பொருளை உபயோகப்படுத்தி தற்போது திணைக்களத்தின் பிராந்திய அலுவலகங்கள் மூலம் உபசம்பதா, சாமனேர சான்றிதழ் விநியோக செயற்பாட்டை மாவட்ட செயலகங்களுக்கு விரிவுபடுத்துவதற்கும் எதிர்பார்க்கப்டுகின்றது.

# 07. நிதிப் பிரிவு

| 07.1 | | | | | | | ஏசீஏ-எப் |
|---|---|---|---|---|---|---|---|
| 2019 டிசம்பர் 31ஆம் திகதியுடன் பூர்த்தியடைந்த வருடத்திற்கான நிதி செயலாற்றுகை அறிக்கை | | | | | | | |
| வரவு செலவு – 2019 | | | | குறிப்பு | உண்மை நிலை | | |
| | | | | | 2019 | 2018 | |
| | | பெற்ற வருமானம் | | | - | 0 | |
| - | | வருமானவரி | | 1 | - | 0 | |
| - | | உள்நாட்டுப் பொருட்கள் மற்றும் சேவை வரி | | 2 | - | 0 | ஏசீஏ -1 |
| - | | சர்வதேச வியாபாரத்திற்கான வரி | | 3 | - | 0 | |
| - | | வரி அல்லாத வருமானங்கள் ஏனையவை | | 4 | - | 0 | |
| - | | மொத்த வருமான பெறுகை (அ) | | | - | 0 | |
| - | | வருமானம் அல்லாத வரவுகள் | | | - | 0 | |
| - | | திறைசேரி மூலதனம் | | | 620,320,000 | 507,703,789 | ஏசீஏ -3 |
| - | | வைப்புக்கள் | | | 3,380,677 | 8,668,646 | ஏசீஏ -4 |
| - | | முற்பண கணக்குகள் | | | 22,845,182 | 19,607,652 | ஏசீஏ -5/5 (ஏ)/5(பீ) |
| - | | ஏனைய பெறுகைகள | | | 28,785,308 | 0 | |
| - | | மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள்(ஆ) | | | **675,331,167** | 535,980,087 | |
| - | | மொத்த வருமான பெறுகைகள் மற்றும் வருமானம் அல்லாத பெறுகைகள் (எ) = (அ) (ஆ) | | | **675,331,167** | 535,980,087 | |
| | | கழிக்கப்பட்டது : செலவுகள் | | | | | |
| - | | மீண்டு வரும் செலவினம் | | | - | 0 | |
| 388,000,000 | | சம்பளம் மற்றும் உத்தியோகத்தர் கொடுப்பனவுகள் | | 5 | 390,403,529 | 353,297,889 | |
| 111,150,000 | | ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள் | | 6 | 88,646,125 | 77,517,626 | ஏசீஏ -2(ii) |
| 877,850,000 | | நிதியுதவிகள் அன்பளிப்புகள் மற்றும் மாற்றீடுகள | | 7 | 832,984,339 | 757,797,064 | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | வட்டி செலுத்துதல் | | **8** | - | | 0 | |
| 0 | | ஏனைய மீண்டு வரும் செலவினங்கள் | | **9** | 5,000 | | 3,200 | |
| 1,377,000,000 | | மொத்த மீண்டு வரும் செலவினங்கள் (எ) | | | **1,312,038,993** | | 1,188,615,779 | |
| | | %லதன செலவுகள் | | | | | | |
| 4,000,000 | | %லதன கையிருப்பு புனர்வாழ்வு மற்றும் மேம்படுத்தல்கள் | | **10** | 3,560,622 | | 1,598,696 | |
| 5,000,000 | | %லதன இருப்புக்களை கையகப்படுத்தல் | | **11** | 6,653,155 | | 3,609,331 | |
| 74,000,000 | | %லதன மாற்றீடுகள் | | **12** | 32,127,593 | | 43,485,806 | **ஏசீஏ -2(ii)** |
| 0 | | நிதி கையிருப்புகளை கையகப்படுத்தல்கள் | | **13** | - | | 0 | |
| 1,500,000 | | ஆற்றல் விருத்தி | | **14** | 911,617 | | 1,525,377 | |
| 0 | | ஏனைய மூலதனச் செலவுகள் | | **15** | - | | 0 | |
| 84,500,000 | | மொத்த மூலதன செலவுகள் (இ) | | | **43,252,987** | | 50,219,210 | |
| | | பிரதான பதிவேட்டு செலவுகள் (ஈ) | | | **39,591,437** | | 22,599,298 | |
| | | சேமிப்பு கொடுப்பனவுகள் | | | 15,458,070 | | 5,143,038 | **ஏசீஏ -4** |
| | | முற்பண கொடுப்பனவுகள் | | | 24,133,367 | | 17,456,260 | **ஏசீஏ -5/5 (ஏ)/5(பீ)** |
| | | மொத்த செலவுகள் (உ = ஏ+இ+ஈ) | | | 1,394,883,417 | | 1,261,434,287 | |
| - | | 2019 டிசம்பர் 31 திகதிக்கு மூலதன மீதி ஊ = (உ-எ) | | | (719,552,249) | | -725,454,200 | |
| %லதன ஒப்பிடுகள் | | | | | | | | |
| கழிக்கப்பட்டது | | | | | | | | |
| நி.வி.208 இற்கு அமைய ஏனைய அமைச்சுக்கள்/திணைக்களங்களின் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட செலவுகள் | | | | | 12,612,629.08 | | | |
| | | | | | (732,164,878) | | | |
| **சேர்க்கப்பட்டது** | | | | | | | | |
| நி.வி.208 இற்கு அமைய ஏனைய அமைச்சுக்கள்/திணைக்களங்களின் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட செலவுகள் | | | | | 730,452,384 | | | |
| முற்பணக் கொடுப்பனவு பீ கணக்கு வித்தியாசங்களை ஒப்பிடுதல் | | | | | 2,343,094 | | | |
| 2019 டிசம்பர் 31 திகதிக்கு ஒப்பிடுதலின் பின்னர் மூலதன கணக்கின் மீதி | | | | | 630,600 | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | ஏசீஏ -பீ |
| 07.2 | | | | |
| 2019 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிதி நிலைமை பற்றிய அறிக்கை | | | | |
| | | | உண்மை நிலை | |
| | குறிப்பு | | 2019 | 2018 |
| | | | &. | &. |
| நிதி அல்லாத உடமைகள் | | | | |
| சொத்துக்கள் மற்றும் உபகரணங்கள் | **ஏசீஏ** -6 | | 112,105,210 | 67,879,134 |
| நிதி உடமைகள் | | | | |
| முற்பணக் கணக்குகள் | **ஏசீஏ** -5/5(ஏ) | | 55,990,099 | 55,325,894 |
| நிதி மற்றும் அதற்கு சமனானவை | **ஏசீஏ** -3 | | 77 | 225 |
| முழு உடமைகள் | | | **168,095,386** | **123,205,253** |
| உண்மையான உடமை இருப்பு | | | | |
| உடமைக் கையிருப்பு உண்மை நிலை | | | 52,285,369 | 39,543,770 |
| சொத்துக்கள் மற்றும் உபகரணத் தொகுதி | | | 112,105,210 | 67,879,134 |
| பணி மற்றும் முற்பண கொடுப்பனவு தொகுதி | **ஏசீஏ** -5(பி) | | | |
| நடமாடும் பொறுப்புக்கள் | | | | |
| சேமிப்பு கணக்குகள் | **ஏசீஏ** -4 | | 3,704,730 | 15,782,124 |
| %லதன மீதி | **ஏசீஏ** -3 | | 77 | 225 |
| மொத்த பொறுப்புக்கள் | | | **168,095,386** | **123,205,253** |

பக்க இலக்கம் 04 தொடக்கம் 44 வரை ஏசீஏ 1 தொடக்கம் 6 வரையான மாதிரி படிவங்கள் மூலம் சமர்ப்பிக்கப்படும் கணக்கு தகவல் மற்றும் குறிப்பு பக்க இலக்கம் 45 தொடக்கம் 58 வரை உள்ளடக்கப்பட்ட கணக்கு குறிப்பீடுகள் பற்றிய விபரங்களுக்கும் இந்த இறுதி கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ள பகுதிகளாகும். இந்நிதி அறிக்கையானது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கியல் நெறிமுறைகளுக்கு அனுகூலமாக மேற்கொள்ளப்பட்டதுடன் இங்கு நிதி அறிக்கை குறிப்புக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டதற்கேற்ப மிகவும் பொருத்தமான கணக்கியல் கொள்கைகள் உபயோ-கிக்கப்பட்டுள்ளன. மேலே இறுதிக்கணக்கில் குறிப்பிட்டுள்ள எண்ணிக்கைகள் அதற்கான கணக்கியல் குறிப்புக்கள் மற்றும் ஏனைய கணக்குகள் பற்றிய தகவல்கள் திறைசேரி கணக்கியல் பதிவேட்டுடன் ஒப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் இவை அப்பதிவேட்டின் எண்ணிக்கைகளுக்கு சமனானவையாகத் காணப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்துகின்றோம்.

| | | | |
|---|---|---|---|
| …………………… | ……………… | | ………………………………….. |
| பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் | கணக்கீட்டு உத்தியோகத்தர் | | பிரதான நிதி உத்தியோகத்தர் / பிரதான கணக்காளர் / பணிப்பாளர் (நிதி) / ஆணையாளர் (நிதி) |
| பெயர் - | பெயர் - | பெயர் | - |
| பதவி - | பதவி - | திகதி | - |
| திகதி - | திகதி – | | |

| | | ஏசீஏ -சீ |
|---|---|---|
| 07.3 2019 டிசம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைந்த நிதி நிலைமை பற்றிய அறிக்கை<br>நிதி பெற்றுக்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் விபரம் | | |
| | *உண்மை நிலை* | |
| | **2019** | **2018** |
| | &. | &. |
| நிதி பெற்றுக்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் விபரம் | | _ |
| மொத்த வரி வருமானம் | - | - |
| கட்டணங்கள், நிதியங்கள் தண்டப்பணம் மற்றும் அனுமதிப்பத்திரங்கள் | - | - |
| ,லாபங்கள் | - | - |
| வருமானம் அல்லாத பெறுகைகள் | 28,785,308 | 507,703,789 |
| ஏனைய தலைப்புக்களில் செயற்பட்ட வருமானங்கள் | - | - |
| %லதனப் பெறுகை | 620,320,000 | |
| செயற்பாடுகள் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட நிதிப் பெறுகைகள் (அ) | **649,105,308** | **507,703,789** |
| **கழிக்கப்பட்டது : நிதி செலவுகள** | | |
| ஊழியர் சம்பளம் மற்றும் செயற்பாட்டு செலவினங்கள் | 441,365,743 | 417,678,680 |
| சலுகைகள் மற்றும் மாற்றீடுகள் | 169,568,118 | 82,471,216 |
| வேறு செலவினத் தலைப்புகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட செலவுகள் | 12,612,629 | - |
| திறைசேரிக்கு செலுத்தப்பட்ட மூலதனம் | | 225 |
| செயற்பாடுகளின் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட செலவுகள் (ஆ) | **623,546,490** | **500,150,121** |
| செயற்பாடுகளின் மூலம் கிடைக்கப்பெற்ற தூய வருமானம் (எ) = (அ)=(ஆ) | **25,558,818** | **7,553,668** |
| **முதலிடுகளின் மூலம் கிடைக்கப்பெற்ற நிதி வருமானங்கள்** | | |
| வட்டி | - | - |
| ,லாபம் | - | - |
| உரிமை விலகல் மற்றும் பௌதீக சொத்துக்கள் விற்பனை | - | - |
| கடன் வசுலிப்புக்கள் | - | - |
| முற்பணக் கொடுப்பனவுகள் வசுலிக்கப்பட்டமை | 20,671,175 | - |
| முதலீடுகள் மூலம் கிடைக்கப்பெற்ற நிதி வருமானங்கள் (எ) | **20,671,175** | **-** |

| | | |
|---|---|---|
| **கழிப்புக்கள் : நிதிச்செலவுகள்** | | |
| பௌதிக நிர்மாணங்கள் அல்லது கொள்வனவுகள் மற்றும் வேறு முதலிடுகள் கையகப்படுத்தல் | 13,905,735 | 13,230,669 |
| முற்பணக் கொடுப்பனவு | 19,616,266 | - |
| முதலீட்டுச் செயற்பாடுகளின் பொருட்டு செலவு செய்யப்பட்ட நிதி (இ) | **33,522,001** | **13,230,669** |
| முதலீட்டுச் செயற்பாடுகளின் மூலம் கிடைக்கப்பெற்ற வருமானம் (ஈ) ஸ்ரீ (இ)=(ஈ) | **(12,850,826)** | **(13,230,669)** |
| செயற்பாடுகள் மற்றும் முதலிட்டுச் செயற்பாடுகள் மூலம் கிடைக்கப் பெற்ற தூ ய இலாபம் (உ) ஸ்ரீ (எ)+ (ஈ) | **12,707,992** | **(5,677,001)** |
| **நிதிச் செயற்பாடுகள் மூலம் கிடைக்கப்பெற்ற வருமானங்கள்** | | |
| உள்நாட்டு கடன் பெறுகைகள் | - | - |
| வெளிநாட்டு கடன் பெறுகைகள் | - | - |
| கிடைக்கப்பெற்ற அன்பளிப்புக்கள் | - | - |
| சேமிப்பு கணக்குகளின் மூலம் கிடைக்கப்பெற்றவை | 3,380,677 | - |
| நிதி செயற்பாடுகளின் மூலம் செலவு செய்யப்பட்ட மொத்த நிதி (ஊ) | **3,380,677** | **-** |
| **கழிப்புக்கள் : நிதிச்செலவுகள்** | | |
| உள்நாட்டுக் கடன் திருப்பிச் செலுத்தல் | - | - |
| வெளிநாட்டுக் கடன் திருப்பிச் செலுத்தல் | - | - |
| சேமிப்பு கொடுப்பனவுகள் | 15,458,070 | (5,677,000) |
| நிதிச் செயற்பாட்டுகளின் பொருட்டு செலவு செய்யப்பட்ட மொத்த நிதி (ஒ) | **15,458,070** | **(5,677,000)** |
| நிதி செயற்பாடுகளின் மூலம் கிடைக்கப்பெற்ற வருமானம் (ஓ) = (ஊ)-(ஒ) | **(12,077,393)** | **5,677,000** |
| நிதி வேறுபாடுகள் (ஔ) = (உ)-(ஓ) | **630,600** | **-** |
| [னவரி 01 ஆம் திகதிக்கு ஆரம்ப நிதி நிலுவை | **-** | **-** |
| டிசம்பர் 31 ஆம் திகதிக்கு இறுதி நிதி நிலுவை | **630,600** | **-** |

# 08.தகவல் தொழிநுட்ப பிரிவு

தகவல்களை சேகரித்தல் மற்றும் புள்ளிவிபரங்களை தயாரித்தல் போன்றவை பௌத்த மத அலுவல்கள் திணைக்களத்தின் தகவல் தொழிநுட்ப பிரிவின் பிரதான பணியாகும். அதற்கமைய முறையாகத் தயாரிக்கப்பட்டு அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்படுகின்றன. இப்பிரிவினால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**08.1 தகவல் அறியும் உரிமைச்சட்டம்**

2016 இன் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச்சட்டத்திற்கமைய பல்வேறு தேவைகளின் பொரட்டு கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்களுக்கு ஏற்ப தகவல்கள் வழங்கப்படுகின்றன. அதற்கமைய 2019.12.31 ஆம் திகதி வரை 106 விண்ணப்பங்களுக்கான விபரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

08.2. தகவல் கட்டமைப்பையும் இணையத்தளத்தையும் தரவேற்றம் செய்தல்.

புத்தசாசன அமைச்சின் தகவல் தொழிநுட்ப பிரிவுடன் இணைந்து தகவல் முகாமத்துவ வலையமைப்பொன்று உருவாக்கப்பட்டுள்ளதுடன், இத்தகவல் வலையமைப்பிற்கு முறையாகத் தகவல்கள் தரவேற்றம் செய்யப்படுவதன் மூலம் விகாரை உரித்தாகும் நிக்காய பிரிவு, வாசம் செய்யும் பிக்குமார்களின் எண்ணிக்கை, அவர்களுக்கடையில் சாமனேர மற்றும் உபசம்பதா பிக்குமார்கள் பற்றிய விபரங்கள், அறநெறிப் பாடசாலைகள், பிரிவெனாக்கள், விகாரைகளிள் இயங்கம் சங்கங்கள், விகாரைகளினால் முன்னெடுக்கப்படும் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் என்பன பற்றிய விபரங்களை பல்வேறு தலைப்புகளின் கீழ் பெற்றுக்கொள்ள முடியும். இத்தகவல்கள் அன்றாடம் தரவேற்றம் செய்யப்படுகின்றன.

ஆத்துடன் பௌத்த மத அலுவல்கள் திணைக்களத்தின் இணையத்தளம் தகவல் பிரிவினால் தரவேற்றம் செய்யப்படும். பௌத்த மத அலுவலகத்தின் dbg.gov.lk இணையத்தளத்தினூடாக உரிய தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியம்.

**08.3. விகாரைகள் பற்றிய தகவல்களை தரவேற்றம் செய்தல்**

நாட்டின் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் அனைத்து நிக்காய பிரிவுகளைச் சேர்ந்த விகாரைகள் பற்றிய தகவல்கள் கணனிமயப்படத்தப்பட்டுள்ளன.

**08.4 பாளி மொழி மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்**

அறநெறிப் பாடசாலைகளில் பாளி மொழியறிவு கொண்ட ஆசிரியர்களுக்கான குறைபாட்டினை நிவர்த்தி செய்யும் பொருட்டு இந்நிகழ்ச்சித் திட்டமானது வருடாந்தம் நடாத்தப்படுகின்றது. இதன் கீழ் அறநெறிப் பாடசாலை ஆசிரியருக்கு பாளி மொழியறிவினைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் அவரைப் பாளி மொழியைக் கற்பிப்பதற்கான செயற்பாட்டில் ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக அவர்களை திரிபீடகத்தை பற்றி ஆராய்வதற்கான சந்தர்ப்பத்தினை ஏற்படுத்துவதும் எமது நோக்கமாகும்.

பாளி மொழி விற்பன்னர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட பாடத் திட்டங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட நூல்களை கற்கைநெறியை மேற்கொள்பவர்களுக்கு வழங்கி நாட்டிலுள்ள 15 மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட 15 மத்திய நிலையங்களில் கற்கைநெறியானது வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு பரீட்சை நடாத்தப்பட்டது.

**08.5 பிக்குமார்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்**

சாமனேர பிக்குமார்களின் சிந்தனைத் திறனை விருத்தி செய்யும் முகமாக ஒழுக்க சீலரான புகழ் பெற்ற பிக்குமார்களின் பங்களிப்புடன் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டமானது மேற்கொள்ளப்படுகின்றது. வதிவிடப் பயிற்சியாக மூன்று நாட்களாக இடம்பெறும் இப்பயிற்சியின் போது சம்பிரதாய பூர்வமாக பிரித்ஓதுதல், தர்ம போதனைப் பயற்சி, தியானப் பயிற்சி மற்றும் சாசனப் பழக்க வழக்கங்களை போதித்தல் போன்ற பிக்கு ஒருவருக்குத் தேவையான அறிவு மற்றும் பயிற்சி போன்றன பெற்றுக்கொடுக்கப்படுகின்றது. 2019 இல் அரச வெசாக் உற்சவத்துடன் இணைந்ததாக குருநாகல் மாவட்டத்தின் ஸ்ரீ சுமங்கல பிரிவெனாவில் பிக்கமாரகளக்கான பயிற்சி நிகழ்வு இடம்பெற்றது.

### 08.6 ஊடக செயற்பாடுகள்

திணைக்களத்தின் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றி ஊடகங்களுக்கு தகவல்களைப் பெற்றுக்கொடுத்தல், ஊடக சந்திப்புகளை ஒழுங்க செய்தல் மற்றும் பத்திரிகைகள், நூல்களுக்கு தேவையான பௌத்த மத ஆணையாளர் நாயகத்தின் வாழ்த்துச் செய்திகளை தயாரித்தல் போன்றன இதன்போது மேற்கொள்ளப்படுகின்றன.

### 08.7 பத்திரிகை செய்திகள்

அன்றாட நாளிதழ்களில் வெளியாகும் செய்திகள், புத்த தர்மத்தை இழிவுபடுத்தும் செய்திகள், மற்றும் பிக்குமார்கள் தொடர்பான பிரச்சினைகளை தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்ற பணிகள் இதன்போது முன்னெடுக்கப்படுகின்றன. விசேடமாக புத்த மதத்தை அவமதிக்கும் வகையிலான செய்திகள் மற்றும் புகைப்படங்கள் தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், விகாரைகள் மற்றும் பிக்குமார்கள் தொடர்பிலான முறைப்பாடுகள், சாசன ரீதியிலான பிரச்சினைகள் தொடர்பில் மகாநாயக்க தேரர்களுக்கு தெரியப்படுத்துவதுடன், அறிக்கைகளும் சமர்ப்பிக்கப்படும்.

# 09. உள்ளக கணக்காய்வு பிரிவு

### 09.1. நோக்கம்

1931 இன் 19 அம் இலக்க விகாரைகள் மற்றும் அறக்கட்டளை நிலையங்கள் தொடர்பான கட்டளைச் சட்டத்தின் 4(1) பிரகாரம் செயற்படுதல்.
திணைக்களத்தின் அனைத்து கணக்குகள் தொடர்பிலும் பரிசீலனை செய்தல்.
உள்ளக நிர்வாக கட்டமைப்பை பலப்படுத்துவதற்கு உதவுதல்.
கணக்கியல் நடவடிக்கைகளை சிறப்பாக மேற்கொள்வதற்கு உதவுதல்.
சொத்துக்களின் சிறந்த பாவனைக்கு உதவி புரிதல்.
திணைக்களத்தின் இலக்கினை அடைவதற்கு துணைபுரிதல்.

ஊள்ளக கணக்காய்வு என்பது ஒரு குழுவினால் மேற்கொள்ளப்படும் சுயாதீன மதிப்பீடாகும். முகாமைத்துவ பிரிவினால் மேற்கொள்ளப்படும் சேவைகள் தொடர்பில் ஆராய்தல், மதிப்பீடு செய்தல், மற்றும் நிர்வாக செயற்பாடுகள் தொடர்பில் அறிக்கை சமர்ப்பித்தல் என்பன இதில் உள்ளடங்கும். பிரதான உள்ளக கணக்காய்வாளர் ஒருவரின் கீழ் இப்பிரிவானது இயங்குகின்றது.

### 09.2. உள்ளக கணக்காய்வாளர் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட விஷேட செயற்திட்டங்கள்.

1. விகாரைகள் அறக்கட்டளை நிலையங்கள் சட்டமூலத்தின் விதிமுறைகளுக்கு அமைய வழிபாட்டு தலங்கள் பின்பற்ற வேண்டிய வங்கிக்கணக்குகளை அறிமுகம் செய்து அவற்றின் நிர்வாக கட்டமைப்பை பலப்படுத்துதல்.
2. சட்டமூலத்தின் 4(1) அத்தியாயத்தின் பிரகாரம் நிர்வகிக்கப்படும் வழிபாட்டு தலங்களின் வருமாணங்களை கணக்காய்வு செய்தல் மற்றும் அவற்றுக்கு தேவையான வழிகாட்டல்களை வழங்குதல்.
3. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்களின் கூட்டங்களை நடாத்துதல்.
4. திணைக்களத்தின் ஏணைய பிரிவுகளால் ஒழுங்கு செய்யப்படும் நிகழ்வுகளுக்கு தேவையான ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் பெற்றுக்கொடுத்தல்.
5. திணைக்களத்தில் இடம்பெறும் விஷேட பணிகளுக்கு தேவையான ஒத்துழைப்பை பெற்றுக்கொடுத்தல்.
6. 2019 இல் மேற்கொள்ளப்பட்ட கணக்காயவு செயற்பாடுகள்.

| | | விகாரைகள் | | | | | பிக்குமார்கள் | | | பிக்குணிமார்கள | | சா. பாதுகாப்பு சபை | அறநெறிப் பாடசாலைகள | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மாகாணம | மாவட்டம் | பதிவு செய்யப்பட்ட விகாரைகளின் எண்ணிக்கை | விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பித்துள்ள விகாரைகளின் எண்ணிக்கை (குறைபாடுகளுடன்) | விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பிக்கடாத விகாரைகளின் எண்ணிக்கை | பதிவு செய்யப்படாதவை | மொத்தம | சாமனேர | உபசம்பதா | மொத்தம் | ஆராமைகள் | பிக்குணிமார்களின் எண்ணிக்கை | சாசன பாதுகாப்பு சபைகளின் எண்ணிக்கை | இயங்கும் அறநெறி | மொத்த ஆசிரியர்களின் எண்ணிக்கை | மாணவர்கள் |
| மேல் மாகாணம் | கொழும்பு | 797 | 69 | 18 | 87 | 884 | 1,453 | 1,784 | 3,237 | 55 | 225 | 20 | 665 | 11,572 | 220,597 |
| | கம்பஹா | 692 | 130 | 17 | 147 | 839 | 1,523 | 1,537 | 3,060 | 51 | 247 | 18 | 764 | 11,251 | 232,241 |
| | களுத்துறை | 558 | 121 | 15 | 136 | 694 | 1,417 | 1,323 | 2,740 | 45 | 117 | 17 | 587 | 8,285 | 155,941 |
| | | **2,047** | **320** | **50** | **370** | **2,417** | **4,393** | **4,644** | **9,037** | **402** | **589** | **55** | **2,016** | **31,108** | **608,779** |
| தென் மாகாணம் | காலி | 758 | 72 | 17 | 89 | 847 | 1,978 | 1,486 | 3,464 | 29 | 99 | 22 | 668 | 8,690 | 147,712 |
| | மாத்தறை | 526 | 95 | 12 | 107 | 633 | 1,597 | 1,227 | 2,824 | 17 | 35 | 17 | 533 | 7,257 | 129,726 |
| | அம்பாந்தோட்டை | 429 | 80 | 27 | 107 | 536 | 1,258 | 853 | 2,111 | 24 | 117 | 15 | 434 | 5,336 | 96,339 |
| | | **1,713** | **247** | **56** | **303** | **2,016** | **4,833** | **3,566** | **8,399** | **70** | **251** | **54** | **1,635** | **21,283** | **373,777** |
| மத்திய மாகாணம் | கண்டி | 852 | 166 | 50 | 216 | 1,068 | 1,901 | 1,713 | 3,614 | 43 | 170 | 27 | 872 | 10,905 | 175,410 |
| | மாத்தளை | 342 | 87 | 21 | 108 | 450 | 637 | 636 | 1,273 | 16 | 51 | 11 | 372 | 4,076 | 64,635 |
| | நுவரெலியா | 284 | 26 | 10 | 36 | 320 | 263 | 268 | 531 | 8 | 11 | 8 | 276 | 2,911 | 46,301 |
| | | **1,478** | **279** | **84** | **363** | **1,838** | **2,801** | **2,617** | **5,418** | **67** | **232** | **46** | **1,520** | **17,892** | **286,346** |
| வடமேல் மாகாணம் | குருநாகல் | 1,259 | 278 | 79 | 357 | 1,616 | 2,008 | 2,283 | 4,291 | 83 | 369 | 37 | 1,257 | 14,206 | 226,923 |
| | புத்தளம் | 305 | 36 | 7 | 43 | 348 | 427 | 412 | 839 | 5 | 2 | 16 | 299 | 3,293 | 56,709 |
| | | **1,564** | **314** | **86** | **400** | **1,964** | **2,435** | **2,695** | **5,130** | **88** | **371** | **53** | **1,556** | **17,499** | **283,632** |
| வுட மத்திய மாகாணம் | அநுராதபுரம் | 715 | 155 | 43 | 198 | 913 | 1,295 | 1,254 | 2,549 | 49 | 323 | 22 | 739 | 7,991 | 137,290 |
| | பொலன்னறுவை | 268 | 41 | 7 | 50 | 316 | 897 | 647 | 1,544 | 26 | 91 | 8 | 297 | 3,418 | 64,249 |
| | | **983** | **196** | **50** | **246** | **1,229** | **2,192** | **1,901** | **4,093** | **75** | **414** | **30** | **1,036** | **11,409** | **201,539** |
| கிழக்கு மாகாணம் | அம்பாறை | 159 | 38 | 3 | 41 | 200 | 504 | 429 | 933 | 8 | 37 | 9 | 199 | 2,451 | 43,391 |
| | திருகோணமலை | 124 | 19 | 8 | 27 | 151 | 243 | 217 | 460 | 6 | - | 7 | 96 | 1,199 | 18,080 |
| | மட்டக்கனப்பு | 15 | 2 | - | 2 | 17 | 15 | 19 | 34 | - | - | - | - | - | - |
| | | **298** | **59** | **11** | **70** | **368** | **762** | **665** | **1,427** | **14** | **37** | **16** | **295** | **3,650** | **61,471** |
| ஊவா மாகாணம் | பதுளை | 395 | 96 | 9 | 105 | 500 | 1,059 | 905 | 1,964 | 19 | 65 | 17 | 490 | 5,726 | 97,622 |
| | மொனராகலை | 311 | 64 | 9 | 73 | 384 | 853 | 581 | 1,434 | 16 | 5 | 11 | 320 | 4,001 | 70,832 |
| | | **706** | **160** | **20** | **180** | **886** | **1,912** | **1,486** | **3,398** | **35** | **70** | **28** | **810** | **9,727** | **168,454** |
| சப்பிரகமுவா மாகாணம | இரத்தினபுரி | 552 | 166 | 16 | 182 | 734 | 1,203 | 1,266 | 2,469 | 28 | 86 | 22 | 665 | 8,163 | 139,113 |
| | கேகாலை | 610 | 117 | 32 | 149 | 759 | 435 | 687 | 1,122 | 40 | 128 | 16 | 598 | 7,117 | 105,156 |
| | | **1,162** | **283** | **48** | **331** | **1,493** | **1,638** | **1,953** | **3,591** | **68** | **214** | **38** | **1,263** | **15,280** | **244,269** |
| Tlf;F khfhzk | மன்னார் | 5 | - | 4 | 4 | 9 | - | 6 | 6 | - | - | - | - | - | - |
| | வவுனியா | 27 | 2 | 1 | 3 | 30 | 27 | 25 | 52 | 1 | - | 1 | 21 | 239 | 3,603 |
| | யாழ்ப்பாணம் | 7 | - | 2 | 2 | 9 | 3 | 11 | 14 | - | - | - | - | - | - |
| | கிளிநொச்சி | 1 | - | - | - | 1 | - | 3 | 3 | - | - | - | - | - | - |
| | முல்லைத்தீவு | 12 | 2 | - | 2 | 14 | 19 | 8 | 27 | 1 | - | 1 | 12 | 162 | 1,934 |
| | | **52** | **4** | **7** | **11** | **63** | **49** | **53** | **102** | **2** | **-** | **2** | **33** | **401** | **5,537** |
| | மோத்தம் | **10,003** | **1,862** | **412** | **2,644** | **12,274** | **21,015** | **19,580** | **40,595** | **821** | **2,178** | **322** | **10,164** | **128,249** | **2,233,804** |

2019 இல் (34)

1. ரதீ விகாரை
2. கதிர்காமம் முருகன் கோயில்
3. கண்டி முருகன் கோயில்
4. தெவினுவர விஷ்ணு கோயில்
5. கிரிவிகாரை
6. தெவினுவர பரமவிசித்ராராமை
7. சங்கபால ரஜமகா விகாரை
8. செல்லக்கதிர்காமம் மகாசேன் ரஜமகா விகாரை
9. வெயாங்கொடை அறநெறிப் பாடசாலைகள் நூல் களஞ்சியசாலை
10. பஸ்கம நாத தேவஸ்தானம்
11. லுணுகம சிறி பெரகும்பா ரஜமகா விகாரை
12. புத்த ஜயந்தி நூலகம்
13. மகாநாயக்க சாரிக்காராமை
14. கொலவெனிகம ரஜமகா விகாரை
15. பிலிகுத்துவை ரஜமகா விகாரை
16. ஈரியவெட்டிய பிக்குணி தலைமையகம் மற்றும் பயிற்சி நிலையம்
17. முல்கிரிகலை ரஜமகா விகாரை
18. திஸ்ஸமகாராமை
19. கடலாதெனிய ரஜமகா விகாரை
20. கொலொன்னாவை ரஜமகா விகாரை
21. மெதகொடை கண்ணகி தேவஸ்தானம்
22. லங்காதிலக விஷ்ணு கோயில்
23. திணைக்களத்தின் தொலைபேசிக் கட்டணம் தொடர்பான கணக்காய்வு
24. தனகிரிகலை ரஜமகா விகாரை
25. கொண்டதெனிய ரஜமகா விகாரை
26. பாதெனிய ரஜமகா விகாரை
27. ஜங்குரே ஶ்ரீ விஷ்ணு கோயில்
28. மஹியங்கனை ஶ்ரீ சுமன சமன் தேவஸ்தானம்
29. ரங்கிரி தம்புள்ளை ரஜமகா விகாரை
30. கண்டி விஷ்ணு கோயில்
31. அலவத்துகொடை சமன் தேவஸ்தானம்
32. அம்பொக்கை ஶ்ரீ முருகன் கோயில்
33. தொடமவெலை நாத தேவஸ்தானம்
34. சீனிகம ஶ்ரீ தெவொல் மகா தேவஸ்தானம்

**09.3. உள்ளக கணக்காய்வு பிரிவினால் பரிசீலிக்கப்படும் விகாரைகளட மற்றும் தேவஸ்தானங்கள்**

| அலுவலகம் | 4(1) ,ன் கீழ் நிர்வகிக்கப்படும் விகாரைகள் | 4(1) ,ன் கீழ் நிர்வகிக்கப்படும் தேவஸ்தானங்கள் | **மொத்தம்** |
|---|---|---|---|
| பிரதான அலுவலகம | 118 | 06 | **124** |
| இரத்தினபுரி பிராந்திய அலுவலகம் | 29 | 10 | **39** |
| கண்டி பிராந்திய அலுவலகம் | 75 | 16 | **91** |
| **மொத்தம்** | **222** | **32** | **254** |

**பிரதான அலுவலகத்தினால் பரிசீலிக்கப்படுபவை**

| மாவட்டம் | 4(1) ,ன் கீழ் நிர்வகிக்கப்படும் விகாரைகள் | 4(1) ,ன் கீழ் நிர்வகிக்கப்படும் தேவஸ்தானங்கள் |
|---|---|---|
| கொழும்பு | 08 | - |
| கம்பஹா | 14 | - |
| களுத்துறை | 07 | - |
| காலி | 07 | 01 |
| மாத்தறை | 20 | 01 |
| குருநாகல் | 44 | 05 |
| அம்பாந்தோட்டை | 14 | - |
| அநுராதபுரம் | 04 | - |
| **மொத்தம்** | **118** | **06** |

**கண்டி பிராந்திய அலுவலகத்தினால் பரிசீலிக்கப்படுபவை**

| மாவட்டம் | 4(1) ,ன் கீழ் நிர்வகிக்கப்படும் விகாரைகள் | 4(1) ,ன் கீழ் நிர்வகிக்கப்படும் தேவஸ்தானங்கள் |
|---|---|---|
| கண்டி | 45 | 13 |
| மாத்தளை | 07 | 01 |
| கேகாலை | 20 | 0 |
| நுவரெலியா | 03 | 02 |
| **மொத்தம்** | **75** | **16** |

**இரத்தினபுரி பிராந்திய அலுவலகத்தினால் பரிசீலிக்கப்படுபவை**

| மாவட்டம் | 4(1) ,ன் கீழ் நிர்வகிக்கப்படும் விகாரைகள் | 4(1) ,ன் கீழ் நிர்வகிக்கப்படும் தேவஸ்தானங்கள் |
|---|---|---|
| இரத்தினபுரி | 16 | 04 |
| மொனராகலை | 07 | 02 |
| பதுளை | 06 | 04 |
| **மொத்தம்** | 29 | 10 |

# 10. பிராந்திய அலுவலகம் - இரத்தினபுரி

1. விகாரைகளின் பொறுப்பாளர்கள், பஸ்நாயக்க நிலமேக்களை நியமித்தல்.
2. தேவஸதானங்களின் சொத்துக்களை பொறுப்பாளரகளிடம் ஒப்படைத்தல்.
3. விகாரைகள், தேவஸ்தானங்களுக்குச் சொந்தமான காணிகளை குத்தகைக்கு வழங்குதல்.
4. வருடாந்த வரவு செலவு கணக்குகளைப் பரிசீலித்தல்.
5. விகாரைகள் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்தல்.
6. கதிர்காமம் முருகன் கோயில் உற்சவத்திற்கான ஒத்துழைப்பினை வழங்குதல்.
7. உண்டியல் மற்றும் காணிப் பிரச்சினைகளைத் தீர்த்தல்.
8. மரங்களை வெட்டுவதற்கும் போக்குவரத்திற்கும் தேவையான சிபாரிசினைப் பெற்றுக்கொடுத்தல்.
9. மாணிக்கக் கல் அகழ்விற்கான அனுமதிப் பத்திரங்களை வழங்குதல்.
10. அமரத்துவம் எய்திய பிக்குமார்களின் வங்கிக் கணக்குகள் தொடர்பான பணிகள்.
11. முறைப்பாடுகள் தொடர்பான பணிகள்

நிர்வாக பிரதேசம்.

இரத்தினபுரி, மொனராகலை, பதுளை ஆகிய மாவட்டங்களில் 1931 இன் 19 ஆம் இலக்க விகாரைகள் அறக்கட்டளை நிலையங்கள் கட்டளைச் சட்டத்தின் (4)1 மற்றும்(4)2 அத்தியாயங்களின் கீழ் நிர்வகிக்கப்படும் தேவஸ்தானங்கள் உள்ளடங்கும்.

| மாவட்டம் | 4 (1) கீழ் நிர்வகிக்கப்படும் தேவஸ்தானங்கள் | 4 (2) கீழ் நிர்வகிக்கப்படும் தேவஸ்தானங்கள |
|---|---|---|
| **இரத்தினபுரி** | 20 | 559 |
| **மொனராகலை** | 11 | 370 |
| **பதுளை** | 08 | 394 |
| **மொத்தம்** | **39** | **1323** |

எமது அலுவலகத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் பிரதான சேவைகள் தொடர்பில் வருகை தரும் பயனாளிகளுக்கு பூரணதெளிவைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு ஒவ்வொரு சேவையையும் பெற்றுக் கொள்வதற்கு பின்பற்றவேண்டிய மாதிரி வழிகாட்டியை காட்சிப்படுத்தல்.

வருகைதரும் பயனாளிகளுக்கு ஏற்படும் தடங்கல்களை நிவர்த்தியும் செய்யும் மூலமாகவும் வினைத்திறனான சேவையை பெற்றுக் கொள்வதற்கு ஏற்ற வகையில் வசதிகளை ஏற்படுத்தி கொடுத்தல். (உதாரணம் - பயனாளிகளின் உபயோகத்தின் பொருட்டு மேசை ஒன்றை வைத்தல், முறைப்பாட்டு பெட்டியென்றை நிறுவுதல், குடிநீர் வழங்குதல், கை கழுவுவதற்கான(sink) தொட்டி ஒன்றை நிறுவுதல்.

இந்த அலுவலகத்தினால் நிறைவேற்றப்படும் பிரதான பணியான மாணிக்க கல் அகல்விற்காக அனுமதிப்பத்திரம் வழங்கும் செயற்பாட்டின் போது மேற்கொள்ளப்படும் நடைமுறைகளை உள்ளடக்கிய கணனி தகவல் கட்டமைப்பு ஒன்றை நிறுவுதல்.

வாரத்தில் புதன்கிழமை அணிவதற்கென சீருடை ஒன்றை அறிமுகப்படுத்துதல்( தற்போது இதற்கான ஆரம்ப கட்டப் பணிகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன)

பல்வேறு காரணங்களால் தடைப்பட்டுள்ள போதிலும் வழிபாட்டுத் தலங்களின் மொத்த வருமானத்தை உள்ளடக்கிய தகவல் கட்டமைப்பை தரவேற்றம் செய்து செயற்படுத்துதல்.

இவ்அலுவலகத்தினால் நீண்டகால அடிப்படையில் குத்தகைக்கு வழங்கப்படும் சொத்துக்கள் பற்றிய தகவல்களை கணனி மயப்படுத்தி தரவேற்றம் செய்வதன் மூலம் வலையமைப்பை உருவாக்குதல்.

4(1) இன் கீழ் நிர்வகிக்கப்படும் வழிபாட்டுத் தலங்களின் வருடாந்த பெரஹரா உற்சவங்கள் இடம் பெறும் அனைத்து வழி-பாட்டுத் தலங்களினதும் பெரஹரா உற்சவங்கள் தொடங்குவதற்கு முன்னர் உண்டியல் பெட்டிகளை சீல் வைத்து பெரஹரா உற்சவம் முடிவடைந்ததன் பின்னர் காணிக்கைகளை கணக்கிலிட்டு அவற்றை வங்கியில் வைப்புச் செய்யும் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வது தொடர்பில் உரிய வழிபாட்டுத் தலங்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளதுடன், 2020 இல. இதனை செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. (தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள போதிலும் இப்பணிகள் தடைப்பட்டுள்ள சில வழிபாட்டுத் தலங்களில் மட்டும்)எம்மால் சிபாரிசு செய்து அனுமதி வழங்கப்படும் வழிபாட்டுத் தலங்களுக்கு சொந்தமான காணிகளை குத்தகைக்கு வழங்குதல், மாணிக்ககல் அகழ்வு அனுமதிப் பத்திரம், மரம் வெட்டுதல் வருடாந்த குத்தகைக்கு வழங்கப்படும் காணிகளின் அகழ்வு பணிகளுக்கான சிபாரிசு மற்றும் அனுமதியைப் பெற்றுக் கொடுக்கும் சந்தர்ப்பங்களில் சிக்கல் ஏற்படின் திணைக்கள அதிகாரிகள் நேரடியாக உரிய இடத்தில் பரிசோதனைகளை மேற்கொண்ட பின் உரிய சிபாரிசு மற்றும் அனுமதி பெற்றுக் கொடுக்கப்படும். பொது மக்களுக்கு மிகவும் பயனுள்ளதும் வினைத்திறனுமான சேவைகளைப் பெற்றுக் கொடுக்கும் பொருட்டும், உத்தியோகத்தர்களின் சிந்தனை மற்றும் ஆற்றல்களை மேம்படுத்தும் வகையிலான பயிற்சி திட்டங்களை காலாண்டிற்கு ஒரு முறையேனும் பெற்றுத்தருமாறு கோருதல்.

பிம்சவிய சட்டத்தின் கீழ் வழிபாட்டுத் தலங்களுக்கு சொந்தமான காணிகளை அளவீடு செய்து பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு குத்தகைக்கு பெற்றுக் கொடுக்கும் சந்தர்ப்பங்களில் குத்தகை பத்திரப் பதிவின் போது ஏற்படும்

பிரச்சினைகளை தீர்க்கம் முகமாக பதிவாளர் நாயகம் திணைக்களத்துடன் பேச்சு வார்த்தைகளை நடத்தி விரைவில் தீர்வினை பெற்றுத் தருமாறு கோருதல்.

உத்தேச வரவு செலவுத் திட்ட அறிக்கை மற்றும் அரையாண்டு வரவு செலவுத் திட்ட அறிக்கைகள் வெவ்வேறாக ஒவ்வொரு பிரிவுக்குமாக பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றை ஒன்று சோர்த்து தனியான விடயமொன்றின் கீழ் கணனிமயப்படுத்தும் பணியானது மேற்கொள்ளப்பட்டது. இதன் மூலம் உரிய காலத்திற்கு உத்தேச மற்றும் அரையாண்டு வரவு செலவுத் திட்ட அறிக்கைகளை அனுப்பாததும் தாமதமாக அனுப்பும் பொறுப்பாளர் தேரர்கள், பொறுப்பாளர்கள் மற்றும் பஸ் நாயக்க நிலமேக்களை தெரியப்படுத்தும் செயற்பாடானது முன்னைய காலங்களை விடவும் விரைவாக இடம் பெற்று வருவதுடன் அலுவலகப் பணிகளையும் தாமதமின்றி மேற் கொள்ளக் கூடியதாகவுள்ளது.

இவ்அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படும் நிலைய பரிசோதனைகள் மற்றும் அலுவலகப் பரிசோதனைகள் மூலம் வழி-பாட்டுத் தலங்களில் நிலவும் பிரச்சினைகளுக்கான தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் பல மேற்கொள்ளப்பட்டுள்ளன. குத்தகைக்காரர்கள் மற்றும் பொறுப்பாளர்களுடன் பேச்சு வார்த்தைகளை நாடத்தி குத்தகைப் பணத்தை அறவிடுதல் பொருட்டு விசேட நடவடிக்கைகள் பல மேற்கொள்ளப்பட்டன. விசேடமாக பதுளை கண்ணகி தேவஸ்தானம், பதுளை ரம்புக்பொத்தை ரஜமகா விகாரை மற்றும் எம்பிலிப்பிட்டிய காவந்திஸ்ஸை ரஜமாக விகாரைக்கு சொந்தமான காணிகளில் குடியேறியுள்ள சட்ட விரோத குடியேற்றகாரர்கள் மற்றும் புதிய குத்தகைகாரர்களுக்கு நீண்டகால அடிப்படையிலான குத்தகைப் பத்திரங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் இவ் வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் பதுளை கண்ணனி தேவஸ்தானத்தின் லுணுகலை மற்றும் பதுளை ரம்புக்பொத்தை விகாரையின் காலியத்தை குத்தகைகாரர்கள் பெருமளவில-ானோருக்கு குத்தகைப் பத்திரமானது பெற்றுக் கொடுக்கப்படும் செயற்பாடானது தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. குத்தகைப்பணம் செலுத்தாதிருத்தல் மற்றும் குத்தகைப்பண மேன் முறையீடு தொடர்பில் விசேட கவனம் செலுத்தி தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கு முன்னைய வருடங்களில் குத்தகைப்பணம் தொடர்பில் சமர்பிக்கப்படும் மேன்முறையீடுகளின் போது அவை தொடர்பாக கவனம் செலுத்தி குத்தகைப் பெறுமதியை குறைப்பதற்கும் திணைக்கள நடவடிக்கைகளை மேற்கொண்ட போதிலும் ,2019 மதிப்பீட்டு திணைக்களத்தினால் சிபாரிசு செய்யப்பட்ட குத்தகைப் பெறுமதிக்கு ஏற்ப, குத்தகைப் பணம் அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டதன் காரணமாக, வழிபாட்டுத் தலங்களின் வருமானத்தை அதிகரிப்பதற்கு இரத்தினபுரி, பிராந்திய அலுவ-லகத்தினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. நீண்ட கால குத்தகைப் பணத்தை பிணையாக வைத்து வங்கிகளில் கடன்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வசதிகளை ஏற்படுத்தி கொடுக்கப்பட்டதன் மூலம் தற்போது குத்தகைக்காரர்கள் பொருளாதார ரீதியில் முன்னேற்ற நிலையை அடைந்துள்ளனர். வழிபாட்டுத் தலங்களுக்கு சொந்தமான காணிகள் தொடர்பில் தீர்மானங்கள் மேற்கொள்ளும் ஏனைய நிறுவனங்களினால் அழைக்கப்படும் நிலையப் பரிசோதனைகளின் பொருட்டு எமது உத்தியோகத்தர்கள் பங்குபற்றி பிரச்சினைகளை தீர்ப்பதற்கு குறித்த நிறுவனங்களுக்கு தமது ஒத்தழைப்பை நல்கியுள்ளனர்.

நீண்ட கால குத்தகை அடிப்படையில் மொனராகலை மாவட்டத்தில் அமைந்துள்ள வத்தேகம ரஜமகா விகாரைக்கு சொந்தமான 2138 ஏக்கர் காணியானது வத்தேகம பிளான்ரேசன் நிறுவனத்திற்கு நீண்ட கால குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் காரணமாக நிகழ்காலத்தில் குறித்த பிரதேச மக்களுக்கு பல்வேறு தொழில் வாய்ப்புகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இக்கருத்திட்டத்திற்கு ஆரம்ப காலத்தில் மக்களால் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்ட போதிலும், இது தொடர்பில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டு பிரச்சனைகளை முறையாகக் கையாண்டதன் விளைவாக தற்போது இக் கருத்திட்டத்தின் மூலம் தற்போது அப்பிரதேசத்தில் சிறந்த பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இங்கு கரும்பு மற்றும் சோயா, அவரை என்பன பயிரிடப்படுவதன் காரணமாக தேசிய உற்பத்தி துறைக்கு பங்களிப்பு செய்வதற்கான சந்தர்ப்பம் பௌத்த மத அலுவல்கள் திணைக்களத்திற்கும் கிடைக்கப்பெற்றுள்ளது. இதன் மூலம் நாமும் நாட்டின் அபிவிருத்தி செயற்பாட்டின் பங்குதாரராவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இவ்அலுவலக நிர்வாகப் பிரதேசத்திற்குட்பட்ட வழிபாட்டுத் தலங்களில் நிலவும் பிரச்சனை தொடர்பில் பொதுமக்களால் மேற்கொள்ளப்படும் முறைப்பாடுகள் தொடர்பில் ஏனைய நிறுவனங்களால் முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்கு இவ்அலுவலகத்தினால் பூரண ஒத்துழைப்பு வழங்கப்பட்டுள்ளது. விசேடமாக சப்பிரகமூவா மகா சமன் தேவஸ்தானத்திற்கு சொந்தமான காணி ஒன்றில் மாணிக்க கல் அகழ்வ தொடர்பான வஞ்சனை தொடர்பில் நிதிக்குற்றப் புலனாய்வுப் பிரிவிற்கும், இலஞ்ச ஊழல் ஆணைக்குழு முன்னிலையிலும், இவ்அலுவலக அதிகாரிகள் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஆஜராகி வாக்க மூலங்களையும் அதனுடன் தொடர்புபட்ட ஆவணங்களையும் பெற்றுக் கொடுத்து திணைக்களத்தின் சார்பான மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றியுள்ளனர். அத்துடன் பல சந்தர்ப்பங்களில் நீதிமன்ற நடவடிக்கைகளின் பொருட்டும் ஆஜராகியுள்ளனர்.

